இலக்கியமும் சமுதாயமும்

பேராசிரியர்
சி. தில்லைநாதன்

தமிழ்ப்
புத்தகாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

318

இலக்கியமும் சமுதாயமும்

கட்டுரைகள்

106 X 3

பேராசிரியர் **சி. தில்லைநாதன்**
எம். ஏ. (இலங்கை), எம், லிற். (சென்னை)
தமிழ்த் துறைத் தலைவர்
பேராதனைப் பல்கலைக் கழகம்
பேராதனை
இலங்கை

University of Peradeniya
01 DEC 2021
Library

தமிழ்ப் புத்தகாலயம்
58, டி. பி. கோயில் தெரு
திருவல்லிக்கேணி, விவேகானந்தர் இல்லம்
சென்னை-600 005
தொலைபேசி : 843226

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
704346

★ இலக்கியமும் சமுதாயமும் ★ கட்டுரைகள் ★ முதற் பதிப்பு:
ஜூன், 1987 ★ விலை : ரூ 9-00

★ ILAKKIYAMUM SAMUDAYAMUM ★ ESSAYS ON TAMIL LITERATURE AND SOCIETY ★ BY PROF. C. THILLAINATHAN ★ © C. THILLAINATHAN ★ FIRST EDITION: JUNE, 1987 ★ 106 PAGES ★ 10 PT. LETTERS ★ 10.7 KG. WHITE PRINTING ★ 18X12.5 CMS. ★ BOX BOARD BINDING ★ COVER DESIGN: SREEDEVI ★ PRINTED AT: POONCHOLAI ACHAGAM, MADRAS-5 ★ TAMIL PUTHAKALAYAM, 58, T. P. KOIL ST, TRIPLICANE, ICE HOUSE, MADRAS-600 005 ★ PHONE: 843226 ★ PRICE: RS. 9-00.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

மனித உணர்ச்சிகளினதும் சிந்தனைகளினதும் செயல்களினதும் அடியாக எழும் இலக்கியமானது மனித உணர்ச்சிகள், சிந்தனைகள், செயல்களின் மீது செல்வாக்குச் செலுத்துவதுமாகும். எப்படியும் மனித சமுதாய வாழ்வினின்றும் இலக்கியத்தை வேறுபடுத்தி நோக்குதல் இயலாது. ''எல்லாக் கலைகளுள்ளும் மகோன்னதமான வாழ்க்கைக் கலைக்கு எந்தக் கலையும் பங்களிப்புச் செய்வதாகும்'' என்றார் பிரபல ஜெர்மனிய நாடகாசிரியரான பெர்டோல்ட் பிரெஷ்ட்.

கவியரசைப் புவியரசர் ஆதரித்தமைக்கான பிரதான காரணம் சமுதாயத்தில் இலக்கியம் பெற்றிருந்த செல்வாக்கே ஆதல்வேண்டும். சமுதாய, வரலாற்று நியதிகளுக்கேற்ப இலக்கிய மரபுகளும், வடிவங்களும் தோன்றியும் வளர்ந்தும் மாறியும் வந்துள்ளன. அறச்சிந்தனைகள் இன்றியமையாதவிடத்து அறநூல்களும், பக்தி இயக்கம் இடம் பெற்றபோது பக்தியிலக்கியங்களும், மறுமலர்ச்சிக் கருத்துக்கள் பரவிய போது மறுமலர்ச்சி இலக்கியங்களும் தமிழிலே தோன்றின. சமுதாயத்தினதும் காலத்தினதும் தேவைகளையொட்டி இலக்கியம் அமைவதை ஏனைய நாடுகளின் இலக்கியங்கள் வாயிலாகவும் அறியலாம். இலக்கியமோ சினிமாவோ வேறெந்தக் கலையோ மனித சமுதாயத்திற் பயனுள்ள வகையிற் ஊடுறுவுவதே சிறந்தது.

அவ்வப்போது எழுதப்பட்ட இக்கட்டுரைகளைத் தொகுத்து தற்போது நூலாக வெளியிடும் தமிழ்நாட்டின் தனிமதிப்புப் பெற்ற தமிழ்ப் புத்தகாலயத்தின் தாபகரான நண்பர் கண. முத்தையா, அக்குடும்பத்தில் ஒருவன் என்ற உரிமையுணர்வினை என்னுள் எப்படியோ வளர்த்து விட்டிருப்பதனால், அவர்களுக்கு யாங்ஙனம் நன்றி கூறுதல் சாலும்?

சி. தில்லைநாதன்.

தமிழ்த் துறை,
பேராதனைப் பல்கலைக் கழகம்,
பேராதனை, இலங்கை.
3—5—1987

01 DEC 2021
704346
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உள்ளுறை

1.	இலக்கியமும் சமுதாயமும்	5
2.	கவியரசரும் புவியரசரும்	22
3.	மரபும் மாற்றமும்	37
4.	தமிழ் இலக்கிய வடிவங்கள்	47
5.	அறநூல்கள் எழுந்தன	64
6.	இறைக் காதல்	76
7.	மறுமலர்ச்சி இலக்கியம்	88
8.	ஆசிய இலக்கியங்களின் சில பொதுப் பண்புகள்	94
9.	சினிமாவும் இலக்கியமும்	100

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியமும் சமுதாயமும்

மனிதர்கள் தம்மிடைத் தொடர்புகொண்டு வாழ முடிந்தமையினலேதான் சமுதாயம் என ஒன்று தோன்றியது. அவ்வாறு தொடர்புகொள்ளும் முயற்சியிற் பிறந்ததுதான் மொழியும். அம்மொழியைப் பயன்படுத்தி ஒருவன் இலக்கியம் செய்வது ஏனையோருடன் தன் உணர்வுகளையும் அனுபவங் களையும் பகிர்ந்துகொள்ளும் ஆர்வத்தின் அல்லது உந்துதலின் விளைவாகத்தான். பூர்வீக சமுதாயங்களில் நடனமும் கவிதையும் கலையும் மனித உழைப்போடொட்டிய சமுதாய நடவடிக்கைகளாக மிளிர்ந்து வளர்ந்தமையினைத் தெளிவாக அவதானிக்க முடியும். எப். பி. கும்மரே என்ற அறிஞர் 'நாட்டுப் பாடலும் சமுதாயப் பாடலும்' என்ற தம் நூலிற் சமுதாயமே முதலிற் கவிதை செய்தது என்பதனைக் காட்டுவர். காலப்போக்கிற் சமூக வாழ்க்கை பன்முகப்பட்டதாகவும் சிக்கலானதாகவும் மாறியபோது, கலை இலக்கியங்களும் பன்முகத் தோற்றங்களையும் தன்மைகளையும் பெற்றன. அதனலே சமுதாயத்துக்கும் இலக்கியத்துக்கும் உள்ள தொடர்பு தெற்றெனத் தெளியப்படாததாகத் தோன்றுகிறது.

சமுதாய, மானிட உறவுகளில் ஏற்பட்ட முன்னேற்றத் தைக் காட்டிலும் இயற்கையைக் கட்டுப்படுத்தும் விஞ்ஞான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சி அதிகமானதாகவும் கூடிய முக்கியத்துவம் பெறுவ தாகவும் பலவிடத்துக் காணப்படுகிறது. போட்டி மிகுந்ததும் உடலுக்கோ பொருளுக்கோ மனத்துக்கோ போதிய பாதுகாப் பற்றதுமான தற்காலத் தனியுடைமைச் சமுதாயத்தின் கைத் தொழிற் சமூக நிலைமைகள் இலக்கியத்தை முக்கிய மானிட நலன்களிலும் தொழில்களிலும் வாழ்க்கை இலட்சியங் களிலும் இருந்து வேறுபடுத்தியிருப்பதாகத் தோன்றுகிறது. நாளையைப் பற்றிய நிச்சயமின்றிப் பொருள் தேடுவதிற் போட்டி போட்டு அலையும் மனிதனைச் சிருஷ்டித்துவிட்டுள்ள சமூக அமைப்பு அத்தகைய மனிதனின் சில நேர இளைப்பாற லுக்கு ஏற்ற கலை இலக்கியங்களையும் உற்பத்தி செய்து விநியோகிக்கிறது. அன்றாட வாழ்வின் எதார்த்தங்களை மறந்து அவற்றிலிருந்து நழுவ உதவும் கலை இலக்கியங்கள் பொழுதைப் போக்கவே பயன்படுவதால் அவற்றுக்கு வேறு சமுதாயப் பணியும் உண்டோ என வினவப்படுவது வியப்புக் குரியதன்று.

சொந்தப் பணத்தால் என்னென்ன நன்மைகள் பெறலாம் என்பது எல்லாருக்கும் தெரியும். ஆனால், சமுதாயம் செம்மையானதாக இருப்பதால் என்ன நன்மைகள் விளையும் என்பதும் சமுதாயம் சீர்குலைந்திருப்பதால் என்னென்ன துன்பங்கள் தமக்கு நேரலாம் என்பதும் பலருக்குத் தெரிவ தில்லை. அந்நிலையில், அதாவது மனித சமுதாயம் சீராக அமைய வேண்டுமென்ற வேட்கை அருகிய நிலையில், இலக்கியத்தின் சமுதாயப் பங்கு புலப்படாமலே கிடக்கலாம். முக்கிய மனித, சமுதாய முயற்சிகளோடு சம்மந்தமின்றிச் சில நேர மானிட உணர்வீடுபாட்டுக்கு மட்டுமே இலக்கியம் நாடப்படுகிறபோது இலக்கியக் கோட்பாடுகளும் கலை நுணுக்கத் திறனாய்வுகளுமே பன்முகப்பட்டனவாகவும் புத்திப் பயிற்சிக்கு விருந்தளிப்பனவாகவும் தோன்றும்.

அது எவ்வாறாயினும், இலக்கிய வரலாற்றை நோக்கும் போது இலக்கியமானது சூழ்நிலைக்கும் மனித உணர்வுகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிடையிலான உறவு வெளிப்பாடுகளைக் காட்டி நிற்பதோடு, மனிதனை ஏனைய மனிதருடன் இணைய வைக்கும் தொழில், அரசு, சமயம், கொண்டாட்டம், விழா, போர் போன்ற பல சமுதாய நடவடிக்கைகளுக்கும் ஓர் அர்த்தத்தையும் அமைப்பினையும் அளிப்பதை அவதானிக்கலாம். ஒழுங்கான குடிமைச் சமுதாயத்தின் தாபகர்கள் என்று கவிஞர்களைப்பற்றி ஆங்கிலக் கவி ஷெல்லி கூறியதும் இங்கு நோக்கத்தக்கது.

ஒரு காலத்தின் அரசியற் பொருளாதாரச் சூழ்நிலைகளும், சமூக இலட்சியங்களும், சான்றோருக்கும் சாதாரண மக்களுக்கு மிடைப்பட்ட நோக்கு வேறுபாடுகளும், விழுமியங்களும் இலக்கியத்தின் உள்ளடக்கத்தையும் உருவத்தையும் நிர்ண யிப்பனவாகும். இலக்கியத்தை ஒரு காலகட்டத்தின் அல்லது பண்பாட்டின் கண்ணுடி என்பர்; சமுதாய விழுமியங்களை வெளிப்படுத்துவதும் வழிப்படுத்துவதுமென்பர்; ஒரு கால கட்டத்தின் அடியிலான மனிதனின் இலட்சிய தாகங்களைப் பிரதிபலிப்பதென்பர். பொதுவாக நோக்குமிடத்துச் சமுதாய அடிப்படையிலான நியதிகளும் விழுமியங்களும் இலக்கிய நடவடிக்கைகளை நிர்ணயிக்கும் எனலாம். ஆயினும், இலக்கிய கர்த்தாவின் செல்வாக்கும் தாக்கமும் சமுதாயத்திற் காணப் படக்கூடுமென்பதனையும் மறந்துவிடல் ஆகாது. அதே நேரத்தில் இலக்கிய கர்த்தாவும சமுதாயத்தின் எதார்த்த நிலைமைகளாற் பாதிக்கப்படும் ஒரு சமுதாய அங்கத்தவனே என்பதையும், அவனது மரபுகளும் அவனது அரசியற் பொருளாதாரச் சார்புகளும் விளக்கங்களும் அவனது நோக்கினையும் மதிப்பீடுகளையும் பெரிதும் நிர்ணயிக்கும் என்பதனையும் மறந்துவிடலாகாது.

மரபு எனும் போது, அதுவும் சமுதாயச் சார்பானதுதான். சோழர் காலம் வரை வளர்ந்த தமிழ்ச் சமுதாய இலக்கிய மரபை மறந்து விட்டுக் கவிச் சக்கரவர்த்தி கம்பனை மதிப்பிட முடியாது. மரபு என்பது கடலைப் போன்றது என்றும் தனிப் பட்டவர் ஆற்றல் என்பது அக்கடலிலிருந்து வெளிக் கிளம்பும் ஓர் அலையைப் போன்றது என்றும் கூறுவர், டி. எஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏலியட். கடலிலே சிறிய அலைகளும் உண்டு, பேரலைகளும் தோன்றும். ஆயினும், குளத்திலோ குட்டையிலோ இருந்து பேரலை பிறக்க முடியாது.

விழுமியங்களும் அனுபவங்களும் எல்லாக் காலத்திலும் ஒரே மாதிரி அமைவதில்லை. சமூக நிலைகளுக்கேற்ப அவையும் மாறுபடும்.

''பாசிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
நாரரி தேறன் மாந்தி மகிழ்சிறந்து''

என்று அழகிய மாதர் அளித்த கள்ளைக் குடித்த மகிழ்ச்சியை வியக்கிறார் சங்க காலத்து ஒளவையார்.

''இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு''

என்று பெண்களையும் கள்ளையும் சூதையும் கண்டிக்கிறார் சங்க மருவிய காலத்துத் திருவள்ளுவர்.

''நெருப்புச் சினந் தணிந்த நிணந்தயங்கு கொழுங்குறை
பருஉக்கன் பண்டையோ டூழ்மாறு பெயர
உண்கு மெந்தை''

என்று சுட்ட மென்மையான இறைச்சியையும் கள்ளையும் மாறி மாறி உண்ட சிறப்பை வர்ணிக்கின்றார் சங்க காலத்து வடம வண்ணக்கன் பெருஞ் சாத்தனார்.

''வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரென வேபுளித்த மோரும்''

என்று கத்தரித்துவட்டலும் புளித்த மோரும் உலகம் முழுதும் பெறுமெனப் பாடுகிறார் பிற்காலத்து ஒளவையார்,

இவை சமுதாய வாழ்நிலைகளையொட்டித்தான் அனுபவங்கள் தோன்றும் என்பதனையும், அனுபவ வெளியீடான இலக்கியம் கூறும் பொருளும் கையாளும் வடிவமும் மாறுபடலாம் என்பதனையும் காட்டுவன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''காலத்திற் கேற்ற வகைகள்—அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்ருய்—எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்று மில்லை''

என்று மகாகவி பாரதியார் அழுத்தமாகக் கூறியதும் இங்கு எண்ணிப் பார்க்கத் தக்கது.

இலக்கியம் எவ்வாறு சமுதாய அனுபவங்களை ஒட்டிச் செல்லும் என்பதை விளங்கிக் கொள்ளத் தமிழிலக்கிய வரலாற்றினைச் சற்றே நோக்கலாம். வீரயுகம் என வர்ணிக்கப் படும் சங்க காலத்திலே போரும் காதலும் மிகுதியாகப் பாடப் பட்டன. உலகியற் சமூக வாழ்வைத் துல்லியமாகப் பிரதி பலிக்கும் அக்காலஇலக்கியங்களிற் பிற்காலத்தனவொத்த அற நீதிக் கருத்துக்களைக் காண்டல் அரிது. திணைப் பகுப்புக் களும் சமுதாய வளர்ச்சியினை யொட்டியே அமைந்துள்ளன. தனியுடமை வளராத, வேட்டையாடி வாழ்ந்த நிலையைக் காட்டும் குறிஞ்சிக்கு உரிய ஒழுக்கம் புணர்தலாகும். மாடுகளை உடைமையாக்கி வைத்து வளர்த்த முல்லை நாகரிகத்திலேதான் மேய்ச்சலுக்கு மாடுகளைக்கொண்டுசென்று திரும்பும் கணவனுக் காகக் காத்து இருக்கும் மனைவியையும் கற்பு ஒழுக்கத்தின் ஆரம்பத்தையும் காணலாம். மாடு என்ற சொல்லே செல்வத் தையும் குறிப்பதாயிற்று. குடும்பத்தோடு மனிதன் ஓரிடத்திலே நிலையாக விவசாயம் செய்து வாழ்வதை மருதநில நாகரிகம் காட்டும். இங்குதான் சமுதாய வாழ்க்கையும் தொழிலடிப் படையிலான ஏற்றத் தாழ்வுகளும் தோன்றியிருக்க வேண்டும். நிலவுடைமையோடு செல்வம் குவிவதையும் சொத்தற்ருேர் சுரண்டப்படுவதையும் இங்கு காணலாம். நிலபுலனும் ஓய்வும் பெற்ற தலைவன் பரத்தை ஒழுக்கம் மேற்கொள்ளத் தலைவி ஊடுதல் இந்நில வழக்காக அமைகிறது.

குலங்களும் குழுக்களும் அரசுகளும் தோன்றத் தொடங்கி யிருந்த இக்காலத்திற் போர்களும் கொள்ளைகளும் மிகுந் திருந்தன. அதிகாரத்தை விஸ்தரிக்கும் போர் முயற்சிகளிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட ஈடுபாட்டினுல் அல்லது அம்முயற்சிகளுக்குச் சமூகத்தின் ஆதரவைத் திரட்டும் நோக்கினுலேதான், களிறு எறிந்து பெயர்தல் காளேயின் கடமை என்றும், கணவரும் இளம் பிள்ளேகளும் களத்திலே ஒருங்கிறந்து கிடந்தமை கண்டு பெண்டிர் இறும்பூதெய்தினர் என்றும் பாடப்பட்டிருக்க வேண்டும்.

போரின் அழிவுகளும் ஒழுக்கக் கேடுகளும் சமுதாய ஒழுங்கினேப் பாதிக்குமளவுக்கு வளர்ந்து விட்டதனுலே அற ஒழுக்கக் கருத்துக்கள் சங்கமருவிய காலத்திலே மதிப்புப் பெற்றன. கொடுப்பாரும் அடுப்பாருமின்றி ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற கூட்டம் தமிழ் மரபெனப் பேணப் படாது சமுதாயத் தேவைக் கொவ்வாதது என ஒதுக்கப் பட்டது. அன்றைய சமூக நடத்தை, ஒழுக்கம், வாழ்க்கையின் குறிக்கோள் முதலியன பரிசீலனேக்குரியனவாயின. தொல்காப்பியர் வெகு அழகாகக் கூறுவது போலப், 'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம்'. இக்காலத்திலே 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற நோக்குடன் வாழ்ந்த வணிக சமூகத்தின் ஆதரவுடன் தமிழ்ச் சமுதாயத்துக்கு ஒழுக்க மருத்துவம் செய்யப் புகுந்த சமண பௌத்த மதங்கள் தம் செல்வாக்கினேப் பெருக்கிக் கொண்டன.

அம்மதங்களுக்கெதிராகச் சமுதாயத்தைத் திருப்ப உணர்ச் சிகரமான ஓர் இயக்கம் நடத்தப்பட்டமையினேயும் அதற்குப் பொதுமக்களேப் பிணிக்கவல்ல உத்திகள் கையாளப்பட்ட மையினேயும் சைவ வைணவ சமயங்களின் சார்பான அவ் வியக்கத்தில் ஈடுபட்டோர் தமக்கேற்பட்ட துன்பங்களேச் சமாளித்த துணிவினேயும் பல்லவர் காலத் தமிழிலக்கியம் காட்டும். சமுதாயத்தைச் சார்ந்துநின்று அதன் ஆதரவை ஈட்டச் சமுதாய நிகழ்ச்சிகளேயும் பழக்க வழக்கங்களேயும் அடியொற்றிப் பக்தி இயக்கப் பாசுரங்கள் பாடப்பட்டமையும் இங்கு அவதானிக்கக் கூடியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழிலக்கிய வரலாற்றிற் பொற்காலம் எனப் போற்றப் படும் சோழப் பேரரசுக்காலம் ஆங்கில இலக்கிய வரலாற்றில் எலிசபெத் மகாராணி காலத்தோடு ஒப்பிடப்படும். எலிசபெத் கால இக்கியப் போக்கினை ஆராய்ந்த பெடரி கிறம்வெல் பொற்காலங்கள் எனப் பின்னுற் கொண்டாடப்படும் காலங் களுக்குரிய பொதுவானதோர் இயல்பு, அவை வழக்கத்துக்கு மாருனதோர் ஒருமைப்பாட்டுணர்வினைக் கொண்டிருத்தலே என்பர். அக்காலத்தைப் பற்றி ஆராய்ந்த மற்றுமோர் அறிஞர் அக்காலத்தில் முதன் முதலாக இங்கிலாந்து பேரரசு அமைக்கும் ஆவலினுல் உந்தப்பட்டது என்றும் நாடு பிடிக்கும் ஆத்மார்த்த உணர்வும் சுயபெருமை தேடும் ஆவலும் இலக்கி யத்தின் உந்து சக்திகளாக விளங்கின என்றும் உரைப்பர். சோழர் காலத்தைப்பற்றி ஆராய்ந்த கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார், ''தென்னிந்தியாவின் வரலாற்றிலேயே சோழப் பேரரசு அமைக்கப்பட்டது மிக முக்கியமானதொரு நிகழ்ச்சி யாகும். கிருஷ்ணை நதிக்குத் தெற்கேயுள்ள நாடு முழுவதும் வலிமையானதொரு மத்திய அரசின் கீழ்ச்சோழரால் முதன் முத லாகக்கொண்டு வரப்பட்டது'' என்பர். 'உயிரை விற்றுறு புகழ் கொள வுழல்பவர்' என்று செயங்கொண்டானும், 'இன்றுளார் நாளைமாள்வர் புகழுக்கு மிறுதியுண்டோ' என்று கம்பனும் பாடிய சோழர்காலத்திலும் பேரரசு அமைக்கும் ஆவலும் புகழ் தேடும் வேட்கையும் மிகுந்திருந்தமை சொல்லாமலே விளங்கும். பெருஞ்சாதனைகளின்பாற் சமுதாயத்தின் கவனம் ஈர்க்கப்பட்டி ருந்த அக்காலத்தின் இலக்கியங்களும் அவற்றையே பிரதி பலித்தன.

'மூவேந்து மற்றுச் சங்கமும்போய் பதின்முன் ரேடெட்டுக்
கோவேந்தரு மற்று மற்றொரு வேந்தன் கொடையு மற்றுப்
பாவேந்தர் காற்றி லிலவம் பஞ்சாகப் பறந்த'

நாயக்கர் காலத் தமிழிலக்கியம் உலகியல் வாழ்வில் ஏற்பட்ட விரக்தியினையும் அதன் விளைவான பழமை போற்றும் பண்பினை யும் சமய விசாரச் சார்பினையும் பிரதிபலிக்கிறது. நிலைமைக் கேற்ற மாற்றங்களுக்கும் ஆக்க முயற்சிகளுக்கும் சமுதாய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமை தூண்டுதலும் இடமும் தருவதாக அமையாதபோது, இலக்கியம் உலகியற் பிரச்சினைகளிலிருந்தும் ஒழுங்கீனங்களி லிருந்தும் தப்பியோடிப் பிற சரண் தேடும் என்பதை இக்காலத் திலக்கியம் காட்டும். இக்காலத்துச் சமுதாயத்தின் அபிலாசை களும் ஆட்சியாளரின் அபிலாசைகளும் ஒருமுகப்படவில்லை. மரபாதிக்கமும் அதிகாராதிக்கமும் மிகுந்து தேங்கிய சமுதாய அமைப்பிற் சிற்பக்கலைதான் சிறக்கமுடியும் என்பதற்கும் இக்காலம் சான்ருகும்.

நாயக்கர் காலத்தின் பிற்பகுதியில், உலகியலை ஒதுக்கி நீண்டகாலம் இருக்க முடியாதென்பதற்குச் சான்ருகப், புதிய சமூகப் பிறழ்வைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிற் பொது மக்கட் சார்பான குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடக நூல்கள் எழுந்தன. அவையும் சமயச் சார்பானவையே. ஆயினும், அவை சமுதாய வாழ்வில் ஒரு பிடிப்பினையும் கலகலப்பினையும் ஏற்படுத்தியத்துடன் சமயத்தைச் சமுதாய வாழ்வோடு இணைத்தன. அக்காலத்து அதிகார வர்க்கத்தினரைக் கிண்ட லுக்கு இடமுக்கியும், சிருங்காரச் சுவையினை நல்கியும் விரக்தி கொண்டிருந்த பொதுமக்களுக்கு ஒருவகையான ஆசு வாசத்தை வழங்கின. அது அன்றைய சமுதாயத் தேவையாக இருந்ததென்பது சொல்லாமலே போதரும். சிங்கள இலக் கியத்தை எடுத்து நோக்கினுல், 16ஆம் நூற்ருண்டில் வீழ்ச்சி யுறும் காலகட்டத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அரச தலை வர்களுக்கு இயந்திரகதியிற் துதிபாடிய அவ்விலக்கியமும் 17ஆம் 18ஆம் நூற்ருண்டுகளிற் பொதுமக்கட் சார்புடைய தாகவும் சிருங்காரச் சுவையுடையதாகவும் மாறத் தலைப் பட்டமை புலனுகும்.

மேல்நாட்டவர்கள் வந்து தமது சமயத்தையும் கலாசாரத் தையும் பரப்ப முற்பட்டபோது சுதேசிகள் பலர் மேல்நாட்டு மோகத்தாற் சொந்தப் பண்பாட்டினைப் புறக்கணித்து நின்றனர். அக்காலத்திற் சமய மறுமலர்ச்சி இயக்கங்கள் சமுதாயத்தேவைகளாய் அமைந்தபோது, இலக்கிய வளர்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியும் அவற்றை யொட்டி நிகழ்ந்தது. சைவத்தைப் பாதுகாக்கவும் அந்நியக் கலாசார ஊடுருவலைத் தடுக்கவும் ஆறுமுக நாவலர் மேற்கொண்ட முயற்சிகளும், அக்கால இலக்கிய வளர்ச்சிக்கு அவரே பலவகைகளில் உந்து சக்தியாக மிளிர்ந்தமையும் எண்ணிப்பார்க்கத் தக்கவை. சமுதாயத்தின் தேவைக்கமைய இயங்கிய காரணத்தினலேதான் சமய, இலக்கியத் துறைகளோடு நின்றுவிடாது ஆறுமுகநாவலர் பஞ்சமும் கொடுங்கோன்மையும் பாரபட்சமும் கண்டவிடத்துச் சினந்தெழுந்தார். ஆறுமுகநாவலரும், தென்னிலங்கையிற் பௌத்தப் பண்பாட்டைப் பாதுகாக்கத் தோன்றிய அநாகரிக தர்மபாலரும், இஸ்லாமியப் பண்பாட்டைப் பாதுகாக்க விழைந்த சித்தி லெவ்வையும் இன்று பின்னேக்கிப் பார்க்கும் போது ஒரோவிடத்துத் தீவிரவாதிகளாகத் தென்படலாம். ஆனல் அவர்கள் வாழ்ந்த பகைப்புலத்தில் வைத்து நோக்கும்போது சமுதாயத் தேவைகளை ஒட்டிய அவர்களது முயற்சிகளும் இலக்கியப் பங்களிப்புக்களும் விதந்துரைக்கத் தக்களவு முற்போக்கானவை.

சமீபகாலச் சமுதாயப் போக்குகள் சில இலக்கியத்தை எவ்வாறு பாதித்துள்ளன என்பதை இலகுவாக விளங்கிக் கொள்ளச் சில ஐரோப்பிய உதாரணங்களை நோக்குதல் சாலும். 17ஆம் நூற்றுண்டில் ஐரோப்பாவில் நிலமானியச் சமுதாய அமைப்பு சிதறுண்டது. கைத்தொழில், வர்த்தகம், புதிய நகரப் பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சியோடு மத்திய தர வர்க்கம் தன் ஆதிக்கத்தை விஸ்தரிக்கலாயிற்று. முடியாட்சி அமைப்பே அரசியலாதிக்கம் செலுத்தியதாயினும், இக்காலத்திற் புதியதொரு சமயச்சார்பற்ற சமுதாயப் பிரக்ஞைக்கான போராட்டம் தொடங்கிவிட்டது. மரபாதிக்கத்துக்கு ஆட்பட்டிருந்த சமுதாயம் கட்டுப்பாடுகளைக் களைந்தெறியத் தலைப்பட்டு நின்றது. இச்சமுதாய நிலைமைகளின் பிரதிபலிப்புக்கள் இலக்கியத்தில் எவ்வாறு காணப்படுகின்றன என நோக்குதல் சுவையுடைத்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிலாந்தின் மத்தியதர வர்க்கம் உறுதிபெறுவதற்கு முன், துணிவோடு தீர நடவடிக்கைகளை மேற்கொண்ட வணிகப் பொருளாதார அமைப்பில் வாழ்ந்தவர் சேக்ஸ்பியர். அவரது நாடகங்களிலே அன்று வளர்ந்துவந்த தனி நபர் வாதப் போக்கையும், ஐரோப்பிய மறுமலர்ச்சியின் விளைவான சமயச் சார்பற்ற பாங்கினையும் காணலாம். தனி நபர்கள் தங்கள் தேவைகளுக்கு ஏற்ப உலகினை நோக்குவதையும் சமுதாயத்திலும் பார்க்கத் தனி நபர்களுக்குக் கூடிய முக்கியத் துவம் தரப்படுவதையும் சேக்ஸ்பியரது நாடகங்களில் அவதானிக்கலாம். அன்று சமயச் சார்பற்ற தலைமை அதிகாரத்தைச் சமுதாயத்துக்கு ஏற்புடைத்தாக்கும் தேவை இருந்ததாலே தகுதிவாய்ந்த ஆட்சித் தலைவர்களின் முக்கியத்துவத்தையும் சேக்ஸ்பியர் வலியுறுத்துகின்றார்.

சேக்ஸ்பியர் வாழ்ந்த அதே காலத்தில் ஸ்பெயினில் வாழ்ந்தவர் செர்வான்ரிஸ். ஸ்பெயின் நாடு நிலமானிய அமைப்பிலிருந்து பூரணமாக விடுபட்டு முதலாளித்துவப் பொருளாதார அமைப்பினை ஏற்படுத்தமுடியாது திண்டாடிக் கொண்டிருந்தது. இந்நிலையில், இறந்த காலத்துக்கும் எதிர்காலப் பிரசவ வேதனைக்குமிடையே தவித்த ஒரு சமுதாயத்தைச் செர்வான்ரிஸ் தன் நாவல்களிலே பிரதிபலிக்கின்றார். பாதுகாப்பின்மை உணர்வும் சமூக அந்தஸ்து, ஒழுக்கம் முதலியன பற்றிய கோட்பாட்டு ஐயங்களும் சமுதாயத்தை ஆட்கொண்டிருந்தமையும் அவரது நாவல்களிலே தெளிவாகும். ஆயினும், அக்காலத்தைச் சேர்ந்த ஏனைய ஸ்பானிய எழுத்தாளர்களோடு ஒப்புநோக்கிப் பார்க்கும்போது சமுதாய மாற்றத்தைக் கூடுதலாக வரவேற்றவர் செர்வான்ரிஸ். அவருடைய பிரசித்திபெற்ற கதாநாயகனான டொன் குயிக்சொற் ஒரு நிலமானியப் பெருமகனாயிருந்தும் அவனது இலட்சியங்களும் நோக்குக்களும் சமயச்சார்பின்றியும் மனிதாபிமானம் தழுவியும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

பதினேழாம் நூற்றாண்டிற் பிரான்சில் வாழ்ந்த அந்நாட்டின் புகழ்பூத்த இன்பியல் நாடகாசிரியரான மோலியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலச் சமுதாயத்திற் காணப்பட்ட சீமான்களேயும் வர்த்தகப் பெருமக்களேயும் சட்டவல்லுனர்களேயும் டாக்டர் களேயும் அவர்தம் மனேவியரோடு சுவைபடச் சித்திரிக்கிருர். மத்தியதர வர்க்கம் செழித்து வளர்ந்தமையினேயும் தனிநபர் சுதந்திரம் மிகுந்து காணப்பட்டமையினேயும் பிரதிபலிக்கும் அவரது நாடகபாத்திரங்கள், தாம் அவதானித்தவற்றுக்கும் பரிசீலித்து அறிந்தவற்றுக்கும் புறம்பானவற்றைப் பிறர் ஏற்றுக்கொள்கிருர்கள் என்பதற்காக ஏற்றுக்கொள்வதில்லே, மரபாதிக்கத்துக்கு ஆட்பட்டிருந்த சமுதாயம் கட்டுப்பாடுகளேக் களேயத் தொடங்கிய அந்த மாறுதல் நிகழ்ந்த காலகட்டத்துப் பூர்சுவா வாழ்வை மோலியர் சித்தரித்த விதமும் சமூகத்திற் காணப்பபட்ட ஒழுக்கப் பிறழ்வுகளே அவர் கிண்டல் செய்த சிறப்புமே அவரது நாடகங்களேப் பிரசித்திபெற வைத்தன.

ஐரோப்பாவின் சமூக பொருளாதாரத் துறைகளிற் கடும் போட்டிகள் நிகழ்ந்த 19ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் நோர்வேயில் வாழ்ந்த பிரபல நாடக ஆசிரியரான இப்சன் படைத்துள்ள பாத்திரங்கள் போட்டியிடும் ஆற்றல் மிகுந்தவை யாக விளங்குகின்றன. அப்பாத்திரங்கள் எட்டிய வழிகளே எல்லாம் கைக்கொண்டு வெற்றி ஈட்டவும் சுய இன்பத்தைப் பெருக்கவும் முனேந்து நிற்கின்றன. தொழிற் துறைப் போட்டா போட்டிகளேப் புலப்படுத்தக் கையாளப்படும் வார்த் தைகளே கணவன் மனேவியருக்கு இடையிலான போட்டிகளேப் புலப்படுத்தவும் கையாளப்படுகின்றன. தங்கள் தனித்துவ உரிமையினேப் பேணவும் மகிழ்ச்சியினேப் பெருக்கவும் முயலும் பாத்திரங்கள் அம்முயற்சியிலே தம்மைச் சார்ந்தோருக்கு விளேவிக்கப்படும் நஷ்டங்களேக்கூட நியாயப்படுத்தும் தன்மை யும் அவதானிக்கத்தக்கது. அன்று கொடிகட்டிப் பறந்த மத்தியதர வர்க்கத்தின் நடவடிக்கைகளே ஆயவும் மதிப்பிடவும் இப்சனின் சமுதாய உணர்வே காரணமாயிற்று எனலாம்.

இப்சன் காலத்தில் நோர்வேயில் வாழ்ந்த இன்னெருவகை இலக்கிய கர்த்தா நட்ஹம்ஸன். சுய ஆசைகள் நிறைவேருமை யின் விளேவான ஏமாற்றத்தையும் வெறுப்பையும் அவரது

01 DEC 2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவல்கள் பிரதிபலிக்கின்றன. சமகாலக் கைத்தொழில், நகர வாழ்க்கை முறைகளை விரக்திகள் மலிந்தவையென வெறுத்த ஹம்ஸன் காட்டிய தீர்வு மார்க்கம் இயற்கையோடு ஒட்டிய வாழ்வுக்கு மனிதன் திரும்ப வேண்டும் என்பதாகும். சமுதாய சூழ்நிலைகளுக்கேற்ப இலக்கிய கர்த்தாக்களின் இயற்கை பற்றிய நோக்கும் மாறுபடுவதும் இங்கு துலக்கமாகிறது. மறுமலர்ச்சிக் காலத்திலே மனித நடவடிக்கைகளுக்கும் முயற்சிகளுக்கும் வாய்ப்பான களமாகவும் தூண்டுகோலாகவும் நோக்கப்படும் இயற்கை, விரக்தி மிகுந்த நேரத்திற் சமுதாயத்திலிருந்து நழுவி வாழ்வதற்கு உகந்த ஒரு மாற்றிடமாக நோக்கப்படுகிறது. மனிதாபிமானமும் சரியான சமுதாய விளக்கமும் வாய்க்கப்பெருத நட்ஹம்சனுக்கு ஒரு சமுதாய அமைப்பின் மேல் ஏற்பட்ட விரக்தி மனிதன் மீதும் மானிட சமுதாயத்தின் மீதும் அவனை நம்பிக்கை இழக்க வைத்தது. உழைப்பாளரையே அவன் வெறுத்தான். காட்டையும் கடலையுமே இயற்கையெனக் கொண்டு மனித சமுதாயத்தை வெறுத்த நட்ஹம்ஸன் இறுதியில் நாஜிகளின் அணியிற் சேர்ந்து நாஜி ஜெர்மனியின் நோர்வே ஆக்கிரமிப்புக்கு வரவேற்புக் கூறி நின்முன். தனிநபர் வாதமும் எல்லையற்ற போட்டிகளும் நெருக்கடிகளும் மிகுந்த ஒரு சமுதாயம் எத்தகைய இலக்கிய கர்த்தாக்களை உருவாக்கக் கூடும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக நிற்பவன் நட்ஹம்ஸன்.

அதன் பல்வேறு துறைகளும் நேசபூர்வமாக இணைந்து ஒரு முகப்படாததும், நெருக்கடிகளும் எதிர்காலத்தைப்பற்றிய நிச்சயமின்மையும் மிகுந்ததுமான ஒரு சமுதாயத்தில் இலக்கிய கர்த்தா பீதிகளுக்கும் மனப்பிராந்திகளுக்கும் ஆட்படலாம். அதனுல் அவன் உள்ளத்தில் உறுதியற்றவனுகவும், சமுதாய மதிப்பீடுகளை அல்லது சமுதாய விழுமியங்களைத் தேர்வதில் ஊசலாட்டமுடையவனுகவும், ஒழுக்கலாறு பற்றிய தெளிவான நோக்கற்றவனுகவும் ஆகநேரும். அத்தகைய இலக்கிய கர்த்தாக்கள் அன்ருட வாழ்வானுபவங்களில் இருந்து நழுவ உதவும் சமுதாயப் பிரக்ஞை அற்ற இலக்கியங்களைப் படைக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம். அல்லது சமுதாயத்தோடு ஒத்திசையாத தனிநபர்ப் போக்குகளுக்கு முக்கியத்துவம் தந்து அத்தகைய தனிநபர் நடவடிக்கைச் சுதந்திரத்துக்கு வக்காலத்து வாங்கி நிற்கலாம். எவ்வாருயினும், பொதுவாக நோக்குமிடத்து, அவ்வகை எழுத்தாளர் இலக்கியத்துக்கு ஒரு சமுதாயப் பணி உண்டென் பதைப் புரிந்தேற்றுக் கொள்ளத் தயங்குவர் எனலாம்.

இலக்கியத்துக்குச் சமுதாயப்பணி உண்டென்போர், சமுதாயம் எழுத்தாளனுக்காக இல்லை என்றும் எழுத்தாளனே சமுதாயத்துக்காக என்றும் கூறுவர். அக்கருத்தினை மறுப்போர் 'கலை கலைக்காகவே' என்ற கோட்பாட்டைப் பற்றி நிற்பர். முன்னையவர் சமுதாயப் பிரக்ஞை சிறக்கவும் சமுதாய ஒழுங்கு செம்மையுறவும் இலக்கியம் உதவ வேண்டும் என்பர். பின்னையவர் இன்னென்றுக்குப் பயன்படுவது இலக்கியத்தின் மதிப்பினை நலிக்கும் என்பர்.

ஆனால், கலை கலைக்காகவே என்னும் கோட்பாடும் குறிப் பிட்ட ஒருவகைப் பகைப்புலத்திலே அல்லது நிலைப்பாட்டின் அடியாகவே அழுத்தம் பெறுவதாய்த் தெரிகிறது. சமுதாய நடவடிக்கைகளிலும் பிரச்சினைகளிலும் இலக்கிய கர்த்தாக்கள் சில காலகட்டங்களில் ஆர்வம் மிகுந்து நிற்பதனையும் சில காலகட்டங்களில் ஆர்வம் இழந்து நிற்பதனையும் அவதானிக்க லாம். அதனை இலகுவாக விளங்கிக் கொள்ள ரஷ்யக் கவிஞன் புஷ்கின் நல்லதோர் உதாரணமாவான். முதலாம் அலக்ஸாண்டரின் ஆட்சிக் காலத்தில் மக்களின் விடுதலை வேட்கையை வெளியிட்ட அக்கவிஞன், முதலாம் நிக்கொலஸ் காலத்திற் கலை கலைக்காகவே என்ற கொள்கையைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டான். நிக்கொலஸின் ஆட்சிக் காலத்திற் சான்ருேர் களையப் பட்டமையும் புஷ்கின் கடுமையான கண் காணிப்புக்கு உட்படுத்தப் பட்டமையும் இங்கு மனங்கொளத் தக்கவை. ஆக்க சுதந்திரம் நேரடியாகக் கட்டுப்படுத்தப் படுவது போலவே, சமுதாயத்தின் ஆதிக்க நலன்களாலும் கட்டுப்படுத்தப்படலாம். எவ்வாருயினும், சமுதாய முயற்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடன் எழுத்தாளன் இசைவற்று நிற்கும் போது இலக்கியத்தின் உள்ளடக்கத்திலும் சமுதாயத்திலும் அவனது ஆர்வம் குன்றும் போலும். அரச நீதியிலும் சமுதாய ஒழுக்க பலத்திலும் நம்பிக்கை இழந்த நாயக்கர் காலத்துத் தமிழ்ப் புலவர் பலர் பொருட் சிறப்பினை அசட்டை செய்த வெறும் சொல்லலங்கார அணியலங்காரச் செய்யுட்கள் மூலம் தம் வித்துவத் திறனை வெளிக்காட்டக் கடும் முயற்சிகளை மேற்கொண்டதும் இங்கு நினைவுக்கு வருவதாகும். கலை கலைக்காகவே என்பதும் மானிடத்தைப் பாடோம் என்பதும் தம்முள் ஒற்றுமையுடைய கோஷங்களே.

அது எவ்வாருயினும், இலக்கியம் என்பது எதையாவது வெளியிடுவதாகும். யாருக்கு எதை எவ்வூடகத்தின் வாயிலாக எவ்வாறு வெளியிடுவது என்பதைச் சமுதாயத்தையும் காலத்தையும் புறக்கணித்து விட்டு நிர்ணயிக்க இயலாது. எழுத்தாளர்கள் முன்னுக்குப் பார்த்தாலும் சரி; பின்னுக்குப் பார்த்தாலும் சரி, குறிப்பிட்ட ஓர் இடத்தில் நின்றுதான் பார்க்க வேண்டும். சமுதாயத்தோடு இணங்கிஞலும் சரி; இணங்காவிட்டாலும் சரி, இலக்கியத்தின் உயிர் நாடியாகிய அனுபவம் பிறப்பது வாழும் சமுதாயத்தின் வழியாகவே. மனிதன் பிறப்பதும் வளர்வதும் உழல்வதும் மகிழ்வதும் வாழ்வதும் மாள்வதும் ஒரு சமுதாயத்திலேயே. இலக்கியம் சமுதாயத் தொடர்பின்றிச் சுத்த சுயம்புவாக இயலுவதென்ருல் தொல்காப்பியர் வகுத்த இலக்கண வரம்பு அல்லது சங்கத் தமிழ் மரபு என்றைக்கும் பேணப்பட்டிருக்க வேண்டும். கையாளப்படும் கருத்துக்கள் மட்டுமன்றி மொழியும் உத்திகளும்கூடக் காலத்துக்குக் காலம் மாறுபடுவது ஏன்?

சித்தர் பாடல்களாயினும், அவை மனித சமுதாயத்துக்கு அர்த்தமுள்ள ஏதாயினும் கருத்தையே பெரும்பாலும் வெளியிடும்.

''கோயிலாவ தேதடா குளங்களாவ தேதடா
கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே
கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சிவவாக்கியர் பாடல் சடங்கு சம்பிரதாய ஆதிக்கத்துள் மூழ்கி மனத்தூய்மையினைக் கவனிக்காதிருந்த ஒரு சமுதாயத்தை நோக்கியே கூறப்பட்டதாதல் வேண்டும்.

மனிதன் ஒரு சமுதாய அமைப்பின் அங்கம் என்ற உணர்வும் தெளிவும் அழுத்தம் பெற்றுள்ள இக்காலத்து இலக்கியங்களின் சமுதாயப் பிரக்ஞையும் சமுதாய நோக்கும் எளிதில் இனங்கண்டுகொள்ளத் தக்கவை. சமுதாயத்தைச் சீர்திருத்தவும் ஒழுக்கங்களைப் பேணவும் நாவல்களை எழுதிய வேதநாயகம்பிள்ளை, சித்திலெவ்வை மரைக்கார் முதலியோர் உலகத்துக்கொரு புதுமையாக ஒப்பிலாத சமுதாயம் காண விழைந்த மகாகவி பாரதியார், தமிழ்நாட்டு மக்களை வீரர் களாகவும் ஒழுக்க சீலர்களாகவும் ஆக்கவேண்டுமென்று சிறு கதைகளை எழுதிய வ. வே. சு. ஐயர், 'பொழுதை யாரும் போக்க வேண்டியதில்லை, அதுதானாகவே போகும்' என்று கூறிவிட்டுச் சமுதாய சீர்திருத்தக் கருத்துப் பிரசாரத்துக்குக் கதைகளை எழுதிய இராஜகோபாலாச்சாரியார் முதல் சமுதாயத்தின் அமைப்பினையும் அதன் விழுமியங்களையும் மாற்றும் வேட்கையோடு இன்று எழுதும் பல எழுத்தாளர் வரை பலரிலும் அது தெளிவாகும். புனைகதையினைப் பொறுத்த வரை அதன் கருவினை அமைப்பதற்கும், சம்பவங்களை வர்ணிப்பதற்கும், கதாமாந்தர் உறவுகளைச் சித்திரிப்பதற்கும், தேர்ந்த மதிப்பீடுகளுக்கு அழுத்தம் தருவதற்கும் அடிப்படை யாக அமைவது மனித சமுதாயமும் அதன் பிரச்சினைகளுமே.

கற்பனை உலகில் இலயித்து மூழ்குபவர்களும் தாம் வாழும் சமுதாயப் பிரச்சினைகளிலும் ஊழல்களிலும் கொண்ட விரக்தி காரணமாகவே அதனை ஒரு புகலிடமாகக் கொள்வர் எனல் சாலும். கற்பனுலோகங்களையும் இலட்சிய நாடுகளையும் சித்திரித்தவர்கள், கம்பனாயினும் பிளேட்டோவாயினும் தாம் வாழ்ந்த சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டே குறை களை அகற்றியும் நிறைகளைக் கற்பனை செய்தும் கூறினர். கற்பனைதானும் சூனியத்திற் பிறக்காது என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்திற் குறைகள் காணப்படும் இடத்து இலக்கிய கர்த்தாக்கள் அவற்றை ஒழிக்கும் இயக்கத்தில் இறங்கலாம் அல்லது விரக்திகொண்டு நழுவி வேறு புகலிடம் தேடலாம் அல்லது குறையற்ற நிறைவைக் கற்பனை செய்து திருப்தியுற லாம் அல்லது குறைகளை அம்பலப்படுத்தலாம். அது இலக்கிய கர்த்தாவின் இயல்பையும் நிலைப்பாட்டையும் மட்டுமின்றிச் சமுதாயத்திலுள்ள வாய்ப்புக்களையும் அதன் ஓங்கிய நலன் களையும் பொறுத்தது.

ஆயினும், சமுதாயத்தின் சுயசரிதை என வர்ணிக்கப் படுமளவுக்கு இலக்கியம் சமுதாயத்தினின்று தோன்றுவது. அதுமட்டுமன்று, சமுதாயத்தை மாற்றவும் மேனிலைப் படுத்தவும் உதவும் ஒரு சாதனமாகவும் பயன்படத்தக்கது. அதனைச் சமுதாயம் பயன்படுத்தாது விடல் சாலாது. இத் தருணத்திற் காத்திரமான பயனுள்ள இலக்கியப்படைப்புக் களைப் பொதுமக்களிடைக் கொண்டு செல்வதில் எதிர்ப்படும் பிரச்சினைகளும் எண்ணிப் பார்க்கப்பட வேண்டியவை. இந் நாட்டின் சமூகநோக்குள்ள எழுத்தாளருக்கும் சமுதாயத் துக்கும் இடையேயுள்ள இடைவெளியினை அகற்ற இருபக்கங் களிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். அப்போது தான் சமுதாய நோக்குடையனவையாக அமைவதோடு நில்லாது இலக்கியங்கள் விசாலமான சமுதாயத்தைச் சென்றடையவும் முடியும்.

இன்றைய காலகட்டத்தில் மக்களோடு தொடர்புபடுத்தப் படாத இலக்கியத்தைப்பற்றி எண்ணிப் பார்த்தல் இயலாது. இலக்கியத்தினைச் சமுதாயத்தைச் செழுமைப்படுத்துவதாகக் கொண்டாலும் சரி. தனி மனித உணர்வுகளைச் செழுமைப் படுத்துவதாகக் கொண்டாலும் சரி அது சமுதாயத்தைச் சென்றடைய வேண்டும். சமுதாயம் செம்மையும் முன்னேற்ற மும் அடைய வேண்டுமென்றும், அதற்கு இலக்கியம் உதவ வல்லதென்றும் கருதும் இலக்கிய கர்த்தா சமுதாயத்துக்கு அவசியமும் அர்த்தமும் பொருந்தியதை ஏற்ற ஊடகத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயிலாகச் சொல்லவே முனைவான். பொருத்தமான மொழி நடை, வடிவம், யாப்புப் போன்றவற்றைத் தேர்ந்தெடுப்பது இன்றியமையாதது ஒரோ வழிப் பழைய வரம்புகளைக் கடக்க வேண்டியும் புதிய வழிமுறைகளைக் கண்டு பயன்படுத்த வேண்டியும் நேரலாம். கணியன் பூங்குன்றனும் திருவள்ளுவரும் இளங்கோவும் மாணிக்கவாசகரும் கம்பரும் பாரதியும் பரந்துபட்ட மக்கட் சமுதாயத்துடன் தம் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளப் பொருத்தமான வழிமுறைகளைக் கையாண்டதைத் தமிழ் இலக்கிய வரலாறு தெளிவுறுத்தும்.

மொழி நடையும் வடிவமும் ஒருபுறமிருக்க, ஒரு இலக்கிய கர்த்தா கையாளும் பொருளும் கால, உலக இயல்புகளோடு சம்பந்தப்பட்டதாகவும், அர்த்தமுடையதாகவும் இருத்தல் அவசியமாகும். 'கவிதைத் தலைவி' என்ற தனது கவிதையில் மகாகவி பாரதி, உயிரிலாச் செய்திகளுக்கு உயிர் கொடுப்பது பற்றியும் ஒளியிலாச் செய்திகளுக்கு ஒளி தருவதுபற்றியும் மட்டுமன்றிச் செய்திகளைப் பயன்நிறை அனுபவமாக்குவது பற்றியும் இலௌகீக வாழ்க்கையிற் பொருளினை இணைப்பது பற்றியும் பேசுகின்றான். ஏனெனில் அர்த்தமோ சம்பந்தமோ அற்றவற்றிற்கும் இலேசில் ஈடுபட முடியாதவற்றிற்கும் ஒரு சமுதாயம் செவி சாய்ப்பதென்பதும் கிளர்ந்தெழுவதென்பதும் சாத்தியமன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியரசரும் புவியரசரும்

''ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் நிலவரை.''

எதிர்த்து வந்த மாற்றரசரைப் போர்க்களத்தின் கண்ணே தோற்கடிக்காவிட்டால் இவ்வாறு நிகழ்வதாக என்று வஞ்சினம் கூறினன், சங்ககாலத்துப் பாண்டிய அரசனை தலையானங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். புலவர்களாற் புகழப்படுவதைத் தமிழரசர்கள் பெருமையாகக் கருதினர் என்பதையும், புலவர்களாற் போற்றப்படாமையை அவ்வரசர் இழிவாகக் கருதினர் என்பதையும் மட்டுமன்றித் தமிழகத்திற் புலவருக்கிருந்த பெருமதிப்பினையும் இப்பாடல் புலப்படுத்தும்.

பிற்காலத்திலும் தமிழக மன்னர்கள் புலவரைப் புரந்தும் போற்றியும் வந்திருக்கிறார்கள். இதனைப் பாண்டியனும் தேவியும் கம்பருக்குப் பல்லக்குச் சுமந்ததாக நிலவும் வரலாறு முதலியவற்றால் அறியலாம். தமிழ் நாட்டிற் பேரரசு நிறுவிய சோழர் தங்கள் அரசவைகளிற் புலவர்களை ஆதரித்தும் கௌரவித்தும் வந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பாடுங் கவிப்பெரு மாஒட்டக் கூத்தன்
பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்கசோழனென் றேயெனைச்
சொல்லுவனே''

என்று இரண்டாங் குலோத்துங்க சோழன் பாடிப் பெருமைப் பட்டதாக நிலவும் வரலாறு ஊன்றி நோக்கத் தக்கது. புவிச் சக்கரவர்த்தியாகிய குலோத்துங்கன் தனது அவைக்களப் புலவரான ஒட்டக்கூத்தரை மட்டுமின்றி இன்னும் பல புலவரை ஆதரித்தும் பாதுகாத்தும் வந்தவனென்பதைக் 'குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்' என்ற நூல் வழியாகவும் அவ்வரசனுடைய கல்வெட்டுக்கள் மெய்க்கீர்த்திகள் வாயிலா கவும் அறிந்து கொள்ள முடியும். சோழப் பேரரசுக் காலத்திற் புலவர்களை ஆதரித்தது இவ்வேந்தன் மட்டுமன்று. ஏனைய அரசர்களும் புலவர்களை ஆதரித்தும் கௌரவித்தும் வந்தனர். பல தமிழ் நூல்கள் இச்சோழர்களுடைய பேராதரவினுல் இயற்றப் பட்டவையாகும்.

சங்க கால முதற் கொண்டே அரசர்களும் ஏனைய ஆட்சித் தலைவர்களும் புலவர்களை ஆதரித்து வந்திருக்கிருர்கள். தங்களை ஆதரித்தவர்களைப் புலவர்கள் தங்கள் இலக்கியப் படைப்புகளிலே போற்றியிருக்கிருர்கள். இதனுற் புலவர்களை ஆதரித்த தலைவர்கள் சரித்திரமும் புலவர்களது சரித்திரமும் பின்னிப் பிணைந்தேயுள்ளன. தமிழ் அரசர்கள் மட்டுமன்றிச் சமுத்திரகுப்தன், சந்திரகுப்தன் முதலாய வடநாட்டு அரசர் களும், வேல்ஷ் நாட்டு அரசர்களும் வேறு பல நாட்டரசர்களும் புலவர்களை ஆதரித்து வந்திருக்கின்றுர்கள். கலைகளையும் கல்வியையும் இலக்கியத்தையும் வளர்க்கும் பொறுப்பு மன்னர் களுடையதென்று முடியாட்சிக் காலத்திற் கருதப்பட்டமையினுல் அவர்கள் தமது ஓய்வு நேரத்தில் அவைப் புலவர்களின் செய்யுட்களைச் செவிமடுத்தனர். சங்க காலந்தொட்டே அரசவைகளிற் புலவர்கள் வீற்றிருந்தனர். கரிகாலனது அவைக்களத்திற் புலவர்கள் அமர்ந்திருந்தனர். பாண்டியன் நெடுஞ்செழியனது அவையில் மாங்குடி மருதன் தலைமையிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவரவை திகழ்ந்தது. வேல்ஷ் நாட்டு அரசரது அவைக்களங்களிலும் பண்டை நாட்தொட்டே புகழ்பாடும் புலவர் குரல் ஒலித்ததாகத் தெரிகிறது. ஆதரவளித்தவர்களுடைய செயற்கரிய செயல்களே புலவரது பாடல்களுக்குத் தூண்டுதலாயமைந்தமையால், அவர்களையே புலவர் வியந்தும் புகழ்ந்தும் பாடினர். அவ்வாறு தம்மை ஆதரித்த அரசவைகளையே புலவர் பிரதிநிதித்துவப்படுத்தினரெனலாம். அரச புரவலரைப் புகழ்வதே அவைக்களப் புலவரின் முக்கிய கடமையாகவும் இருந்ததாகக் கருதப்படுகின்றது.

அரசவைப் புலவர்கள் தமிழகத்திலே தோன்றிய வரலாற்றை நோக்குவது அவசியமாகும். நிலமானிய அமைப்பின்கீழ் வழிவழியாகக் குடும்பப் பகைமை வளர்ந்து வந்த ஆதிகாலத்திலே தோன்றிய சில புறநானூற்றுப் பாடல்களில் உடற்பலமும் வீரமும் மதிக்கப்பட்டன; ஆநிரைகளையும் நிலத்தையும் கொள்ளையடித்துப் பங்குபோடும் தொழிலோடு தொடர்புபட்டவர்கள் பெரிதும் போற்றப்பட்டனர். இக்காலத்திற் பாணன் யாழை மீட்டியவாறே தன்னை ஆதரித்த தலைவனுடைய வீரத்தையும் கீர்த்தியையும் போர்க்களத்திலும் இல்லத்திலும் பாடினுன். தலைவனைச் சுற்றிச் சமூக உணர்வு வளர்ந்தபோது, பாணன் அச்சமூகத்தின் குரலாக மாறி அதன் கடந்த காலச் சாதனைகளையும், நிகழ்கால அபிலாசைகளையும், நம்பிக்கைகளையும், அச்சங்களையும் வெளியிட்டான்: குலமரபுக் குழுவினதும், சிறப்பாக அதன் தலைவனதும் வீரச்செயல்களைப் பாடுவதன் மூலம் வீர உணர்வையும், வீரத்தையும் போர் வீரனேடு தொடர்புபட்ட விருந்தோம்பல், கொடை முதலிய பண்புகளையும் பாணர்கள் போற்றிக் காத்தனர்.

சமூகத்தில் ஏற்பட்ட வளர்ச்சியின் விளைவாகக் கிரேக்கர்களைப் போலவே தமிழர்களும் பாடியாடும் பாணரை வேருகவும் புலவரை வேருகவும் கண்டனர். தலைமகனுட்சியானது பரந்த அரசியலமைப்பாக மாறிய போது புகழ் பாடுவோனது அந்தஸ்தும் உயர்ந்தது. சங்க காலத்திற் புலவர்கள் பகை அரசர்களுக்கிடையிலே தூதுவர்களாகச் சென்று அவர்களைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானம் செய்து வைத்தமைக்கும், அரசரதுஉயிர் நண்பராய் விளங்கியமைக்கும் சான்றுகளுண்டு. செல்வச் செழிப்பு மிகுந்த சோழப் பேரரசின் காலத்தில் புலவர்களது மதிப்பு மேலும் உயர்ந்திருக்குமென்பதையும் உய்த்துணரலாம். சங்க காலத்திற் புகழ்பாடும் பாணர்கள் ஓர் அரசவையிலிருந்து இன்னோர் அரசவைக்காய் அலேந்து திரிந்தனர். அக்காலப் புலவர்கள் அவ்வளவு வசதியோடு வாழ்ந்தனரென்றும் கூற முடியவில்லே. சோழப் பேரரசவையில் இருந்த புலவர்கள் நாடிச் செல்லத்தக்க வேறு பெருந்தலேவர்கள் அக்காலத்தில் இருக்கவில்லே. அவ்வாறு பிறரை நாடிச் செல்ல வேண்டிய அவசியமும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்காது. அவ்வரசவையில் வளமாக வாழ்ந்த புலவர் சோழப் பேரரசின் புகழிலே மண்டிக் கிடந்து அப்புகழை வியந்து வியந்து பாடினர்.

அரசர்கள் புலவர்களே ஆதரித்துப் போற்றுவதற்கான முக்கிய காரணம் தங்கள் புகழைப் புலவர்கள் பாட வேண்டு மென்று விரும்பியமையே எனலாம். புகழை விரும்புவது மனிதவியல்பென்பது கீழ்வரும் செய்யுட் பகுதிகளால் அறியப்படும்.

''புகழெனி னுயிருங் கொடுக்குவர்.'' (புறநானூறு)

''ஒன்று உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றுது நிற்பதொன்று இல்.'' (திருக்குறள்)

''உயிரை விற்றுறு புகழ்கொள வுழல்பவர்'' (கலிங்கத்துப் பரணி)

''இன்றுளார் நாளே மாள்வர் புகழுக்கு மிறுதியுண்டோ'' (கம்பராமாயணம்)

''...சூதர் இருசுடர் தொடங்கி இன்று காறும் வருகின்ற தம் குலத்துள்ளோர் புகழை அரசர் கேட்டற்கு விரும்புவரென்று கருதி விடியற்காலத்தே பாசறைக் கண்வந்து துயிலடை பாடு வரென்பது ஈண்டுக் கூறிற்ரும்.'' என்ற நச்சிஞர்க்கினியரின் பத்துப்பாட்டு உரைப்பகுதியாலே, தம்புகழ் பாடப்படுவதை அரசர் விரும்புவது தெளிவாகும். பாணன் புகழ்பாடி அரசனைத்

704346
01 DEC 2021
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயிலெழுப்புவது வட இந்திய வழக்காயிருந்தது. இந்திரன் வலிமை வேண்டியபோது தேவர்களும் முனிவர்களும் அவனைச் சுற்றி நின்று புகழ்பாடியதாகவும், அவ்வாறு புகழப்பட்ட போது அவனது வலிமையும் உடலளவும் அதிகரித்ததாகவும் புராணங்கள் கூறுகின்றன. இதிலிருந்து புகழ் மொழிகளைக் கேட்கும் போது ஒருவனது உற்சாகமும் மிகுதியாகுமென்பதை உணரலாம்.

அரசரது புகழ்பாடும் இலக்கியங்கள் தமிழ் மொழியில் மட்டுமின்றி வட மொழியிலும் ஏராளமாகத் தோன்றியிருக்கின்றன. இத்தகைய இலக்கியங்கள் மிக முக்கியமானவையாகவும் கருதப்படுகின்றன. இரண்டாவது குலோத்துங்க சோழனைச் சிறப்பித்து அவனது அவைக்களப் புலவரான ஒட்டக்கூத்தர் பிள்ளைத்தமிழ் பாடியமையைக் குலோத்துங்கனுடைய ஆட்சியில் நிகழ்ந்த ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியென்று தி. வை. சதாசிவ பண்டாரத்தார் குறிப்பிடுகின்றார். புலவர்களாற் புகழப்படுவது நீண்டகாலமாகவே தமிழ் மக்களாற் பெரும்பேருகக் கருதப்பட்டு வந்திருக்கிறது.

''புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவ னேவா வான வூர்தி எய்துப வென்ப''

என்கிறார் சங்கப் புலவர் உறையூர் முதுகண்ணன் சாத்தனார். தமிழகத்தில் மட்டுமன்றி உலகின் பல பாகங்களிலும் புலவரால் உருவாக்கப்படும் புகழே நிலைபெறும் தன்மையதென்று வேண்டப்பட்டது. தம்மிடத்துச் சிறந்த புலவர்களை வைத்திருக்காத அரசர்கள் கட்டியெழுப்பும் ஆலயங்கள்முதலானவை காலகதியில் அழிந்து விடும் போது, அவ்வரசர்களின் பெயரும் மறைந்து விடுமென்று 'காவியாலங்கார' என்ற வடமொழி நூல் கூறுகிறது. தீரமித சாதனைக்குரியவர்களைப் புகழுக்குரியவர்களாக்கும் சக்தியும், சீரற்ற வாழ்வு நடத்தியவர்களை அழியாத இழிவுக்குரியவர்களாக்கும் சக்தியும் புலவர்களுக்கே உண்டென்று பிரான்சிஸ் மேயர்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Francis Meres- 1598) எழுதியிருக்கிறார். இந்த வல்லமை புலவர்களுக்கு இருந்த காரணத்தினாலேதான் அரசர்களும் இளவரசர்களும், பெரியோரும், பெயர் பெற்றோரும் எல்லாக் காலங்களிலும் புலவர்களை உற்சாகப்படுத்தியும், ஆதரித்தும், பரிசில்கள் வழங்கியும் வந்திருக்கிறார்கள் என்று வில்லியம் வெப்பே (William webbe—1586) எழுதியிருக்கிறார். குறிப்பிடத்தக்க சாதனை புரியாத அரசருக்கும் ஓரளவாவது புகழைத் தேடி வைக்கும் வல்லமையும் புலவருக்கு உண்டென்பது சொல்லாமலே விளங்கும். அரசரது தீரச்செயல்களை நிரந்தரமான புகழுக்குரியவையாக்கும் சக்தி புலவர்களுக்கு இருந்தமை முற்காலந்தொட்டே தமிழகத்தில் உணரப்பட்டு வந்திருக்கிறது. போர்க் களத்திற்குக் கூடப் புலவரும் அழைத்துச் செல்லப்பட்டனர். அதியமான் அஞ்சியின் புகழை நிலை நிறுத்திய பாடகன் என்று ஒரு புலவனைப் புகழ்கிறார் நாகையார் என்ற பெண்பாற் புலவர்.

''உலகம் ஒரு நிறையாத்தான் ஓர் நிறையாப்
புலவர் புலக்கோலாற் றூக்க''

என்ற பரிபாடற் செய்யுளை நோக்கும்போது சீர்தூக்கி ஆளும்மன்னனுடைய தகைமைகளை சீர்தூக்கிக் காட்டும் புலக்கோல் புலவர் வசமே இருந்ததென்று பொதுவாகத் தமிழ் மக்கள் கருதியமை தெளிவாகும். இதன்மூலம் புலவர்கள் அரசவையில் மட்டுமன்றிச் சமூகத்திலும் பெருமதிப்புப் பெற்றுத் திகழ்ந்தனரென்பதை ஊகிக்கவியலும். புலவர்களைச் ''செந்நாப் புலவர்'' என்கிறார் கபிலர். 'செந்நாப் புலவீர்' என்றே ஔவையாரும் விளிக்கிறார். புலவர் தம் நாவைப் 'பொய்யாச் செந்நா' என்பர் கருவூர்க் கந்தப்பிள்ளைச் சாத்தனார்.

''ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
உலகமொடு நிலை இய பலர்புகழ்
சிறப்பிற் புலவர்''

என்கிறான் அரசன் நெடுஞ்செழியன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விழங்கு புகழ்க் கபிலன்''

என்று பொருந்திலிளங்கீரனாராலும்,

''மறம்புரி கொள்கை வயங்கு செந் நாவின்
உவலை கூராக் கவலையி னெஞ்சின்
நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்''

என்று பதிற்றுப்பத்திலும் கபிலன் புகழப்படுகிறான்.

''யாமேநின் இகழ்பாடுவோ ரெருத்தடங்கப்
புகழ்பாடுவோர் பொலிவு தோன்ற
இன்று கண்டாங்குக் காண்குவ மென்றும்''

என்று சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பார்த்து ஆவூர் மூலங்கிழார் கூறுகின்றார்.

''வில்லம்புஞ் சொல்லம்பு மேதகவே யானாலும்
வில்லம்பிற் சொல்லம்பு வீறுடைத்து''

என்று கம்பரும்,

''காவல ரீகை கருதுங்கால் காவலர்க்குப்
பாவலர் நல்கும் பரிசொவ்வா—பூவினிலை
யாகப் பொருளை யபயனளித் தான் புகழாம்
ஏகாப் பொருளளித்தேம் யாம்''

என்று சயங் கொண்டாரும் பாடியதாக மரபுவழி கூறப்படுகிறது. இவ்வெடுத்துக் காட்டுகளின் வாயிலாகப் புலவர் போற்றும் புகழே அரசரால் அழியாச் செல்வமாக மதிக்கப் பட்டதென்பதும் புலவராற் பாடப் படாமையும் சினக்கப்படுவதும் அபகீர்த்தியாகவும் தீங்காகவும் கருதப்பட்டதென்பதும் தெளிவாகும்.

அரசரால் ஆதரிக்கப்பட்ட புலவர்கள் அவ்வரசரின் புகழை அழியாதவாறு நிலைநிறுத்திவிட்டனர். சோழப் பெருமன்னர் காலத்து இலக்கியத்தை உதாரணத்துக்கெடுத்துப்பார்த்தாற், சயங்கொண்டார் 'கலிங்கத்துப் பரணி' மூலமாக முதலாம் குலோத்துங்கன் புகழையும் ஒட்டக் கூத்தர் 'விக்கிரம சோழன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலா' மூலமாக விக்கிரம சோழன் புகழையும் 'குலோத்துங்க சோழனுலா' 'குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ்' ஆகியவை மூலமாக இரண்டாங் குலோத்துங்கன் புகழையும், 'இராச ராச சோழனுலா' 'தக்கயாகப் பரணி' ஆகியவை மூலமாக இரண்டாம் இராச ராசன் புகழையும் காலவெள்ளத்தால் அழியாதவாறு நிலைபெறவைத்து விட்டமையை அறியலாம். அரசவையை அழகுபடுத்திய புலவர்கள் அரச புகழுக்கு நிலையான அழகினைத் தேடிக் கொடுத்து விட்டனரெனலாம்.

12-ம் நூற்றாண்டிலே 'பவனதூத' என்ற வடமொழி இலக்கியத்தில் லக்ஷ்மணசேன என்ற அரசனைப் புகழ்ந்த கவி தொஜீயைப் பற்றி குறிப்பிடும் ஓர் ஆசிரியர், அவ்வரசனது அவைக் களத்தை அப்புலவர் அலங்கரித்தாரென்பர். ஆறும் நூற்றாண்டிலே வாழ்ந்த பாணபட்ட என்ற புலவர் தம்மை ஆதரித்த ஹர்ச சக்கரவர்த்தியின் புகழைப் பாடி வைத்தார். இவ்வாறே சாளுக்கிய அரசன் ஆறும் விக்கிரமாதித்தியனை பில்ஹன என்ற புலவரும், சாளுக்கிய அரசன் குமார பாலாவை ஹேமச்சந்திரவும், காஷ்மீர் அரசன் ஹர்சதேவ என்பவனைச் சம்புவும் பாடியுள்ளனர். இப்புலவர்கள் அவர்களாற் பாடப்பட்ட அரசர்களால் ஆதரிக்கப்பட்டவர்களாவர். இவ்வாறே தமிழகத்துப் புலவர்களும் தம்மைப் புரந்த அரசர்களுக்கு இலக்கியத்தில் அழியாப் புகழ்வாழ்வு நல்கியிருக்கிறார்கள்.

இன்னுமொரு வகையிற் புலவர்கள் அரசருக்கு உதவினர் என்று கருத இடமுண்டு. அதாவது படைத் தலைவர், அமைச்சர், குறுநில மன்னர், மண்டலிகர் முதலானோருக்குப் பேரரசின் பெருமையிலே தங்களுக்கும் பங்குண்டு என்ற உணர்வினையூட்டி, அதன் மூலம் அவர்களை அரசனோடு ஒன்றி நிற்கும்படி புலவர் செய்திருக்கலாம். இத்தகைய அதிகாரிகள் அரசன் பக்கம் சேர்ந்து நின்றது பேரரசின் வலிதளர் காலங்களில் ஒரு பேருக இருந்ததென்றும், பேரரசு வலிகுன்றுங் காலத்தில் இவ்வதிகாரிகள் தங்கள் உள்நாட்டுச் செல்வாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கினுலும், அரசனுக்குப் பணியாத தன்மையாலும் பேரரசின் வீழ்ச்சியைத் துரிதப்படுத்தினர் என்றும் வரலாற்ருசிரியர் கூறுவர். பேரரசின் தலைவஞன அரசனின் கீர்த்தியைப் பாடிய புலவர்கள் இவ்வதிகாரிகளுக்கும் அக்கீர்த்தியில் இடமளிப் பதன் மூலம் அவர்களை அரசனேடு இணைந்து நிற்க வைத்தன ரென்பது தவருகாது. விக்கிரம சோழனுலாவைப் பற்றிக் கூறுகையில், தி.வை.சதாசிவ பண்டாரத்தார் மேற்கண்டவாறு கூறுகிருர்; ''இவ்வேந்தன் படைத் தலைவர், அமைச்சர், குறுநில மன்னர், மண்டலிகர் முதலானேர் இருமருங்கும் சூழ்ந்து வர உலாப் போந்தான் என்று அந்நூலில் கூத்தர் கூறியுள்ளார்; அங்ஙனம் கூறுமிடத்துச் சில அரசியல் தலைவர் களின் பெயர்களை நிரல்பட வைத்து அன்னேரது வீரச் செயல்களையும் பெருமைகளையும் மிகப் பாராட்டிச் செல் கின்றனர்.'' இவ்வாறு புகழுக்குரியவர்களாக்கப்பட்ட அதிகாரி கள் அப்புகழுக்கு அடிப்படையான பேரரசின் பெருமையைக் கட்டிக் காப்பதில் முனைந்து நின்றிருப்பர் என்று ஊகிக்க இடமுண்டு.

இவ்வாறு அரசரின் புகழையும் அரசின் பெருமையையும் காப்பதில் முனைந்து நின்ற புலவர்களுக்கு அரசர்களும் அவர் களைச் சேர்ந்தவர்களும் பரிசில்களும் பட்டங்களும் வழங்கிக் கௌரவித்தனர். உரோமப் பேரரசன் ஆகஸ்டசின் தங்கை ஒக்டேவியா இருபத்தியாறு கவிதைகள் இயற்றிய வர்ஜிலுக்கு 1, 137 பவுன்கள் பரிசளித்தாள் என்பர் பிரான்சிஸ் மெயர்ஸ். எலிஸபெத் மகாராணி காலத்திலும் அரச புகழ்பாடிய ஆங்கில நாட்டுப் புலவர்களுக்கு அரச அதிகாரிகள் மூலமாகக் கைமாறு செய்யப்பட்டது. வேல்ஷ் நாட்டு அரசவைப் புலவர்களின் அந்தஸ்தும், சலுகைகளும், ஊதியமும் சட்டங்கள் மூலமாக வரையறை செய்யப்பட்டிருந்தன. வட இந்திய அரசர்கள் புலவர்களை ஆதரித்துக் கௌரவித்ததோடு 'கவிராஜ'ர்களையும் நியமித்திருக்கிருர்கள். 'கவிராஜ' என்ற பட்டம் சமுத்திர குப்தன் காலத்திலே புழக்கத்திலிருந்தது. இரண்டாம் தைல என்ற அரசனது அவையிற் பெரும்புகழீட்டிய கவி ரன்னவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வரசன் சிறந்த பரிசில்களும், 'கவிச்சக்கரவர்த்தி' என்ற பட்டமும் வழங்கினான். இராஷ்டிர கூட அரசனான மூன்றுவது கிருஷ்ண, கவிபொன்னவுக்குக் 'கவிச்சக்கரவர்த்தி'ப் பட்டம் வழங்கினான்.

சோழப்பேரரசின் காலத்துக்குமுன் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் பல்வேறு அரசரையும் தலைவரையும் வள்ளல் களையும் மாறிமாறி நாடியிருக்கலாம். ஆனால் புலவருக்கு வேண்டிய வசதியெல்லாம் அளித்து அரச மாளிகையிலேயே அவர்களை வைத்துக் காக்கும் சக்தி சோழப் பேரரசுக்கு இருந்தது. அவ்வாறு அரசவையின் அங்கமாக வாழ்ந்த சயங் கொண்டார், ஒட்டக் கூத்தர் முதலிய புலவர்கள் தம்கால அரசரது புகழை நிலை நாட்டினர்;பேரரசின் பெருமையை நிலை நாட்டினர்; பட்டங்களும் பரிசில்களும் பெற்றனர். முதலாம் குலோத்துங்கன் புகழைக் 'கலிங்கத்துப்பரணி'யிலே பாடிய அவனது அவைக்களப் புலவரான சயங்கொண்டார் 'கவிச் சக்கரவர்த்தி' எனப் பட்டம் பெற்றார். அவரது 'கலிங்கத்துப் பரணி'யின் ஒவ்வொரு தாழிசைக்கும் குலோத்துங்க சோழனால் ஒவ்வொரு பொற்றேங்காய் பரிசாக வழங்கப் பட்டதென்பது செவிவழிச் செய்தியாகும். மூன்று சோழ மன்னர்களுக்கு அரசவைப் புலவராக விளங்கிய ஒட்டக் கூத்தருக்குக் கௌடப் புலவர், கவிராட்சசன், கவிச் சக்கரவர்த்தி, காளக்கவி, சரு வஞ்ஞகவி என்ற சிறப்புப் பெயர்கள் அக்காலத்தில் வழங்கின. இவருக்கு விக்கிரம சோழன் யானை, காளம் முதலிய வரிசைகள் அளித்துப் பாராட்டியதாகக் கூறப்படுகிறது. இவர் இராசராச சோழனுலாவை அரங்கேற்றிய போது பெருமகிழ்வெய்திய இராசராசன் அதன் ஒவ்வொரு கண்ணிக்கும் ஒவ்வோராயிரம் பரிசிலாக வழங்கினானம். அத்தோடு அவன் ஓருருக்குக் கூத்தனூர் என்று பெயரிட்டு அதனை ஒட்டக் கூத்தருக்கு மானியமாக வழங்கியதாகவும் கூறப்படுகிறது, ''குலோத்துங்க சோழ சரிதை'' என்ற காவியமொன்று பாடியதற்காகக் கவிகுமுத சந்திரன் என்ற சிறப்புப் பெயர்பெற்ற திருநாராயண பட்டன் என்பவருக்கு நிலம் இறையிலி செய்து பரிசளிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதென்று முதற் குலோத்துங்கனது 27-ம் ஆட்சி ஆண்டில் அமைக்கப்பட்ட கல்வெட்டொன்றின் மூலம் அறியக்கிடக்கின்றது. ''புலவர்களுக்கு அவரவர்கள் தகுதிக்கேற்ப அரசர்கள் பட்டங்கள் வழங்குவது தொன்று தொட்டுவரும் வழக்கமாகும்...எனினும், இடைக்காலச் சோழர்கள் காலத்திலிருந்துதான் பட்டங்களும் விருதுகளும் மிகுதியாக வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.'' என்று ச.கு. கணபதி ஐயர் கூறுவது உண்மையே. சோழப் பேரரசர் காலத்திலேதான் அரசர் மிகுந்த முக்கியத்துவம் பெற்றனர் என்றும் அதன் விளைவாகப் பல அரசவை இலக்கியங்கள் தோன்றினவென்றும் கொள்வர் இலக்கிய வரலாற்றாசிரியர். அரசர் முக்கியத்துவம் பெறும் போது புலவர் பார்வை அவர் பக்கம் திரும்புதல் இயல்பு. அதே வேளையிற் பேரரசின் தலைவரான அரசருக்கு வேண்டிய ஆதரவையும் மதிப்பையும், சமுதாயத்திலே தேடித்தரும் வல்லமையும் புலவருக்கு இருந்தது. தம்புகழையும் தம் பேரரசின் கீர்த்தியையும் புலவர் பாடவேண்டுமென்று விரும்பிய அரசர், புலமைத்திறனுற் புலவர் ஈட்டிய புகழிலும் தமக்கும் தம் அரசவைக்கும் பங்குதேட முனைந்தும் புலவரைத் தம் அரசவைக்கு இழுத்திருத்தல் கூடும். அது எவ்வாறாயினும் அரசவைகளிற் புலவர்கள் மதிப்புப் பெற்றனர் என்பது தெளிவு.

அரசரையும், ஏனைய தலைவரையும் புலவர்கள் புகழ்ந்து பாடியது ஏன்? நல்லதொரு மெய்க்கீர்த்தி எழுதுவதே படிப்பின் மூலம் செல்வம் தேட நிச்சயமான வழியென்று வடமொழி ஆசிரியர் ஒருவர் கூறுகின்றார். பொருள் வேண்டிய புலவர்கள் அரசனது கொடையை மிகுதியாகப் பாராட்டியது அவனைக் கொடுக்கும்படி தூண்டவே என்பர் மற்றோராசிரியர். 'இயற் புலவரே பொருள் வேட்பர்' என்கிறது இரண்டாம் இராசராச சோழனின் மெய்க்கீர்த்தியொன்று. சயங்கொண்டாரின் 'கலிங்கத்துப் பரணி'யும் ஒட்டக்கூத்தரின் 'தக்கயாகப்பரணி'யும், 'தம்மை ஆதரித்த தலைவர்கள் பாலுள்ள செய்ந்நன்றியறிவு காரணமாகப் பாடப்பெற்றன' என்பர் உ. வே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமிநாதையார். நன்றியறிவு காரணமாகவும் பொருள் வேண்டியும் புலவர்கள் செய்யுட் செய்திருக்கலாம். ஆனல், அவ்வாறு பாடப் புகுந்த புலவர் உண்மையையும் நன்மையை யும் மதியாது அரசரின் மனதுக்குகந்தவாறெல்லாம் பாடினரா? சங்ககாலப் புலவரைப் பற்றிக் கூறப்புகுந்த ஓராசிரியர், அவர் களிற் பலர் உணவுப் பிரச்சினை காரணமாக யாராவது ஓர் அரசனுடனே அல்லது தலைவனுடனே ஒட்டிக்கொண்டு அவர்கள் தந்த உணவுக்கும் உடைக்கும் கைமாருக அன்னாரது பெருமைகளையும் சாதனைகளையும் பாடினர் என்கிருர். அவ்வாறு கூறுவது எவ்வளவு தூரம் தம்மை ஆதரித்தவர் பாற் புலவர்கள் தங்கியிருந்தனரென்பதை மிகைப்படுத்துவ தாகும். கொடுத்த பொருளை வாங்கிக் கொண்டு நடப்பதை வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தவர்கள் என்று தமிழ்ப் புலவர்கள் யாவரையும் கூறமுடியவில்லை.

''வாழ்தல் வேண்டிப்
பொய்கூறேன் மெய் கூறுவல்''

என்று மருதனிளநாகனரும்,

''பீடின்மன்னர் புகழ்ச்சி வேண்டிச்
செய்யா கூறிக் கிளத்தல்
எய்யா தாகின்றென் சிறுசெந் நாவே.''

என்று வன்பரணரும் பாடுவதை நோக்கும்போது செய்ந்நன்றி யறிவு காரணமாகவும், உணவும் உடையும் வேண்டியுமே எல்லாப் புலவர்களும் பாடினரென்று பொதுப்படக் கூற முடிய வில்லை. கூலி வேண்டியும் கூலி கொடுத்ததற்காகவும் மட்டும் பாடுபவர்களாகப் புலவர்கள் இருந்திருப்பின் அவர்களுக்கு அத்துணை மதிப்புச் சமுதாயத்தில் இருந்திருக்காது. ஆனற், சங்ககாலத்திலேயே மாற்றரசரிடம் தூதுவராக அனுப்புமள வுக்குப் புலவர்மேல் அரசர் மதிப்பு வைத்திருந்தனரென்பதை யும், அரசருக்கு அறிவுரை பகர்ந்தும், பகைவேந்தரோடு நிலவிய பூசல்களைத் தீர்த்தும் வைக்குமளவிற்குப் புலவர்கள் செல்வாக்குப் பெற்றிருந்தனரென்பதையும் அறிகிரேம். அரச ஆதரவையே நம்பியோ அரசருக்கு அஞ்சியோ புலவர்கள் வாழ்ந்தனரென்று சுதட்டுமேனிக்குக் கூறுதல் ஏற்புடைத்தன்று,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

''கொல்லி மலையுடைய கொற்றவா நீமுனிந்தால்
இல்லையோ வெங்கட் கிடம்'' என்றும்
''மன்னவனு நீயேயோ மண்ணுலகு மிவ்வளவோ
உன்னையோ நான் புகழ்ந்திங் கோதுவது?''

என்றும் கம்பர் பாடியதாகக் கூறப்படுவதும் இங்கு அவதானிக்கத்தக்கது.

ஆங்கில நாட்டில் அரசவைக் கவிஞன் ஓர் அரசவை அதிகாரியாகக் கருதப்பட்டான். பிறந்தநாள் விழாக்களின் போதும், ஏனைய அரசவை நிகழ்ச்சிகளின் போதும் ஏற்ற பாடல்களை இயற்றிப் பாடுவது அவனது பொறுப்பென்று கருதப்பட்டது. ஆனால், தமிழகத்து அரசவைப் புலவர்கள் அரசவையிலே சம்பளத்துக்காக வேலை பார்த்ததாகத் தெரிய வில்லை. சோழப் பேரரசுக்கால அவைக்களப் புலவருக்கும் வேண்டிய சுதந்திரம் இருந்ததாகவே தெரிகிறது. தி. வை. சதாசிவ பண்டாரத்தார் கலிங்கத்துப்பரணிக்குப் பரிசில் வழங்கியது குறித்துக் கூறுகையில், ''..... புலவர் அரசன்பால் கொண்ட பேரன்பினால் அவன் கலிங்க வெற்றியைச் சிறப்பித்து இப்பரணியை இயற்றியிருத்தல் வேண்டும் என்றும், அது பற்றி உள்ளம் குளிர்ந்து அரசன் புலவருக்குத்தக்க பரிசில் வழங்கிப் பாராட்டியிருத்தல் வேண்டுமென்றும் கொள்வதில் இழுக்கொன்றுமில்லை'' என்கிறார். எனவே, தம்மை ஆதரித்த வரும், தம்மால் மிக அறியப்பட்டவரும் நேசிக்கப்பட்டவரு மான அரசர்களின் பெருமைகளிலும் சாதனைகளிலும் மனதைப் பறிகொடுத்த புலவர்கள் அப்பெருமைகளையும் சாதனைகளையும் இலக்கியங்களிற் பாராட்டினர் என்றும், இலக்கியங்களின் சிறப்பிலே மனம் குளிர்ந்த அரசர்கள் பரிசில்களை வழங்கிப் புலவர்களை ஆதரித்துக் கௌரவித்தனர் என்றும் கருதுவது தவறாகாது. அத்தகைய அரசர்களின் ஆதரவினாலே தமிழிலக்கியம் பல்வேறு துறைகளில் வளர்ச்சி கண்டது.

புலவர்களின் முக்கியமான நோக்கங்கள் புகழூட்டுவதும் இன்பம் அளிப்பதுமே என்று வடமொழிக் கவிஞர்களும், கவிதை சார்ந்த படைப்புக்களின் ஆசிரியர்களும் ஒரு முகமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிப்பிராயப்படுகின்றனர். தமிழ்ப் புலவர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் தமது படைப்புகள் புகழோடு வாழ வேண்டுமென்று விரும்பியிருக்கலாம். ஆனாலும், தங்கள் பெயர்கள் புகழோடு நிலைபெற வேண்டுமென்று அவர்கள் கருதியதாய்க் கொள்ள முடியவில்லை. காரணம், தங்களைப் பற்றிய குறிப்புக்களை அவர்கள் விட்டுச் செல்லாமையே. தாம் யார் என்ற விபரத்தைக்கூட அவர்கள் விட்டுச் செல்லாமைக்குக்காரணம் விளம்பரம் செய்து கொள்ளாத அவர்களது பெருமனமே என்றும் கூறப்படுகிறது.

புலமைத் திறனுக்கும் செல்வத்துக்கும் இடையேயிருந்த வெளியை நிரப்புவது அரசனது கடமையாகவும், தன்னை ஆதரித்த அரசனுடைய பெயர் மங்கி மறைந்து விடாமற் காப்பாற்றுவது புலவனது கடமையாகவும் இந்தியாவில் பொதுவாகக் கருதப்பட்டது. அரச ஆதரவை முற்றிலும் நாடாத காளிதாசன், கம்பன் முதலிய புலவர்களும் இந்திய நாட்டிலே கீர்த்தி பெற்றுத் திகழத்தக்க வாய்ப்பும் இருக்கவே செய்தது.

சோழப் பேரரசுக் காலத்திலே சோழ அரச குடும்பத்தவரின் திருவுருவங்கள் பல கோயில்களில் வழிபாட்டிற்காக வைக்கப்பட்டதையும், சோழ அரசர்களின் புதை குழிகளுக்கு மேலே ஆலயங்கள் எழுப்பப்பட்டதையும் நோக்கும் போது, அரசர்கள் தமது புகழ் மறையாது நிலைபெற வேண்டுமென்பதற்காக முயன்றமை தெளிவாகும். நிலையான புகழை மட்டுமல்லாமல், அரசரது சாதனைகள் சாத்தியமாவதற்கு அவசியமான நல்லெண்ணத்தையும் ஆதரவையுங்கூட மக்களிடத்தும் அரசியலதிகாரிகளிடத்துமிருந்து அரசருக்குத் தேடிக் கொடுக்கும் வல்லமை புலவருக்கிருந்தது. அதே வேளையில் அரசரின் ஆதரவு கலையிலக்கிய வளர்ச்சிக்கு ஊக்கமும் நன்மையுமளித்தது. இக்காரணங்களினால் அரசரும் புலவரும் ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டனர் எனலாம். ஒருவரது சாதனையில் மற்றவர் ஈடுபட்டமையும், பழைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புகளும் அரசருக்கும் புலவருக்கும் இடையே நிலவிய உறவினை நெருக்கமாக்கியிருக்கலாம்,

இலக்கியங்களைப் படைத்தவர்கள் அரசர் சுவையுணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்த்ததோடு, சுவையறிந்தவர்களையும் தமது படைப்புக்கள் கவரவேண்டுமென்று விருப்பினர். அதனுல் இலக்கியங்கள் செம்மையான வடிவம் பெற்றன. அத்தோடு அரசரின் ஆதரவையும் மதிப்பையும் பரிசில்களையும் பெறுவதற்கு முயன்றதன் விளைவாகப் புலவர் மத்தியிலே தோன்றிய போட்டிகளும் இலக்கிய வடிவத்தை மென்மேலும் செம்மைப் படுத்தும் ஆர்வத்தைத் தூண்டின எனத் துணியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபும் மாற்றமும்

மரபு என்ற சொல்லைப் பொதுவாக நோக்குமிடத்து தொன்றுதொட்டு வழங்குவதைக் குறிப்பதாகவே அது வரலாற்றுக் காலமுதலாகத் தமிழில் வழங்கி வருவதனை அவதானிக்கவியலும். மரபு என்றால் என்ன வென்பதல்ல இன்றைய பிரச்சினை. மொழி, இலக்கியத் துறைகளில் மரபைப் பற்றிப் பேசுகின்ற சிலர் மரபு மாறக் கூடியதா மீறப்படத் தக்கதா என்று வினவி நிற்கின்றனர். கால மாற்றங்களை மறுத்துவிடுமளவுக்கும் சுயத்துவத்தையும் திறனையும் இழந்து விடுமளவுக்கும் அழுங்குப் பிடியாகப் பிடித்து வழிபடப் படவேண்டிய ஒன்றுதான் மரபெனப்படுவதா என்ற வினாவே இன்று பலரது சிந்தனைகளை அலைக்கழிப்பதாகும்.

வரலாற்றைப் படைக்கும் மனித சமுதாய வாழ்வின் அடிப் படையான சில விதிகளை இங்கு நாம் கவனத்துக்கெடுத்துக் கொள்ள வேண்டும். வாழ்வு என்பது அசையாது தேங்கி நிற்கக் கூடிய ஒன்றல்ல. தொடர்ச்சியாக அது இயங்கிக் கொண்டிருப்பதன் விளைவாக மாற்றங்களும் அழிவுகளும் தோற்றங்களும் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. வாழ்வில் எப்பொழுதும் புதியதும் பழையதும் வளர்ந்து கொண்டிருப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதும் மடிந்துகொண்டிருப்பதும் ஒரு சேர நிகழ்வதாகும். அதனைச் சரியாக அவதானித்தமையினாலேயே பவணந்தி முனிவர்,

''பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே''

எனத் தமது இலக்கண நன்னூலின் இறுதியிற் கூறிச் சென்றார்.

தோற்றங்களும் அழிவுகளும் நிகழும் போது, அவ்விரு வகை நிலைகளுக்கும் உரிய கொள்கைகளும் கோட்பாடுகளும் கூட உருவாகிவிடுகின்றன. ஒன்று தோன்றி வளர்வதை ஆதரித்து அதற்காகப் போராடும் போது இன்னொன்று மாய்ந்து மடிவதை எதிர்த்து அது மடியாமல் இருப்பதற்காகப் போராடுகின்றது. இலக்கிய தத்துவங்களுக்கிடையிலான போராட்டங்களும் இவ்வடிப்படையிலேதான் நடைபெறுகின்றன.

வாழ்விலே, பிறந்து தினந்தோறும் வளர்ந்து வருவதைத் தோற்கடிக்கவோ பின்னிழுக்கவோ முடியாது. இதற்கு உதாரணமாக எமது நாட்டிற் காணப்படும் சாதி முறையினையே குறிப்பிடக்கூடும். இன்றைய நிலையிற் சாதிப்பாகுபாட்டுக் கெதிரான சமத்துவ உணர்ச்சி பெரும்பலம் பெற்றுவிடவில்லையாயினும், அது வளர்ந்துவரும் ஒன்றாகும். சாதியுணர்வு பலம்வாய்ந்த ஒன்றாகத் தென்பட்டாலும் இன்றைய வாழ்க்கை முறைக்கு உபயோகமில்லாத, ஒத்துப் போகாத ஒன்றாகையினால் அது ஒடிந்து கொண்டும் நசிந்து கொண்டும் வருகிறது. எனவே, எதிர்காலத்திற் சமத்துவ சிந்தனை வெற்றியடையப் போவதையும் சாதியுணர்வு சாகப் போவதையும் வரலாற்றுணர்வுள்ள யாரும் மறுக்கமாட்டார்.

மனித நாகரிக வரலாற்றை உற்று நோக்கினால், ஆதி காலத்திலிருந்து மனிதன் எண்ணற்ற இடையூறுகளையும் எதிர்ப்புக்களையும் பிரச்சினைகளையும் பல்வேறு வழிகளிற் போராடி வென்றுகொண்டு வளர்ந்து வந்தமையினை அவதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னிக்கலாம். வாழ்க்கை அனுபவ உணர்வின் வெளிப்பாடாக வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கலை, இலக்கியங்களிலும் மனித வரலாற்றுப் போராட்டங்களின் தாக்கங்களைக் கண்டுகொள்ள வியலும். ஏனைய மனிதர்களைப் போலவே, கலைஞர்களும் சமகாலத்தவர்களின் வாழ்விலிருந்து மட்டுமின்றி முன்னையோர் வாழ்விலிருந்தும் வாழ்வானுபவங்களிலிருந்தும் பெற்றுக் கொள்பவையும் கற்றுக் கொள்பவையும் பலவாகும்.

இலக்கியத்தைப் பொறுத்தவரையில், முன்னையவற்றின் செல்வாக்குப் பின்னையவற்றின் பொருள் அமைதி, நடை, உத்தி முதலியவற்றிற் காணப்படலாம். எதிர்ப்புக்களையும் பிரச்சினைகளையும் சமாளிக்கும் வழிவகைகளை மட்டுமின்றி வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் வழிவகைகளையும் முன்னையோரிடமிருந்து பின்னையோர் அறிந்து கொள்வது உண்டு. முன்னையோர் வழிகளையும் முறைகளையும் பின்னையோரும் பின்பற்றும் போது, அது மரபென ஓம்பப்படுகிறது. அவ்வாறு அது ஓம்பப் படுவதற்கான காரணங்கள் யாவை?

நாம் எமது அனுபவங்களை அர்த்தமும் முழுமையும் வாய்ந்தவையாக ஒழுங்கு படுத்துவதற்கேற்ற ஒரு சிந்தனை முறையாக அது உதவுவது ஒரு காரணமாகலாம். எதனைக் கூடுதலாக மதிப்பது, எதனைக் குறைவாக மதிப்பது என்று முடிவெடுக்க வேண்டியவிடத்து நமக்கு உதவும் ஒரு மதிப்பீட்டு அல்லது விழுமிய முறையாக அது அமைவது இன்னொரு காரணமாகலாம். எமது அனுபவங்களின் அடிப்படையில் நல்வாழ்வை நாடும் எமது முயற்சிகள் கை கூட உதவும் தகைமையைக் கொண்டிருத்தல் மற்றுமொரு காரணமாகலாம்.

எமது தேவைக்கு எந்த வகையிலும் உதவாத ஒன்றை முன்னையோர் போற்றினர் என்பதற்காக இன்று நாமும் போற்றுதல் செய்வோமா? முன்னையோரையோ அல்லது அவர்தம் சாதனைகளையோ நாம் நினைவுகூரவோ, பின்பற்றவோ விழைவது இன்றைய எமது தேவைகளை நோக்கியே. சில பெரியோர்களின் நினைவுகளை நாம் கொண்டாடுகின்றோம் என்றால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குக் காரணம் அவர்கள் விட்டுச் சென்றவை இக் காலத்தில் எமக்கு அர்த்தமும் தேவையும் உள்ளவையாக இருப்பதுவேயாகும். எம்கால முயற்சிகளுக்கு முட்டுக் கட்டையாக இருக்கக் கூடியவற்றையும் துணையாக இல்லாதவற்றையும் நாம் சிரத்தையோடு பேண முயல்வோமா?

தமிழர் பண்பாட்டைப் பற்றிய பெருமித உணர்வைத் தோற்றுவிக்க இன்று முனைவோர், ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற கூற்றினை முழங்குவது போல, 'போகம் வேண்டிப் பொதுச் சொற் பொருஅது' ஏனையோர் எல்லைகளைத் தாக்கிய வேந்தர் செயல்களையும், 'தாயின் றூவாக் குழலி போல' மாற்ருர் மக்களை வருத்திய வேந்தர் செயல்களையும், 'சிறியகட் பெறினே யெமக்கியு மன்னே' என்ற ஔவை மூதாட்டி கூற்றினையும் முழக்க முன்வருவாரா?

பெரும் புலவர்களைப் பொறுத்த வரையிற் கூட, வள்ளுவனும் இளங்கோவும் அவர்கள் வாழ்ந்த கால முதலாக என்றும் ஒரே வகையிற் போற்றப்பட்டே வருகின்றனர் என்று கூறுவதற்கில்லை. எவ்வாருயினும்,

''காலத்திற் கேற்ற வகைகள்—அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்''

போற்றப்படவே செய்யும். புது மாறுதல்களை வரவேற்றுக் கொண்டு, காலத்துக்கேற்ற கருத்துக்களை ஏலத்துக்கேற்றக நடையிற் பாடிய பாரதியை எத்தனையோ கருமேகங்கள் தோன்றியும் மறைத்து விடமுடியாமற் போனமையினைச் சமீப காலச் சரித்திரத்திற் கண்டோம். சொல், பொருள், யாப்பு, அணி ஏதுமறியாதவன் பாரதி; அவன் கவிஞனேயல்ல என்று வல்லுக்கு நின்றவர்களாற் பாரதியின் புகழுக்குப் பங்கமேற்படுத்தி விட முடியவில்லை. இதிலிருந்து மாற்றங்களும் புதுமைகளும் நிகழும் என்பதையும் அர்த்தமும் அவசியமும் பொருந்தியவை போற்றப்படும் என்பதையும் விளங்கிக் கொள்ளலாம்.

மரபெனப்படுவது மாருத் தன்மையது என்பவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வழக்கெனப்படுவதுயர்ந்தோர் மேற்றே'' என்ற தொல்காப்பியச் சூத்திரத்தைக் காட்டி, உயர்ந்தோர் என்றும் மாறுபடார் என்றும், ஆகையால் அவர் வழிப்படும் வழக்கும் மாறுதலடையாது என்றும் பகர்வர். உயர்ந்தோர் எனச் சிலரையும் தாழ்ந்தோர் எனப் பலரையும் கொள்வதும், மிகச் சிறுபான்மையினரரான உயர்ந்தோரையே சகலதுக்கும் கட்டளைக்கல்லாகக் கொள்வதும் இக்காலத்துக்கேற்புடைத்தாகுமா என்ற நியாயமான சந்தேகம் ஒருபுறமதாக, உயர்ந்தோர் அனைவரும் என்றும் ஒரே கருத்தினராவரா என்ற வினவும் இங்கு எழுப்பப்படலாம். ''மன்னனுயிர்த்தே மலர்தலை யுலகம்'' என்ற மோசிகீரனாரும், ''உயிரெலா முறைவதோர் உடம்புமாயினன்'' எனத் தசரதனை வர்ணித்த கம்பனும் ஒரே கருத்தினரல்லர் என்பது தெளிவாகும்.

இதுதான் மாருத மரபு என்று இறுகப்பிடிப்போர் தொல்காப்பிய மரபியலையே பேராதாரமாகக் கொள்வர். அவ்வியலிற் சில சொல்வழக்குகளைத் தொல்காப்பியர் குறிப்பிடுவர். உதாரணமாக ஒன்றை நோக்கின், பெண்யானை பிடியெனவும், பெண்குதிரை பெட்டையெனவும் படுமென்பர். அவ்வாறு தொன்றுதொட்டு வழங்கும் சொற்களைத் தேவையின்றி மாற்றிப் புதுச் சொற்களை அமைக்க வேண்டுமென்பார் இல்லை. ஆனால், அரசருக்குப் புரவியும் களிறும் தேரும் தொல்காப்பியர் கூறினாராதலின், அரசாள்வார் காரும் ஜீப்பும் விமானமும் வைத்திருத்தலாகாதென்றால் நகையாதார் இன்று இரார். மரபு மாற்றமுறக் கூடாதென்று பேசுவோர்,

''வேளாண் மாந்தர்க் குழுதூணல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி''

என்ற தெல்காப்பியர் சூத்திரத்துக்கமைய வேளான் மாக்கள் விவசாயமேயன்றி, வேறு தொழில்களைப் பார்க்கலாகாதென்பரா? தமக்கு உவப்பான மாறுதல்களை ஒப்பத் தயங்காத மனிதர்கள் தமது ஊன்றிய நலன்களுக்குப் பாதகமான மாறுதல்களை ஒப்பத் தயங்குவதை உலகில் நாம் அவதானித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடும். சமூகமும் அவ்வாறுதான். தன் முன்னேற்றத்துக்கு உகந்த மரபுகளையும், மாறுதல்களையும் அது கொள்ளும்; உவப் பற்றவற்றைத் தள்ளும். ஆனால், சில படித்தவர்களோ, சான்றோரோ, உயர்ந்தோரோ, பணக்காரரோ, படைக் காரரோ தாமே சமூகம் என்றோ தம்வழியே சமூக வழியாக வேண்டுமென்றோ கருதிப் பிழைக்குமிடத்து மனித சமூகம் அதற்குப் பொறுப்பாகாது.

தமக்குவப்பான வழியிற் சமூகமுழுமையும் சிந்திக்க வேண்டுமெனக் கருதுவார்போல, மரபை மாறுவடிவிற் பேண முனையும் சிலரும் தாம் விரும்பியவாறே மொழியும் இலக்கிய மும் செயற்பட வேண்டுமென ஆசைப்படுகின்றனர். சாதாரண மக்களின் பிரச்சினைகளை எடுத்துக்கொண்டும், எளிய வடிவைத் தாங்கிக் கொண்டும் இலக்கியம் பொது மக்களின் சொத்தாகி வருவதே மரபைக் குறித்து அவர்கள் அக்கறை கொண்டமைக் கான காரணமாகும். தம் பிடியிலிருந்து அல்லது தம் சிறப் புக்கும் உயர்வுக்கும் ஆதாரமாகும் நிலையிலிருந்து இலக்கியம் மாறிச் செல்வதுதான் அன்னாரின் அங்கலாய்ப்புக்குரிய காரணமென்று தோன்றுகின்றது. நிலையில்லா மானிடரின் அரசியற் பிரச்சினைகளை இலக்கியம் பேசலாமா, இழிசினர் வழக்கினை இலக்கியம் ஆளலாமா என்பனவே அவர்களால் எழுப்பப்படும் முக்கிய பிரச்சினைகளாகும்.

உள்ளடக்கமே உருவத்தை நிர்ணயிப்பதாகும். இலக் கியம் பொதுமக்கட் சார்புடைத்தாகும் இக்காலத்திற் பொது மக்கள் தேவைகளை அது பிரதிபலிப்பதும் அவர்களுக்கமைந்த நடையினை மேற்கொள்வதும் தவிர்க்க முடியாததாகும். உலகின் எப்புறத்தில் நோக்கினும் இதனைப் புரிந்து கொள்ள முடியும். கலப்பற்ற தூய மகோன்னதமான கவிதையின் காலம் கடந்து விட்டது. பல்வேறு சம்பவங்களின் தாக்கங்களும், பன்முகமான புதுமைகளும், வேகமான மாற்றங்களும் நிகழும் இக்காலத்தில் நெகிழ்ச்சியான நடையினையே எழுத்தாளர் கையாளவேண்டி யுள்ளது. மந்திர வெளிப்பாடு போலன்றி, மானிடம் சார்ந்த தாய் இலக்கியம் வளர்ந்து வருகிறது. இன்றைய இப் பொதுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குக்குத் தமிழிலக்கியம் புறம்பாக முடியாது. இலக்கியம் குறிப்பிட்ட ஒரு சிலருக்கென்ற நிலை தமிழ் கூறும் உலகிலும் மாறிவிட்டது. பேச்சு மொழிக்கும் இலக்கிய மொழிக்குமுள்ள இடைவெளி நீக்கப்பட்ட வேண்டிய அல்லது வழக்கிழக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுவிட்டது. புதிய சிந்தனை களின் வாகனமாகவும் புதிய இயக்கங்களின் கூட்டாளியா கவும் மொழி ஆகிவருகிறது.

இதுகாறும் கூறியவற்ருல், மாறுதல் உலகத்தியற்கை என்பதும், மனித வாழ்வைப் போலவே அதிலிருந்து பிறக்கும் மொழியும் இலக்கியமும் மாற்றமும் வளர்ச்சியும் அடையும் என்பதும் பெறப்படும். மாருவியல்பின உண்டென்றும் அவையே மரபுகள் என்றும் வாதாடுவது பொருந்தாதென்பதும் பெறப் படும். இருப்பினும், மரபு என ஒன்று இல்லையென்ருே நம் முன்ஞேர் விட்டுச்சென்ற வழிகளையும் முறைகளையும் பயன் படுத்தலாகாதென்ருே கூறுதல் சாலாது.

இலக்கியம் சூனியத்திலிருந்தோ சுத்த சுயம்புவான கலைஞரின் புனித வெளிப்பாடாகவோ தோன்றுவதில்லை. மனிதானுபவத்தின் வெளிப்பாடான இலக்கியம் தேசிய இயல்பு களிஞலும் கலாசார மரபுகளிஞலும் பாதிக்கப்படும். கடந்த காலத்திலிருந்து தான் எமது சிந்தனைகளும் மொழிகளும் கலை உத்திகளும் வளர்ந்துவருகின்றன. கடந்த காலத்தோடான தொடர்பினைத் துண்டித்தல் இயலக்கூடிய காரியமன்று. சோவியத் நாட்டில் 1917ல் நடைபெற்ற புரட்சிக்குப் பின் புரோலிட்டிரீயேஸ் எனப்பட்ட தீவிரவாதிகள் முந்தைய தலை முறைகளின் முதுசொம்களை (அனுபவ உண்மைகளை) முற்ருகப் புறக்கணித்ததொரு பாட்டாளிக் கலாசாரத்தைச் சிறப்பாக உருவாக்க வேண்டுமென்றும், அதற்காக நூதன சாலை களையும் பண்டைப் பேரிலக்கியங்களையும் அழிக்க வேண்டு மென்றும் எத்தனித்தபோது, அதனை முற்ருக எதிர்த்த லெனின் வெளியிட்ட கருத்து, சிந்தனைக்குரியதாகும்.

''பாட்டாளிக் கலாசாரம் மென்காற்றிலிருந்து பறித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடுக்கப்படுவதல்ல; அது பாட்டாளிக் கலாசார நிபுணர்கள் எனத் தம்மை அழைத்துக் கொள்ளும் சிலரின் கண்டு பிடிப்புமல்ல. அது முழுக்க அர்த்தமற்றதாகும். முதலாளித்துவ, நிலவுடைமை, அதிகாரக் குழுவாட்சிச் சமூக ஆதிக்கத்தின் கீழ் மனித குலமானது சேகரித்துக் கொண்ட அறிவுக்களஞ்சியத்தின் தர்க்கரீதியான வளர்ச்சியாகவே பாட்டாளிக் கலாசாரம் அமையும்.''

எனவே, முன்னையோர் அனுபவங்களையும் முறைகளையும் முற்றிலும் புறக்கணித்துவிடல் என்பது ஏலாது. அதே வேளையில், முன்னோர் முறையினை இக்காலத்தவரும் தொடர விரும்பினாற்றான் அது மரபாகும். மரபுகளைப் பற்றி ஆய்ந்த அறிஞர் மரபுகள் இருப்புடைத்தாவது அவை புளக்கத்தில் இருப்பதனாலேயே என்றும் அவற்றின் புளக்கம் மானிடம் சார்ந்தது என்றும் மிகுந்த மாறுதல்களை அடைவது என்றும் கூறுவர்.

ஆகவே, மரபு என்பது எக்காலத்திலும் ஒரே மாதிரியாக இருக்கும் ஒன்றாக முடியாது. வாழ்க்கை விரிந்து வளரும்போது அதற்கேற்ப மரபும் இடங்கொடுத்து இணங்கிப்போக வேண்டும். இடங்கொடுத்து இணங்கிப்போக மறுக்கும் மரபு மாற்றப்படும் அல்லது ஒதுக்கித் தள்ளப்படும். ஆனால், தமிழ் மரபு உட்பட்ட சகல மொழி இலக்கிய மரபுகளும் வாழ்க்கையின் விரிவுக்கும் வளர்ச்சிக்கும் அமைய நெகிழ்ந்தும் இணங்கியும் வந்திருப்பதை இலக்கிய வரலாற்றைச் செவ்வனே உணர்வோர் அறிவர்.

இச்சந்தர்ப்பத்தில்,''மாறுதல் இந்த ஜகத்தின் முதலாவது விதி. மாறுதல் என்றால் எல்லாவற்றையும் ஒரேயடியாக மாற்றிவிடுவது என்று அர்த்தமில்லை. நல்ல அர்த்தமுள்ள அம்சங்களை வைத்துக்கொண்டு பயனில்லாத கெட்ட அம்சங்களை மாற்ற வேண்டும். நமது பூர்வீகர்களுடைய வழிகளில் இந்தக் காலத்திலே நமக்கு உதவக்கூடிய அம்சங்களை மாத்திரம் வைத்துக் கொண்டு, பயனில்லாதவைகளை மாற்றுவதனால், நமக்கு முன்னோர்களிடம் பக்திக் குறைவு ஏற்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக அர்த்தமில்லை. ஒருவன் தனது பூர்வீக ஆஸ்தியிலே நல்ல களனிகளையும் தோட்டங்களையும் வைத்துக்கொண்டு முள்ளும் புதருமாக இருக்கும் காட்டுவெளியை நன்றாக வெட்டித் திருத்தினால், அவன் பிதுர் துரோகியாவானா?'' என்று மகாகவி பாரதி எழுதியிருப்பதும் எண்ணிப் பார்க்கத் தக்கதாகும்.

மானிடத்தின் முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டையாகும் மரபுகளை மானிட வளர்ச்சியில் ஆர்வமுள்ள கலைஞர்கள் புறக்கணித்து வந்தமையினையும் வரலாறு உணர்த்தும். மரபுகளில் மாற்றங்களையும் புனரமைப்புக்களையும் கண்டவர்களும் அவற்றைப் புறக்கணித்துவிட்டுப் புதிய ஊற்றுக்களைத் தொட்டவர்களுமான இலக்கிய கர்த்தாக்களே இலக்கிய வரலாற்றின் மைல்கற்களாய் அமைவதை அவ்வரலாறு துலக்கும். அவர்களே குறிப்பிடத் தக்காராவரன்றி, மரபுகளை வெறுமனே ஏற்றுக்கொண்டு கலையுலகுக்கு வெளியிலான மோதல்களின்போது நடுநிலை வகிப்போரல்லர்.

எனவே, மாற்றங்களையும் புதுமைகளையும் நிலைநாட்டும் இலக்கிய கர்த்தாக்களைப் புறக்கணித்துவிடல் சாலாது. இலக்கியம் கண்டதுக்கே இலக்கணம் கூறப்படும். இலக்கிய கர்த்தாக்கள் பழையவற்றை விலக்கும் போதும், புதியவற்றைக் காணும்போதும், இலக்கணங் காண்போர் அவற்றைக் கருத்தில் எடுத்து அமைதிகாணல் வேண்டும். அவ்வாறின்றிப் பழைய விதிகளைத் தூக்கிப் பிடித்துப் புதிய மாற்றங்களைப் புறக்கணிப்பதே இலக்கணக்காரரின் பணியெனிற் காலத்துக்குக் காலம் பல இலக்கண நூல்கள் எழுந்திரா; இலக்கண மரபெனப் பேசப்படவும் ஒன்றிராது.

வரலாற்றுணர்வற்றோர் மரபைப் பற்றிப் பேசுவது ஆபத்தாகும். என்றோ வகுக்கப்பட்ட விதிகளுக்கிணங்க வாழ்வும் மொழியும் இலக்கியமும் அமைய முடியுமென எண்ணுதல் வரலாற்றுணர்வற்றோர்க்கே இயலும். அது எவ்வாறாயினும், வாழ்வானது வழங்காதவைகளை விலக்கியும் வழங்குபவைகளைப் போற்றியுமே செல்லும். முன்னோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையாயினும், அது பின்னோர் வழக்குக்கிணங்கினாலன்றி வாழும் மரபாதல் இயலாது. இறந்ததற்கு உயிர் தருதலோ பிறத்ததற்கு உயிர் மறுத்தலோ இலக்கணக்காரர்க்கு இயலாது. இவ்விடத்து வழி நூலைப்பற்றிய பவனந்திமுனிவர் சூத்திரத்தையும், அதற்குக் காணப்பட்டுள்ள உரையினையும் நோக்குதல் பயனுடைத்தாகும்:

''முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோர் வேண்டும் விகற்பங் கூறி
அழியா மரபினது வழிநூலாகும்.''

''.........பின்னோன் வேண்டும் விகற்பங் கூறலாவது, பழைய இலக்கணங்களாகி இக்காலத்து வழங்காதவைகளை இறந்தது விலக்கலென்னும் உத்தியினாலே விலக்கியும், புதிய இலக்கணங்களாகி இக்காலத்து வழங்குபவைகளை எதிரது போற்றலென்னும் உத்தியினாலே தழுவியுங் கூறுதன் முதலியன.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கிய வடிவங்கள்

விண்ணிலும் மண்ணிலும் கடலிலும் இதுவரை எத்தனையோ புதுமைகளைக் கண்டுபிடித்த மனித வரலாற்றிலே மனிதன் கண்டுபிடித்த அனைத்திலும் இணையற்றதாய்த் திகழ்வது மொழியாகும். மனிதகுல விளக்கத்துக்கும் ஒற்றுமைக்கும் உயர்வுக்கும் பயன்படும் மொழியை நிகர்த்த சாதனம் வேறில்லை. எழுத்துக்களை—அவற்றால் ஆகும் சொற்களை—அவற்றால் ஆகும் மொழியைப் பொருள் வெளியீட்டுச் சாதனமாகச் சிறப்பாகப் பயன்படுத்துவது ஒரு கலை. இருநூற்று நாற்பத்தியேழு தமிழ் எழுத்துக்களை எப்படியெப்படியோ ஆண்டு, மனித உள்ளங்களையும் உணர்ச்சிகளையும் சிந்தனைகளையும் இலட்சியங்களையும் சித்தரிக்கும் இலக்கிய வடிவங்கள் பல ஆக்கப்பட்டுள்ளன.

செய்யுளுருவிலேயே இலக்கியம் வடிவம் பெறும் என்ற எண்ணம் பல நூற்றாண்டுக் காலமாக எல்லா மக்களிடையேயும் நிலவி வந்திருக்கிறது. காலத்தால் முந்தியவையான சங்க காலச் செய்யுள் இலக்கியங்களை எடுத்து நோக்கினால், அவை அகம், புறம் என இரு பெரும் பிரிவுகளாக அமைந்திருப்பதைக் காணலாம். இவ்விரு துறைகளையும் சார்ந்த அனுபவ உணர்வுகளை அழகோடு வெளியிட ஏற்ற வாகனங்களாகப் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவங்கள்—இலக்கிய வகைகள் கையாளப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். காதல் அனுபவங்களேயும் புறக்கீர்த்திகளே யும் நேரிடையாக நயந்து பாடுவதோடமையாது. தோழி கூற்று, சிறைப்புறக்கூற்று, உடன்போக்கு, கண்டோர்கூற்று, காமம் மிகுந்த கழிபடர் கிளவி, பாடாண்திணை, வாகை, ஆற்றுப்படை என எத்தனையெத்தனையோ வகைகளே அக் காலப் புலவர்கள் வகுத்திருப்பதை ஆழ்ந்து நோக்கும்போது, அப்புலவர்கள் தம் அனுபவங்களேத் தாங்கி நிற்கத் தகுந்த பல வடிவங்களேப் புனைந்து ஆண்ட சிறப்புத் தெளிவாகும்.

''காலத்துக்கேற்ற வகைகள்'' என்ற மகாகவி பாரதி கூற்றுக்கிணங்க இலக்கிய வடிங்களும் இலக்கிய வரலாற்றின் ஒவ்வொரு கால கட்டத்திலும் அவ்வக்காலத்து அநுபவ வெளியீட்டுத் தேவைகளேப் பொறுத்துத் தோன்றியும் வளர்ந் தும் மாறியும் மறைந்தும் வந்திருக்கின்றன. ஒவ்வொரு செய் யுளேயும் ஒவ்வோர் உரைநடை இலக்கியத்தையும் இலக்கிய வடிவமென்றே கொள்ளக் கூடுமெனினும், காலத்துக்குக் காலம் தலைமை பெற்ற சில முக்கிய இலக்கிய வடிவங்களே மட்டும் இங்கு பார்க்கலாம்.

சங்க காலத்தில் எழுந்த இலக்கிய வடிவங்களுட் சிறப்பு மிக்கப் பொருட்டொடர் நிலே இலக்கிய வடிவம் ஆற்றுப்படை என்றே தோன்றுகிறது. சங்கமருவிய காலத்தில் ஒழுக்க, அறக் கருத்துக்களேத் தனிச் செய்யுட்களில் அமைத்துக் கூறுவதே பெரு வழக்காயினும் சில வாழ்க்கை முறைகளேயும் ஒழுக்க சீலங்களேயும் உண்மைகளேயும் வற்புறுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டெழுந்த, காவியங்கள் என்று பாராட்டப் படும் தகுதி பெற்ற, பொருட்டொடர் நிலே இலக்கியங்களான சிலப்பதிகாரமும் மணிமேகலேயும் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டிவையாகும். சங்கமருவிய காலப் பிற்பகுதியிலே பக்தியியக்கத்துக்கு வித்திட்ட காரைக்காலம்மையார் பாடிய பதிகமும் அந்தாதியும் இரட்டை மணிமாலேயும் ஒரே உணர்ச்சி யைப் பல செய்யுட்களில் வெளியிடும் தொடர்நிலே இலக்கியங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாகும். சொற்றெடர் நிலேயாக அமைந்தவற்றிலும் பார்க்கப் பொருட்டொடர் நிலேயாக அமைந்த இலக்கிய வடிவங்களே சிறப்பு மிக்கவையாக விளங்குகின்றன.

பக்தியியக்கம் உயிர்த் துடிப்புடன் நடை பெற்ற பல்லவர் காலப் பகுதியிலே இலக்கியப் பொருள் மரபும் வளர்ச்சி பெற்றது. இக்காலத்திலே நாயன்மார்களும் ஆழ்வார்களும் தம் பக்தியனுபவங்களேச் செம்மையாக வெளியிடப் பதிகம், மடல், எழுகூற்றிருக்கை, கோவை, உலா, கலம்பகம், அந்தாதி, மறம், திருப்பள்ளியெழுச்சி, திருவெண்பாவை, ஊசல், தூது முதலிய பல வடிவங்களேப் பயன்படுத்தியிருக் கின்றனர். பல வேறுபட்ட இலக்கிய வடிவங்களே உயிர்த் துடிப்புடன் கையாண்டவர்கள் என்று சிறப்பாகக் குறிப்பிடப் படும் தகுதி பெற்றவர்கள் மாணிக்கவாசகரும் திருமங்கை யாழ்வாரும் எனலாம்.

உலகியற் சாதனேகள் குறிப்பிடத்தக்களவு நிகழ்ந்த சோழப் பேரரசுக் காலத்திலே அச்சாதனேகளேயும் அவற்றின் பெருமைகளேயும் விஸ்தாரமாகக் கூறும் பல இலக்கிய வடிவங்கள் கையாளப்பட்டன. அவற்றுட் சில சமபக் கருத்துக் களேயும் கூறின. காவியம், பரணி, உலா, பிள்ளேத்தமிழ், மெய்க்கீர்த்தி, புராணம் முதலியவை இக்காலத்திலே தலேமை பெற்ற இலக்கிய வடிவங்களாகும்.

சமயச்சார்பும் தத்துவச் சார்பும் வித்துவத்திறனும் காட்டு வனவாக விசயநகர நாயக்கர் காலத்திற் பல இலக்கிய வடிவங் கள் கையாளப்பட்டன. உலகியலேப் பாட முன்பு கையாளப் பட்ட வடிவங்களுக்குட் சமயக் கருத்துக்களேப் புகுத்திக்காட்ட இக்காலப் புலவர்கள் முனேந்தனர். வடிவங்களேக் கெட்டித் தனமாகக் கையாள முனேந்த இக்காலப் புலவர் பலர் உள் ளடக்கச் சிறப்பைக் கவனிக்கத் தவறிவிட்டனர் என்பது இலக்கிய ஆய்வாளர்களின் பொதுவான கருத்தாகும். இக் காலப் பிற்பகுதியிற் பொதுமக்களின் யதார்த்த வாழ்வினேத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தழுவிய எளிமையும் இனிமையும் தழுவிய குறவஞ்சி, பள்ளு, நொண்டி, நாடகம் போன்ற இலக்கிய வடிவங்கள் தோன்றின.

ஐரோப்பியர் காலத்திலே முன்னைய புராணம், பிள்ளைத் தமிழ், தூது, அம்மானை, அந்தாதி முதலிய இலக்கிய வடிவங்கள் கையாளப்பட்டாலும் அவை முக்கியத்துவம் இழந்தன. சமூக, அரசியல், பொருளாதார நிலைகளுக் கேற்ப, தன்னேரில்லாத் தலைவரும் தெய்வங்களும் இலக்கியத் துக்குப் பொருளாயமையும் நிலைமாறி, சாதாரண மக்களும் அவர்களது வாழ்க்கைப் பிரச்சினைகளும் இலக்கியத்துக்குப் பொருளாயின. மானிட உரிமைகள் பெருக, மானிட சக்தி யின் பலமும் தேவையும் கூடுதலாக உணரப்பட, அம் மானிடத் துக்குத் தேவையான விடயங்கள் இலகுவிற் புரிந்துகொள்ளப் படத்தக்க நிலையில் வெளிவரவேண்டியது தவிர்க்க முடியாத தாயிற்று. எளிய நடையிலே செய்யுட்கள் இயற்றப்பட்ட போதிலும் செய்யுள் இதுவரை கோலோச்சிய இலக்கிய உலக ஆட்சிபீடத்தை உரைநடை வென்று கொண்டது. பரமார்த்த குரு கதையினை வீரமாமுனிவர் எழுதிய காலமுதல் உரைநடை இலக்கியம் தமிழகத்திலே மேனிலை பெற்றது. உரைநடையி லமைந்த சிறுகதையும் நாவலும் நாடகமும் தலைமை பெற்றன.

இலக்கிய வடிவத்தைப்பற்றிப் பேசும்போது ஓர் அச்சம் தோன்றுகிறது. வடிவ அமைப்பையும், சிறப்பையும், தோற்றத்தையும், வளர்ச்சியையும்பற்றி ஆராய்பவர்கள் அவ் வடிவத்தை வாகனமாகப் பயன்படுத்தி வெளிக்கொணரப்படும் விடயத்தைப்பற்றி எண்ணிப் பார்க்கத் தவறி விடுவார்களோ என்பதுவே அந்த அச்சமாகும். எடுத்துக்கொண்ட விடயத் தைக் கலையழகுடன் இலக்கியமாக உருவாக்கப் பயன்படுவதே வடிவமாகும். செய்யுட்கள், பிரிவுகள், ஏனைய விபரங்கள் பற்றிய வரையறைகள் வெளித்தோற்றம் பற்றியனவாகும். யாக்கப்பட்ட நோக்கம் அல்லது யாருக்கு என்ன எவ்வாறு கூறப்படுகின்றதென்பதே முக்கியம். இலக்கியத்தின் உயிர் நாடியும் அதுதான். உலாப் பிரபந்தத்தின் இலக்கணத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்புகுந்த வெண்பாப்பாட்டியல், பேதை, பெதும்பை முதலிய எழுபருவ மகளிர் மயங்க உலா வந்தான் ஒருவன் என்று கலிவெண்பாவிற் பாடப்படுவது அது என்கிறது.

பொதுவாக நோக்கும்போது, வழக்கிலிருந்த இலக்கிய வடிவங்களிற் கூறப்பட்ட சில செய்திகளையும் கையாளப்பட்ட யாப்புக்களையும் பற்றிய பட்டியல்களாகவே இப்பாட்டியற் சூத்திரங்கள் அமைந்திருக்கின்றன. வழங்கிய இலக்கிய வடிவங்களின் உள்ளடக்கமான நோக்கங்களையோ, அடிநாத மான பொருள் மரபுகளையோ எத்தகைய சூழ்நிலையில் எத்தகைய தேவைகளை நிறைவேற்ற அவை தோன்றின வென்பதையோ இப்பாட்டியல் நூல்கள் விண்டுரைக்கவில்லை. அவற்றின் இலக்கண வரையறைகள் பெரும்பாலும் வட மொழிக் காவிய அலங்கார இலக்கணங்களைப் பின்பற்றியவை என்றே தோன்றுகிறது. மரங்களைக் காடெனக் கருதி மயங்கும் ஒரு நிலையை அவற்றில் அவதானிக்கலாம். காட்டினியல்பைக் கேட்டால், இன்னின்ன மரங்களையுடையது அதுவென்று மரங்களின் பட்டியல் ஒன்றினைத் தயாரித்துத் தரும் செயலினையே அவை நினைவுபடுத்துகின்றன.

19ம் நூற்றுண்டுக்குப்பின் வரலாற்று சமூக, அறிவியல் நோக்குப் படிப்படியாக வளர்ந்து வந்தமையின் விளைவாக வரலாற்றுக் கண்ணோட்டத்திலே சமூக, அரசியல், பொருளா தார அமைப்புக்களையும் நிலைமைகளையும் உறவு முறைகளையும் உணர்ந்து அவற்றின் பின்னணியில் இலக்கிய வடிவங்கள் எழுந்த நோக்கங்களையும் அவற்றின் இயல்புகளையும் அவை பூர்த்தி செய்த தேவைகளையும் புரிந்து கொள்ளும் முயற்சி வளர்ந்து வருகிறது. அதன் விளைவாக இலக்கிய வடிவங் களைப் படைத்தவர்களின் உண்மையான புலமைத் திறனை யும் சரியாக மதிப்பிட முடிகிறது.

பாண்டிக்கோவை அகப்பொருட்டுறைகளையும் கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களையும் பாடுவதை அடிப்படைக் குறிக் கோளாகக் கொண்டதல்ல. பாண்டிய மன்னன் ஒருவனைப் புகழ்ந்துரைப்பதையே அடிப்படை நோக்கமாகக் கொண்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதையும், உலா பருவமகளிர் மயக்கத்தையும் கலிவெண் பாவையும் நம்பித் தோன்றியதல்ல; ஒரு தலைவனின் தோற்றப் பொலிவையும் கீர்த்தியையும் பாராட்ட எழுந்ததே என்பதையும், பரணி எண்ணிரி ஆயிரம் யானைகளைக் கொலை புரிந்தமையினையும் கலித்தாழிசையையும் நம்பிப் பிறந்ததல்ல; பெரும் போர்களை நடத்திய சோழப் பெருமன்னர் ஆட்சிக் காலத்திலே போர் வெற்றியை மையமாக வைத்து அரச புகழையும் ஆட்சியையும் நிலைநாட்டத் தோன்றியதே என்பதையும், பள்ளு மூத்தபள்ளி இளையபள்ளி சண்டை சமாதானங்களைக் கூற எழுந்ததல்ல; அரச புரவலரை இழந்த புலவர் கவனம் பொதுமக்கள் வாழ்வின் பக்கம்திரும்பிய வேளையிலே உலகியல் வாழ்விற் கலகலப்பையும் பிடிப்பினையும் ஏற்படுத்தும் நோக்கோடு கோவில் திருவிழாக்களில் நடிக்கப்படும் நாடகமாக-சமூக நடவடிக்கையாக உருவாகியது என்பதையும் சிறுகதையும் நாவலும் பத்திரிகை, அச்சுவாகன, ஓய்வு நேர நெருக்கடித் தேவைகளினாலன்றிக் குலமும் நிலமும் முக்கியத்துவமிழந்து தனி மனித உழைப்பும் வாழ்வும் அவனது அகப்புறப் பிரச்சினைகளும் தலைமைபெற்ற தறுவாயில் அம்மனிதப் பிரச்சினைகளைச் சித்திரிக்கும் தேவைக் கமையத் தோன்றியவை என்பதையும் இன்று உணரத் தலைப் பட்டுள்ளோம். சுருங்கச் சொன்னால், வரலாற்று, பொருளாதார, சமூக, அரசியல் நியதிகளின்படி இலக்கிய வடிவங்களும் அவற்றின் பொருள் மரபும் மாறிச் சென்ற வகையினை ஆராய்ந்து காணும் அறிவுத் தாகம் இன்று வலுத்து வருகின்றது. அதே வேளையில், எல்லாம் தமிழில் அன்றே இருந்தன, எல்லாவற்றுக்கும் தமிழில் ஆதிமூலம் உண்டு என்று கூறும் ஒரு போக்கும் சற்றுப் பிடிவாதமானதாகக் காணப்படுகிறது.

வடிவமும் அதன் உள்ளடக்கமான பொருளும் ஒன்றையொன்று தழுவியவை. வடிவம் சிறந்து விளங்கினாலும், ஓர் இலக்கியத்தின் உள்ளடக்கம் அர்த்தமுள்ளதாயும் சிறப்புப் பொருந்தியதாயும் அமையாதுவிடின் அவ்விலக்கியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைபெறுதல் சாலாது. அந்தாதி பார்த்தெழுதப்பட்ட பல அந்தாதிகளும் கலம்பகம் பார்த்தெழுதப்பட்ட பல கலம்பகங்களும் இப்படியான இன்னும் பலவும் காலகதியில் மறக்கப்பட்டுவிட்டதை இங்கு கருத்திற் கொள்ளல் வேண்டும்.

இலக்கியவடிவத்தை மதிப்பிடும்போது வெளித்தோற்றத்தை மட்டுமன்றி உள் அழகையும் நோக்க வேண்டும். வடிவத்தை மாருத, வளையாத, வளராத வெறும் சடப் பொருள் என்று நினைத்தல் ஆகாது. ஒருவன் ஒரு வடிவத்தைக் கையாளலாம், திருவுடைத் தாக்கலாம், அதன் திருவினைச் சிதைக்கலாம், உருவினை மாற்றலாம், உள்ளொளியும் ஊட்டலாம். திறமை யுள்ளவர்கள் புதியவற்றை ஆக்கவும் முடியும். உள்ளத்தில் உண்மை ஒளியற்றவர்கள் பழைய வடிவங்களிற் பழைய செய் திகளையே திரும்பத்திரும்பக் காலத்தொடர்பின்றிக் கூறி, அவ்வடிவங்களைத் தேய்க்கலாம் அல்லது மாய்க்கலாம். தமிழிலக்கிய வரலாற்றை நுணுகி நோக்குபவர்கள் இவற்றை அவதானிக்கலாம்.

வடிவங்கள் உண்மை அனுபவத்தோடு ஒட்டாதவை யாகவும் வெறும் சம்பிரதாயத் தோற்றங்களாகவும் உபயோகிக் கப்படும் போது, எதார்த்த உண்மை தழுவிய அனுபவங்களும் அவற்றுக்குத் தோதான புதிய வடிவங்களும் விரும்பி வேண்டப்படும். ஒரே வடிவத்தை எப்போதும் அப்படியே நயக்கும் தன்மையும் புதுமை நாடும் மக்களுக்கு இல்லை. உடுக்கும் உடை, இருக்கும் ஆசனம், ஓட்டும் கார் முதலிய வற்றிற் புதுமை காணும் வேட்கையுள்ள மனிதன் இலக்கிய வடிவங்களிலும் மாற்றங்களையும் புதுமைகளையும் நாடு வதுண்டு. பழைய வடிவங்களை மாற்றிப் புத்துயிரளித்தாலும் அவற்றின் பயன்பாடு குறைந்து போகலாம், கடவுட்தன்மை உடையவர்களையும் தேவர்களின் தோழர்களையும் அவதார புருடர்களையும் தலைவர்களாகக் கொண்ட வீரயுகத்துக் காவி யங்களை அடியொற்றி இக்காலத்தில் இலக்கியம் படைக்க முயல்வது பொருந்தாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறும் உலகிலே தன்னையும் தன்னைச் சூழ்ந்துள்ள மக்களையும் நிலைமைகளையும் அவதானிக்கும் மனிதனுக்குப் புதிய புதிய உண்மைகள் தோன்றும். பதிய புதிய உறவு முறைகள் புலனாகும். புதிய புதிய அனுபவங்கள் ஏற்படும். அவற்றுக்கேற்ப அவனது தேவைகளும் எண்ணங்களும் இலட்சியங்களும் மாற்றமடையும். அவற்றுக்கேற்ப இலக்கியத்தின் தேவைகளும் நோக்கங்களும் அமையும் போது இலக்கிய வடிவங்களும் தோன்றும், மாறும், மறையும். இவ்வாருகத் தோன்றியும் மாறியும் மறைந்தும் வந்துள்ள இலக்கிய வடிவங்களை எவ்வாறு நாம் வரையறை செய்தும் மதிப்பிட்டும் புரிந்து கொண்டும் உள்ளோம் என்பதையும் எண்ணிப்பார்த்தல் வேண்டும்.

தமிழ் இலக்கிய வடிவங்கள் வளர்ச்சி பெற்றமையைத் தொடர்ந்து பன்னிரண்டாம் நூற்ருண்டுக்கும் பதினெட்டாம் நூற்ருண்டுக்கும் இடையே தோன்றிய பாட்டியல் நூல்களும் வீரமாமுனிவரின் சதுரகராதியும் இவ்வடிவங்களுக்கு இலக்கணம் கூறின. அவற்றை இலக்கிய வடிவங்களை இனங் கண்டு கொள்வதற்கான முதல் முயற்சிகள் எனலாம். அவை இலக்கிய வடிவங்களை எவ்வாறு நோக்கின என்பதை அறியச் சில உதாரணங்களை நோக்கலாம்.

காவியம் பற்றிப் பேசும் பொழுது, வாழ்த்து, வணக்கம், வருபொருள், தன்னேரில்லாத் தலைவன், நாடு, நகர், மலை, கடல் வர்ணனைகள், செலவு, இகல், வெற்றி...இப்படி நீண்ட தொரு பட்டியல் தரப்படுகிறது. கோவை பற்றிக் கூறும்போது அகப்பொருளைத் தழுவிக் களவு கற்பினுக்குரிய கிளவிகளை யுடையதாய் நானூறு கட்டளைக் கலித்துறை செய்யுட்களிற் செய்யப்படுவது அது என்கிறது பன்னிரு பாட்டியல். உலாவினைப் பற்றிக் கூறப் புகுந்த வெண்பாப்பாட்டியல் ஏழு பருவ மகளிரும் மயங்கும் வண்ணம் ஒருவன் உலாப் போவதைக் கலிவெண்பாவாற் பாடுவது அது என்கிறது.

உலா, பிள்ளைத்தமிழ், பள்ளு, தூது முதலியவை பற்றி மட்டுமின்றிப்'பொருள் மரபு இல்லாப்பொய் மொழி' என்றதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் நாவல், சிறுகதை குறித்தும் தொல்காப்பியர் கூறியிருக்கிருரென்றும், அவர் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் என்றும் சிலர் இறுகப் பிடிப்பர். மனித வரலாற்று நியதிகளுக்கும் அவ்வரலாற்றைத் தழுவிய இலக்கிய வளர்ச்சி நியதிகளுக்கும் பொருந்தாத, சுயதிருப்திக்காகப் பழமை பாராட்டும் இம் மனப்பாங்கு மகிழ்ச்சிக்குரியதல்ல. காலத்துக்கேற்ற வகைகளைத் திறமையோடு அமைத்தாண்ட தமிழ்ப் புலவர்களின் சிருஷ்டியாற்றலை முறையாக மதிப்பிடுவதற்கும் அது தடங்கலாகும். அத்தகைய மனப்பாங்கின்றி இலக்கிய வடிவங்களை அவை கையாளப்பட்ட காலப்பின்னணியில் வைத்து ஆராய்வதே பொருத்தமுடையதாகும்.

சங்ககாலத்திலேயே தனியானதோர் இலக்கிய வடிவமாக வளர்ச்சி பெற்ற பெருமைக்குரியது ஆற்றுப்படை ஆகும். வழிப்படுத்தல் என்பதே ஆற்றுப்படை என்பதன் பொருள். பரிசில் பெற்ற ஒருவன் இன்னொருவனுக்கும் அப்பரிசில் பெறும் மார்க்கத்தைக் கூறுவதாக அமைவது அது. கூத்தர் பாணர், புலவர் முதலியோர் ஆட்சித் தலைவர்களிடம் பரிசில் வேண்டிச் செல்வதைச் சங்க இலக்கியங்களிற் பரக்கக் காணலாம். ஓர் ஆட்சித் தலைவனிடம் பரிசில் வேண்டிச் செல்லும் புலவன் அவனது கொடை ஆர்வத்தைப் பலவகையாகத் தூண்டுவான். கொடைச் சிறப்பால் இசை போயது அவன் குலமென விதந்து, அக்குலப் பெருமையை நிலைநாட்டுமாறு தூண்டுவான்.

தலைவனது வீரத்தையும் நாட்டையும் கொடையையும் புகழ்வான். கொடுப்பதே மறையாத புகழுக்கு உரிய வழி என்பான். தன் வறுமை நிலையைக் கூறி இரப்பான். கொடைத்திறன் குறித்துக் கேள்விப்பட்டதாக விதந்துரைப்பான். இவ்வாறு பல வழிகளைக் கையாண்ட புலவர்கள். ஆற்றிடைக் கண்ட இன்னேர் இரவலனுக்கு அதனைப் பெறும் வழி கூறும் நாடக பாவ அமைப்பினைக் கையாண்டமை குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும். புறநானூற்றிலும் பதிற்றுப்பத்திலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவராற்றுப்படையாக, விறலியாற்றுப்படையாக, பாணாற்றுப்படையாக, பொருநராற்றுப்படையாக அமைந்த செய்யுற்களைக் காணலாம்.

ஆற்றுப்படையைப் பாடாண்டிணைக்குரிய, அதாவது பாடப்படும் தலைவனுடைய கீர்த்தியைப் பாடுவதற்குரிய ஒரு துறையாகக் கூறிய தொல்காப்பியர்,

''கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோற்றிப்
பெற்ற பெருவளம் பெறுஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்'' என்பர்.

பெற்ற பரிசிலைப் பற்றியும் அதனைப் பெறவேண்டின் எவ்வழியாக யாரிடம் செல்ல வேண்டும் என்பதையும் கூறும் இவ்விலக்கியம், பாடப்படுபவரின் கொடைத்திறனையும் நாட்டு வளத்தையும் கீர்த்தியையும் சித்தரிக்க மிக வாய்ப்பானதொரு வடிவமாக அமைந்து சங்கப்புலவர் தேவையை அழகுடன் பூர்த்தி செய்தமையால் இதனை அவர்கள் விரிவாக்கி வளர்த்துக் கொண்டனர். பத்துப்பாட்டில் ஐந்து ஆற்றுப்படையாக அமைந்தன. ஆற்றுப்படுத்தப்படுபவர் பெயராலன்றிப் பாட்டுடைத் தலைவன் பெயரால் அழைக்கப்படும் திருமுருகாற்றுப் படையைப் பாடிய நக்கீரர் ஆற்றுப்படை வடிவத்தின் வளத்தை உணர்ந்து, தம் முன்னோரிலிருந்து மாறுபட்டு இறை அநுபவத்தைப் பாட அதனைத் திறனோடு கையாண்டார். அரச புகழையும் இறையருட் பெருமையையும் மட்டுமன்றிப் புதிய சாதனைகளையும் கண்டு பிடிப்புக்களையும் செய்திகளையும் கூற ஏற்ற, வளைந்து கொடுக்கத்தக்க ஒரு வடிவமாக ஆற்றுப்படை காணப்பட்ட போதிலும், நூற்றுக்கணக்கான அந்தாதிகளையும் சதகங்களையும் கோவைகளையும் பாடிய பிற்காலப் புலவர்கள் ஆற்றுப்படையினை வெகு அருமையாகவே கையாண்டுள்ளமை விந்தையானது.

சங்ககாலத்தில் ஆட்சித் தலைவர்களின் கொடைச்சிறப்பில் ஈடுபட்ட புலவர் தம் அநுபவத்தை வெளியிட உருவாக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றுப்படை வடிவத்தைப் போலவே பல்லவர் காலத்தில் அருட்சிறப்பில் ஈடுபட்ட புலவர் தம் பக்தி மிகுதியை வெளியிடக் கையாண்ட மடல் என்ற வடிவம் சிறப்புடைத்து. பக்தி வேட்கை மிகுதியை, இறைவனை அடையாதிருக்க முடியாத அவன் மேற்கொண்ட காதலின் முன் எதனையும் பொருட்படுத்தாத நிலையினைக் காட்ட மடல் ஏற்றதொரு வாகனமாக அமைந்தது.

காதலியை அடைய முடியாத தலைவன் தன்னை வருத்திக் கொள்ள, பிறரது அனுதாபத்தைப் பெற மடலேறப் போவதாகப் பயமுறுத்துவதைச் சங்க இலக்கியங்களிற் சிலவிடத்துக் காணலாம். இதனைத் தொல்காப்பியர் பெருந்திணையுள் அடக்குவர். பெண்கள் மடலேறப் போவதாகப் பேசுவதில்லை. கடல் போன்ற காமம் தோன்றிய விடத்தும் மடலேறாப் பெருமைக்குரியவர் பெண்கள் என்பார் திருவள்ளுவர். ஆனால் மடலைத் தன் அனுபவத்தை வெளியிடத்தக்க ஒரு வடிவமாக முதலில் உருவாக்கி ஆண்ட திருமங்கையாழ்வார் பெண் மடலேறப் போவதாகப் பயமுறுத்தும் பாவனையிற் பாடியுள்ளார். தன்னைத் திருமால் மேற் காதல் கொண்ட பெண்ணாக பாவனை செய்து கொண்டு அவனை அடையவியலாத ஆற்றாமை காரணமாக அவ்வாறு பயமுறுத்தும் பாங்கில் அவர் தனது சிறிய திருமடலையும் பெரிய திருமடலையும் அமைத்துள்ளார்.

அதன் விளைவாகப் பெண்கள் மடல் ஏறல் சாலுமா என்ற சர்ச்சை எழுந்திருக்குமென்று தோன்றுகிறது. தலைவன் கடவுளாயின் பெண்ணும் மடலேறலாமென்று பிற்காலப் பாட்டியல் நூல்கள் விதிவிலக்களித்தன. பெண்கள் மடலேறும் பிரச்சினையே எங்கும் அறியப்படவில்லை. தன் பக்தி அனுபவத்தை வெளியிட வாய்ப்பானதொரு வாகனமாகத் திருமங்கையாழ்வார் மடல் வடிவத்தைக் கையாண்டார் என்பதே உண்மை. திருமாலின் தோற்றப் பொலிவையும் அவதாரந் தோறும் நிகழ்த்திய சாதனைகளையும் கீர்த்தியையும் அருட்சிறப்பினையும் நயமாகச் சித்தரிக்க இவ்வடிவம் பயன்பட்டது. அவ்வாறு பயன்பட்ட சிறப்பினை நோக்காது, பெண்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடலேறுவது எவ்வாறு ஏற்கும், எவ்விடத்துப் பொருந்தும் என்ற ஆராய்ச்சியில் ஈடுபடுவது இனிய பழத்தின் உட் பொருளை ஒதுக்கி விட்டுத் தோலினைச் சுவைத்துப் பார்க்கும் செயலுக்கே ஒப்பாகும்.

விரக்திக்குப் பெயர் போன விசயநகர மன்னர் காலத்தில் மடல் வடிவம் சிற்றின்ப உணர்வுகளைத் தூண்டவும் பயன் பட்டது. இரட்சண்ய யாத்திரீகம் பாடிய கிருஷ்ணபிள்ளை, மானிடர் மீது கொண்ட காதலால் அவர்களுக்காகத் தன்னை மாய்த்துக் கொள்ளற் பொருட்டு இயேசு நாதர் உவந்து சிலுவையிலேறியதை மடலேறியதாகக் கூறுவது குறிப்பிடத் தக்க புதுமையான ஒரு கற்பனையாகும்.

பேரரசரின் மாபெரும் உலகியற் சாதனைகளைப் பாடப் பல இலக்கியங்கள் தோன்றியசோழர்காலத்திலே மாபெரும்போரிற் பெற்ற பெருவெற்றியை விஸ்தாரமாகவும் அழகாகவும் பாட அமைக்கப்பட்ட பரணி வடிவம் முக்கியமானது. கிடைக்கும் பரணிகளுக்குள்ளே தலை சிறந்ததும் காலத்தால் முந்தியதும் கலிங்கத்துப் பரணியாகும். கலிங்கத்துப் போரிற் பெற்ற வெற்றியின் விளைவாக ஜெயங்கொண்டாரால் இப் பரணியிற் பாடப்படும் பேறுபெற்ற குலோத்துங்கனைப் பாடற் பெரும் பரணி தேடற்கருங்கவி கவிச்சக்ரவர்த்தி பரவ என்று ஒட்டக் கூத்தர் பாராட்டுவதை நோக்கும்போது பரணி பாடப்படும் புகழ் மிக உயர்ந்ததாக அக்காலத்திற் கருதப்பட்டமை தெளி வாகும்.

பரணியின் அமைப்பையும் இசைக்கும் நடனபாவங் களுக்கும் பொருந்திய செய்யுள் நடையையும் வேறு பல அகப் புறச் சான்றுகளையும் நோக்கும்போது, பெண்கள் மற்றப் பெண்களையும் துயிலெழுப்பிப் பெரும் போரில் வென்ற வேந்தன் கதையை மக்கள் முன்னிலையில் ஆடி நடிக்கும் வகையில் அது அமைந்திருக்கிறதென்று தோன்றுகிறது. இவ்வாறு நாடக வடிவில் அமைந்த பரணி, மன்னன் புகழை யும் வீர உணர்வையும் வளர்க்க வல்ல உன்னதமான ஒரு கருவியாகக் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்கால வழக்கிலும் செய்யுளிலும் காணப்பட்ட சில நிகழ்ச்சிகளை ஒருமுகப்படுத்தி உலகியற்போர் வெற்றி பாட அமைந்த இவ் வடிவத்தை, தக்கன் வேள்வியை வீரபத்திரக் கடவுள் அழித்த வரலாற்றைப் பாட ஒட்டக்கூத்தர் கையாண்டார். அவ்வாறு புராண நிகழ்ச்சியைப் பொருளாகக் கொண்டமைந்த தக்கயாகப் பரணியிலும் சோழர் காலத் தேவைக்கிணங்க இரண்டாம் இராசராசன் புகழ் சார்த்துவகையாற் பாடப்படுகிறது. சோழப்பேரரசு சாய்ந்த பின் உலகியற் சாதனைகளாற் றூண்டப்படாது ஆத்மீகத் துறையில் நாட்டங்கொண்ட புலவர், ஞானவாசிரியர்களும் கடவுளரும், அறியாமை, பாசம், மோகம் முதலியவற்றையும் அரக்கரையும் வென்றமையைப் பாடப் பரணியிலக்கிய வடிவினை உபயோகித்தனர். பரணி வடிவத்துக்குப் பொருந்தக் கூடியவை என்று கருதிய விடயங்களைப் பிற்காலப் புலவர் அதன் மீது செயற்கையாகத் திணிக்க முனைந்த போது, போர்க்களச் சாதனையைப் போற்றவெழுந்த பரணி தன் அடிப்படையையும் வலுவையும் தேவையையும் இழந்தது.

தலைவனொருவனின் கீர்த்தியையும் மயக்கும் வசீகரத்தையும் வர்ணிக்க ஏற்றதாக உருவாக்கப்பட்ட வடிவம் உலாவாகும். ஏழு பருவமகளிர் மயங்கும் வகையில் ஒருவன் உலா வருதலைக் கலிவெண்பாவிற் பாடுவது உலாவென்கிறது வெண்பாப் பாட்டியல். உலா இலக்கியத்தின் முதனிலை பாடப்படும் தலைவனது குடிப்பிறப்பு, நீதிமுறை, ஈகை முதலியவற்றையும் அவன் உலாப் புறப்பட்டுச் செல்வதையும் வர்ணிக்க, பின்னெழுநிலை அவனைக் கண்டு மதிமயங்கிய எழு பருவ மகளிர் செயல்களையும் அவர்கள் தலைவன் நலம் பாராட்டுதலையும் சித்தரிக்கும். அதனை மேலெழுந்தவாரியாக நோக்கும் போதே தலைவனது கீர்த்தியையும் கவர்ச்சியையும் பாட எழுந்ததென்பது புலனாகும்.

ஆயினும், பருவமகளிர் தலைவன்மீது மோகம் கொள்வதாகப் பாடப்படுவதை வைத்துக்கொண்டு, அது ஒரு தலைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமமாகையாற் பெண்பாற் கைக்கிளையின் பாற்படும் என்றும், கற்புடைய பெண்டிருக்கு அது சாலாதென்றும் இலக்கணப் புலவர் அங்கலாய்த்தனர். அவ்வாறு மோக மேலீட்டால் மயங்குவது பொதுமகளிரேயென்று சமாதான முரைத்தார் நச்சினார்க்கினியர். ஆனால் மனம் பறிகொடுத்து மயங்குவது பொது மகளிர் என்பதற்கு உலா இலக்கியங்களிலோ, அவற்றுக்கு இலக்கணம் வகுத்த பாட்டியல் நூல்களிலோ சான்றில்லை. அத்தோடு உலா பெயர்சுட்டிப் பாடுவது தலைவனை யேயன்றிப் பெண்களையல்ல. அதுமட்டுமன்றிப் பொதுமகளிர் கண்டு மயங்க வீதியிற் கம்பீரமாகப் பவனிவருவதாகப் பாடுவது, தலைவனது பெருமையையும் தோற்றத்தையும் ஒப்பற்றவையாகக் காட்ட உதவாது. பொது மகளிரைத் தம் தோற்றப் பொலிவாலும் கீர்த்தியாலும் கவர்வது தேவர்களுக்கும் அரசர்களுக்கும் சிறப்புச் சேர்ப்பதாகுமா என்பது கேள்வி.

புகழைக் கேட்டிருந்த பெண்டிர் அதற்குரியாரைக் கண்ட போது மால்கொண்டு மயங்குவதாகப் பாடுவது, தலைவர் பொலிவையும் புகழையும் உயர்வு நவிற்சியாகக் காட்டும் ஓர் இலக்கிய உத்தியென்பதை உணராது, உண்மையிலேயே பெண்கள் நிறையிழந்ததாக அலமருவது இலக்கியச் சிறப்பையும் மதிப்பிடத் தடங்கலாகும். பல்லவர்காலப் பகுதியிலே தோன்றிய திருக்கைலாய ஞான உலா சிவன் உலாச் சென்றதை வர்ணிக்கும். இவ்வடிவம் சோழர்காலத்தில் அவனி நாரணர்களாக மதிக்கப்பட்ட அரசரைப் பாடப் பயன்பட்டது. பிற்காலத்திலே தோன்றிய உலாக்கள் அநேகமாகத் தெய்வங்களையும் தலங்களையும் பாடின. பழைய இலக்கிய மரபுகளைக் கைக்கொள்ளும் ஆசையும் தனிமனித வழிபாட்டில் ஈடுபாடும் இருக்கும்வரை இத்தகைய நூல்கள் ஆங்காங்கு தோன்றலாம்.

தன்னேரில்லாத் தலைவர்களை நம்பிவாழ்ந்த நிலைமாறித் தம் உலகியல் வாழ்வை ஊர்க்கோவில்களோடு இணைத்துக் கொண்ட மக்கள் வாழ்வின்பாற் புலவர் கவனம் திரும்பிய போது, கிராமிய வாழ்வினை, அடித்தளமாகக் கொண்ட எளிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய நாடக வடிவினதான பள்ளுக்களும் குறவஞ்சிகளும் நொண்டி நாடகங்களும் தோன்றின. பதினெட்டாம் நூற்றுண்டையொட்டி ஆலயங்களிலே நடிக்கப்பட்ட இவை சமயத்தையும் இலக்கியத்தையும் பொது மக்கள் சொத்தாக்கின. உலகியல்வாழ்விற் கலகலப்பை ஏற்படுத்துவதோடு சாதாரண மக்களுக்குச் சமய ஈடுபாட்டினை ஏற்படுத்தும் அம்சங்களையும் இவை கொண்டிருந்தன. சமுதாயத்திற் கீழ்மட்டத்தினரெனக் கருதப்படும் குறவர் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்ட குறவஞ்சி ஜனரஞ்சகமான முறையிலே தலப் பெருமைகளையும் பாட உகந்ததாயமைந்தது.

நிலத்தில் உழைக்கும் பள்ளர் தம் வாழ்க்கையையும் நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் சுவை படச் சித்தரிப்பதோடு தலப் பெருமையும் கூறுவது பள்ளு. நிலமானிய அமைப்பினதும் நிலச் சுவாந்தாரினதும் பலவீனங்கள் கிண்டல் செய்யப்படுவது அவதானிகத்தக்கதாகும்.

நொண்டிச் சிந்து யாப்பிலே பாடப்படும் நொண்டி நாடகம் பொதுவாகத் தீய செயல்களின் பயனாகக் கைகால் சேதிக்கப்பட்டுத் துன்புற்ற ஒருவன் தெய்வத்தை வழிபட்டதன் பயனாகக் கைகால் பெற்றுத் தெய்வத்தைப் போற்றுவதாக அமையும். துன்பம் நீங்கக் காரணமாகும் தெய்வதலத்துக்கும் இது புகழ் சேர்ப்பது. ஒருவனேபாடி நடிக்கும்காரணத்தால் இது ஒற்றைக்கால் நாடகம் என்றும் அழைக்கப்படும். பலர் தோன்றி நடிப்பது பிந்திய வளர்ச்சியாயிருக்க வேண்டும். தன் வரலாற்றைக் கூறும் நொண்டி நகைச்சுவையாலும் சிருங்கார வர்ணனையாலும் தன் சாகஸங்களைச் சுவைபடக் கூறுவதாலும் சபையோருக்கு அலுப்புத் தட்டாத வகையிற் கதையினை நடாத்திச் செல்வான். இடையிடையே சமூகத்தில் மதிப்பான இடம் பெற்றுள்ளவர்களைக் கிண்டல் செய்வதும், ஆட்சியதிகாரிகள் லஞ்சம் போன்றவற்றினுல் முறை தவறுவது சுட்டப்படுவதும், சமூக ஒழுக்கவீனங்களும் நெறி பிறழ்ந்த செயல்களும் காட்டப்படுவதும், தவறு செய்தவர்களும் திருந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்வாழ்வு பெறலாகுமென்ற நம்பிக்கை ஊட்டப்படுவதும் நொண்டி நாடகத்திற் கவனிக்கத் தக்கவையாகும்.

காலத்தின் தேவைகளையும் கூற எடுத்துக் கொண்ட விடயத்தையும் ஆசிரியனது நோக்கையும் பொறுத்தே பொது வாக இலக்கிய வடிவங்கள் நிர்ணயமாகும். இந்த ஜனநாயக யுகத்திலே மனித சமத்துவத்திலும் மனிதப் பிரச்சினைகளிலும் நாட்டம் செலுத்தப்படும் நேரத்திலே ஒப்பாருமிக்காருமற்ற அமானுஷ்ய சாதனைகளைக் கற்பனையழகுடன் பாடும் காவியங் களும் உலாக்களும் தோன்றுமென எதிர்பார்க்க முடியாது. இன்று சாதாரண மனித வாழ்வையும் உறவு முறைகளையும் பிரச்சினைகளையும் பொருளாகக் கொள்ளும் சிறு கதைகளும் நாவல்களும் நாடகங்களுமே பெரிதுவக்கப்படுகின்றன.

சிறுகதையும் நாவலும் மேல்நாட்டார் நமக்கு அறிமுகப் படுத்தியவை எனலாம். சிறுகதை அதன் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் தமிழிலே கணிசமான வளர்ச்சி பெற் றுள்ளது. உரைநடை ஆக்க இலக்கியம் செய்யுள் இலக்கி யத்தை முக்கியத்துவத்தில் முந்திக் கொண்ட வேளையிலே செய்யுட்துறையில் மூழ்கியிருந்த பல மேனாட்டவரும் கீழ்நாட்ட வரும் புனைகதைத்துறையுட் புகுந்தது போலச் சமீபகாலத்திற் பல தமிழ் எழுத்தாளர் சிறுகதையுலகிலிருந்து நாவலுலகினை நாடுகின்றனர். குறுநாவல்களிலும் நாவல்களிலும் கூடுதலான ஆர்வம் காட்டப்படுகிறது. சமகால மனிதவாழ்வையும் மன ஓட்டங்களையும் பிரச்சினைகளையும் ஆழமாகவும் அகலமாகவும் உணர்ந்து கொண்ட அனுபவ விரிவின் விளைவானதாகவே அது இருக்கவேண்டும்.

ஒவ்வொரு தேசத்தின் குணரசானுபவமளவில் நாகரீ கத்தை அளவிட்டுக் காட்டுவது என்று பாரதி போற்றும் நாடகம், தமிழ் நாட்டிலும் சமயச்சடங்குகளின் அடியாகத் தோன்றி, ஆட்டத்தையும் பாட்டையும் தழுவி, சமயப்பிரசாரக் கருவியாகப் பயன்பட்டு, உரைநடை உருப்பெற்றுச் செல் வாக்குமிக்கச் சமூக நடவடிக்கையாகியுள்ளது. பதினெட்டாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்ருண்டுக்குப் பின் விசேட வளர்ச்சிபெற்ற தமிழ் நாடகம் மக்கள் மத்தியில் மதிப்புப் பெற்றிருந்த காவிய புராணக் கதைகளின் அடித்தளத்தில் ஒழுக்க நெறிகளையும், சமய உணர்வையும் பரப்பப் பயன்பட்டது. தேசியவிடுதலை இயக்கங்களுக்கும், சமூக சீர்திருத்த இயக்கங்களுக்கும், அரசியற் பிரச்சனைகளை அலசியுணர்த்தவும் வாழ்வை வளப்படுத்தவும் இன்பமுடைத் தாக்கவும் இன்று பயன்படுத்தப்படுகிறது.

காலத்தின் தேவைகளுக்கமைய ஓரங்க நாடகம், வானொலி நாடகம், தொலைக்காட்சி நாடகம், வசனகவிதை முதலிய புதிய பல வடிவங்களும் தோன்றுகின்றன, வளர்கின்றன. தமிழ் இலக்கிய உலகம் பல்வேறு வடிவங்கள் சிறந்த ஒன்ருய் மிளிர்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநூல்கள் எழுந்தன

சங்க காலத்துச் செய்யுட்கள் பெரும்பாலும் காதலையும் போரையும் அடித்தளமாகக் கொண்டே எழுந்தன. அறவுரைகள் ஆங்காங்கே சிலவிடங்களிற் காணப்படலாம். ஆனல் நீதியையும் ஒழுக்கத்தையும் மட்டும் வற்புறுத்தும் செய்யுட்கள் இல்லை. சங்கமருவியகாலம் எனப்படும் காலத்திலே அறநீதிகளைப் பெரிதும் வற்புறுத்தும் பலநூல்கள் எழுந்தன.

''பாசிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
நாரரி தேறன் மாந்தி மகிழ்சிறந்து''

என்று முப்பெரும் வேந்தர்கள் முன்னிலையில் முதுபெரும் பெண் புலவரான ஔவையார் பாடிய நிலைக்கு முற்றும் மாறுபட்டு,

''இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.''

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவர் அறமுரைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. தமிழிலக்கிய வரலாற்றிலே ஏற்பட்ட இந்த மாற்றத்திற்குக் காரணங்கள் இல்லாமலில்லை.

மாற்றத்தையும் வளர்ச்சியையும் நிர்ணயிக்கும் சக்திகளிற் சூழ்நிலை மிக முக்கியமானது. மேலிருந்து தூய்மையாகப் பெய்யும் நீர் வேறுபட்ட வாயுக்களுடன் கலந்து வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தில் சேரும்போது அவற்றின் இயல்பை அடைந்து விடுவது போல மனிதரும், சூழலுக்கேற்பவே அறிவு பெற்று வளர்வர் என்று வள்ளுவர் கூறியது இன்றைய அறிவியலாரும் ஏற்றுக் கொள்வதோர் உண்மை. காலச்சூழலைப் புறக்கணித்துவிட்டுக் கலையோ இலக்கியமோகூட உருவாக முடியாது. கலையும் இலக்கியமும் தோன்றும் கால அநுபவங்களைக் கொண்டே உருவெடுக்க வேண்டும். சமுதாய நிலையினின்றும் முற்றும் மாறுபட்டு எந்தக் கருத்தோ கற்பனையோ சிந்தனையோ திட்டமோ உருவாகி வளர முடியாது. கற்பனுவாத சோசலிசம் பற்றி நூல்கள் எழுதியவர்களும் தாம் வாழ்ந்த சமுதாயத்தைச் சிந்தனையின் அடித்தளமாகக் கொண்டே மாற்றத்தைக் கற்பனை செய்தனர். பிளேட்டோவின் குடியரசும் அப்படித் தான். அவரது இலட்சியக் குடியரசு வெறும் சூனியத்திலிருந்து பிறக்கவில்லை. தன் காலத்தில் இருந்த சமுதாயத்தில் அவர் கண்ட குறைகளே அவர் அத்திட்டம் வகுக்க அடிகோலின. கம்பர் கண்ட இலட்சிய நாடும் அப்படித்தான் இருக்க வேண்டும். 1830-ம் ஆண்டைச் சுற்றியும் தொடர்ந்தும் எழுந்த அநேகமான ஆங்கில நாட்டு இலக்கியங்களிற் சமுதாய இழிநிலை கண்டிக்கப்படுகிறது. தொழிற் புரட்சியின் விளைவாக அதைத் தொடர்ந்து தொழிற்சாலைகளைச் சுற்றி நெருங்கி விட்ட மக்கள் வாழ்க்கை முறைகளில் ஏற்பட்ட சீரழிவுகளும் ஒழுக்கக் கேடுகளுமே அதற்குக் காரணம். குறைகள் பெரிதாக இருந்தால் அவற்றைக் கண்டித்து நிவர்த்தி செய்யும் போக்கில் நூல்கள் எழலாம். நிறைகளைவிடக் குறைகளே மனித மனத்தை அதிகம் உறுத்தும். வாழ்க்கைப் போக்கை நெருங்கி ஒன்றி உணரும் திறமை பெற்றவனும், சமுதாயத்தின் மேல் அன்பும் அக்கறையும் கொண்டவனுமாகிய கலைஞனையோ எழுத்தாளனையோ அவை எவ்வளவு உறுத்துமென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. நாட்டின் அல்லது சமுதாயத்தின் நிலைமைகளையும் தேவைகளையும் அங்கு தோன்றும் நூல்கள் பிரதிபலிக்கும் என்பதையே, ''அவ்வக் காலத்திற்கேற்ற ஒழுக்கமும் நூலும்'' என்று மகாகவி பாரதி கூறுகிறான்.

0 1 DEC 2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கமருவிய காலப் பகுதியில் அறமுரைக்கும் நூல்கள் எழுந்ததற்குக் காரணமான சமுதாயச் சூழ்நிலையைப் பற்றி ஆராய அறத்தைப் பற்றியும் அதன் வளர்ச்சி பற்றியும் அறிந்திருக்க வேண்டும். மனித சமுதாயத்தின் நடத்தை, ஒழுக்கம், வாழ்க்கையின் நோக்கங்கள் முதலானவைகளைப் பரிசீலனை செய்வனவே அறநூல்கள் எனலாம். மனித இனத்தின் நடத்தை, ஒழுக்கம் என்பன எப்போது பரிசீலனை செய்யப் படும்? கண்டதே காட்சி கொண்டதே கோலமென இன்பத்தைத் தேடிக்காணும் சூழ்நிலையில் அது நடக்கவியலாது. சமுதாயத்திலே குறைகளில்லாத தெளிவான போக்கு இருக்கும் போதும் அவை பரிசீலனைக்குரியனவாகா. நடைமுறையிலுள்ள வாழ்க்கை முறை விரக்தியினையோ வெறுப்பினையோ தோற்றுவிக்கும் போது, அதைத் திரும்பிப் பார்த்துச் சிந்திக்கும் நிலையிலேதான் அது சர்ச்சைக்குரியதாகும்; பரிசீலனை செய்யப்படும்.

அறத்தினைப்பற்றி வரையறுத்து எதையும் எக்காலத்துக்கும் ஏற்பக் கூறிவிட முடியாது. ஆனால், அதன் பொதுவான வளர்ச்சி நியதி எப்படியிருக்குமென ஒருவாறு கூறலாம். துல்லியமான அறப்பண்புகளை ஆதிக்குடிகளிடம் எதிர்பார்க்க முடியாது. அறமுதிர்ச்சியும் சீர்தூக்கிப் பார்க்கும் மனப்பான்மையும் அவர்களிடம் வளர்ந்திருக்கவில்லை. வீரமும் உரோமையும் பெரிதாக மதிக்கப்பட்டன. அடுத்த காலப்பகுதியில் வழக்கம், ஆசாரம், சம்பிருதாயம், சட்டம், தேவகட்டளை என்பவை கொண்டு சமுதாயம் தனி மனித நடத்தையைக் கட்டுப்படுத்தியது. அதற்கும் பின்னரே சம்பிருதாய சட்ட ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற அறவாழ்க்கை ஒழுக்கத்தையும் மனத்தூய்மையும் மூலாதாரமாகக் கொண்டது. மனம் போன போக்கில் தனிமனிதர்கள் வாழ்ந்த வாழ்க்கையின் குறைகள், வளர்ந்த சமுதாயத்தில் உணரப்பட்ட போதுதான் சம்பிருதாய சட்டத்தினால் தனி மனிதப்போக்குக் கட்டுப் படுத்தப்பட்டது. சம்பிருதாய சட்டத்தினால் கட்டுப்படுத்தப் பட்ட நிலையிலும் சீர்கேடுகள் இருந்தமை உணரப்பட்ட போது

01 DEC 2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் அறங்கள் வற்புறுத்தப்பட்டன. இந்த மனிதசமுதாய வளர்ச்சி நியதிக்குத் தமிழ்ச் சாதி விதிவிலக்கல்ல.

மனித வாழ்க்கையின் வரலாறும் அறவாழ்க்கையின் வரலாறும் ஏறக்குறைய ஒன்றுதான் என்பர். பரிணும நியதியை அனுசரித்த அறவாழ்வின் வளர்ச்சிப் போக்கை யூத மக்களின் வரலாற்றினைக் கொண்டு அறியலாம். சரித்திர ஆரம்பத்தில் சடங்கு விதிகளும் சம்பிருதாயங்களும் அவர்களிடையே ஆதிக்கம் செலுத்தி வந்தன. பின்பு மோசே மூலமாகக் கடவுளானவர் அருளிய பத்துக் கட்டளைகளுக்கு ஏற்ப வாழ்க்கை செம்மைப்படுத்தப்பட்டது. பின்னர் தோன்றிய தீர்க்கதரிசிகள் அந்தரங்க சுத்தியையும் மனத்தூய்மையையும் வலியுறுத்தினர். கட்டுப்பாடுகளுக்கும் சம்பிருதாயங்களுக்கும் கீழ்ப்படிந்து நடந்து விடுவதால் மட்டும் அறவாழ்வு அமைந்து விடாது என்று எடுத்துக் கூறினர். அதன்பின் யேசுகிறீஸ்துவின் அறவுரை உள்ளத்தூய்மையை அடித்தளமாக்கி, அக வாழ்விலே அறத்தை நிலைநாட்டியது. இதே போக்கிலேதான் தமிழ்நாட்டிலும் வீரமும் காதலுமென வாழ்ந்த சங்க கால இறுதியில் வேத ஆரியர் வருகையால் சம்பிருதாயங்களும் சடங்குகளும் முக்கிய இடம் பெற்றன. தொடர்ந்து சமுதாயப் போக்காலும் சமண பௌத்தர் வருகையாலும் மனத்தூய்மையும் நல்லொழுக்கமும் வற்புறுத்தப்பட்டன. "மனத்துக் கண் மாசிலனுதலனைத்தறன்" என்ற குரல் மேலோங்கிற்று.

சங்க காலத்தில் வீரமும் கொடையும் மிகுதியாகச் சிறப்பித்துப் பாடப்பட்டமைக்குக் காரணம் போரும் வறுமையும் சமுதாயத்தில் மலிந்து கிடந்தமையே என்பர். தமிழ்க்குடியை "வாளொடு முன் தோன்றி மூத்த குடி" என்று யாரோ பாடினர். உட்பகைகளுக்கும் போர்களுக்கும் ஆளான கதை அதற்கும் உண்டு. ஆனல், இன்று அவ்வரலாற்றைப் பின் நோக்கிப் பார்த்து ஆத்திரப்படுவதிலோ அவமானப்படுவதிலோ அர்த்தமில்லை. பண்டைச் சமுதாயங்கள் அவ்விதமாகவே இருந்தமையை வரலாற்றுணர்வுடையோர் அறிவர். அத்தகையதொரு கால கட்டத்தில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே''

என்பது போன்ற சிந்தனை வீச்சுக்களின் விளை நிலமாகவும் தமிழ்ச் சமுதாயம் விளங்கியமை பெருமைப்படத்தக்கதே. இருப்பினும், போரில் இன்பம், காதலில் இன்பம் கலைகளில் இன்பம், கள்ளில் இன்பம, கொள்ளையில் இன்பம் என்று ஒரு காலகட்டத்தில் தமிழ்ச் சமுதாயமும் வாழத்தான் செய்தது.

ஆண்கள் பரத்தையருடன் புதுப்புனலாடும் செய்திகளையும் தலைவியின் குழந்தையைப் பரத்தை தூக்கிமுத்தமிடும் செய்திகளையும் சங்க நூல்கள் தருகின்றன. பண்டைக் காலத்தில் விறலியர் பாணரிடம் ஆண்கள் ஆடல் பார்க்கவும் பாடல் கேட்கவும் சென்றுர்கள். பின்னர் விறலி பரத்தையாவதையும், அவளை நாடும் தலைவனுக்குப் பாணன் தூதுவனுவதையும் பார்க்கலாம். முதலில் மக்கள் ஆடல்பாடல் மகளிரிடம் ஆடல் பாடலுக்காகச் சென்றிருக்கலாம். காலப் போக்கிற் பொருள் சேர்த்தலும் சமுதாயத்தில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளும் காரணமாக வலிமையுள்ளவனுல் ஆடல் பாடல் மகளேயோ மகளிரையோ ஆதிக்கம் செய்ய முடிந்திருக்கலாம். ஆடிப்பாடிப் பிழைப்போர் அப்படி வலுவுடையாரையே அண்டித் திருப்தி செய்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கலாம். வசதியுடையவன் மனைவியோடு இற்பரத்தையையும் காதற்பரத்தையையும் வைத்திருப்பது நாகரிகமாயிற்று. பொருள் கொடுப்பார் எவரையும் வரவேற்கும் சேரிப்பரத்தையரும் இருந்தனர்.

''மையின் மதியின் விளங்கு முகத்தாரை
வவ்விக் கொளலும் அறனெனக் கண்டன்று''

என்று கலித்தொகை கூறுவது எவ்வளவு கட்டுப்பாடற்ற, பாதுகாப்பிழந்த சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றது? விபசாரம் சமுதாயத்தில் பெருமிடம் பிடித்துவிட்டதைச் சிலப்பதிகாரம் தெள்ளத் தெளியக் காட்டும். மணிமேகலை தெருவில் போகும் போது அவளைக் கவர்ந்து செல்வது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயம்என்று உதயகுமாரன் கருதுவது எதைக்காட்டுகிறது? 'வரைவின் மகளிர்' என்று வள்ளுவர் குறளில் ஒரு அதிகாரம் வகுப்பது எதைக் காட்டுகிறது? சமுதாயத்தில் ஒழுக்கக்கேடுகள் மலிந்து விட்டதையே இவை காட்டும்.

சங்க காலத்தில் மக்கள் கள்ளினை அருந்தினர். உயிர்க் கொலை செய்த புலாலினை உண்டனர். எட்டுத் தொகை,பத்துப் பாட்டு நூல்களில் மதுபானமும் புலாலுணவும் கண்டிக்கப்பட வில்லை. பண்டைத் தமிழர் இவற்றைச் சிறந்த உணவாகக் கொண்டனர். மாதரும் தமிழ் நாட்டில் மதுவருந்தினர்.

களவும் கொள்ளையும் சங்ககாலத்தில் இருக்கவில்லை யென்று சொல்ல முடியாது. பசுக்களைக் கொள்ளையிடுவதும் வழிப்போக்கரை இரக்கமின்றிக் கொன்று பொருள் பறிப்பதும் சங்க காலத்தில் நிகழ்ந்தன. சங்க காலத்திலே கண்டிக்கப் படாத அச்செயல்கள் பின்னர் கண்டிக்கப்படுகின்றனவென்றால் அதற்குக் காரணம், அச்செயல்களாற் சமுதாயம் சீரிழந்தமை உணரப்பட்டமையே.

வீரத்தையும் காதலையும் தமிழர் பாடி வாழ்ந்த காலத்திலே தமிழ் நாட்டுக்கு வேதஆரியர் வந்தனர். தங்கள் சடங்கு களையும் சம்பிரதாயங்களையும் அவர்கள் கொண்டு வந்தனர். யாகம் செய்யும் முறையைக் காட்டி அதனைச் செய்வோர் மோட்சமடையலாமென்றனர். யாகம் செய்வதில் மன்னருக்குப் பெருவிருப்பு உண்டாகியது. அறிவில் முதிர்ந்திருந்த ஆரியர் தாம் நலனடையத் தமிழக மக்களைப் பயன்படுத்தினர். மோட்ச மோகமும், ஆரியர் கற்பித்த யாகங்கள் செய்வதால் வெற்றிகள் ஈட்டலாமென்ற நம்பிக்கையும் கொண்டிருந்த மன்னர் அவர் செயல்களை அனுமதித்து ஆதரித்தனர். மன்னருக்கும் மக்களுக்குமிடையேயிருந்த தொடர்பு அறுந்தது. வேத ஆரியரின் வருண பேதங்கள் தமிழ் நாட்டிற் புகுந்தன. வைதீகமதப்படிமேற்குலத்தோரே மோட்சமடையும் தகுதியுடை யோரெனக் கருதப்பட்டது. வேத ஆரியரின் மணவினைச் சடங்குகளும் மற்றும் சம்பிராதாயச் சடங்குமுறைகளும் தமிழ் நாட்டிற் புகுந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க காலத்தில் களவொழுக்கத்தின் பின்னரே திருமணம் நிகழும். இக்களவொழுக்கத்திற் குறைகளும் ஏமாற்றங்களும் பிற்காலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும். சங்கச் செய்யுட்களிலே ஊருக்கும் தமருக்கும் அஞ்சி, விரைவில் வரைந்து கொள்ளும்படி தலைவனைத் தலைவியும் தோழியும் நெருக்குவதைக் காணலாம். ஆனால் சிலப்பதிகாரம் காட்டுவது பெற்றோர் பேசி முடித்த வைதீக மணம். நல்ல நாள் பார்த்து ஊரார் முன்னிலையில், சாட்சி வைத்துத் திருமணம் செய்ய வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது? அதற்குக் காரணம் தொல்காப்பியரே கூறுகிறார்.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

இந்தக் காலப் பகுதியிலே வழக்கம், ஆசாரம், சம்பிருதாயம், சட்டம், தேவ கட்டளை என்பவை கொண்டு சமுதாயம் தனி மனித நடத்தையைக் கட்டுப்படுத்திய நிலை தோன்றியிருக்கக் கூடும். சமுதாயத்தில் கட்டுப்பாடுகள் வலுத்ததும் பெண்கள் சிறை காக்கப்பட்டதும் இக்காலத்திலாயிருக்கலாம்.

மக்கள் சடங்குகளுக்கும் சம்பிருதாயங்களுக்கும் பெரிதும் அடிமையாகி மனத்தூய்மை, ஒழுக்கம் ஆகியவற்றிற் கவனமிழந்தனர். எப்படித்தான் வாழ்ந்தாலும் சடங்குகள் தங்களை மோட்சத்திற் சேர்த்து விடுமென நம்பி மனவமைதி கண்டனர். இன்றும் கொள்ளையடிப்போரும் வேறு கெட்ட நடத்தைக் காரரும் ஆலயம் சென்று ஆராதனை செய்து பூவும் பொட்டுமாகத் திரிவதன் மூலம் மனத்திருப்தி கண்டு விடுகின்றனர். இது போன்ற ஒரு நிலை சமண பௌத்தர் செல்வாக்குப் பெற்ற போது தமிழ் நாட்டில் இருந்திருக்க வேண்டும்.

வடஇந்தியாவிலிருந்த இப்படிப்பட்ட ஒரு நிலையை எதிர்த்துக் கண்டிக்கும் முகமாகத்தான் சமண பௌத்த மதங்கள் தோன்றின. வெறும் பூசை புனருத்தாரணங்களால் அறவாழ்வு காண முடியாது, மனத்தூய்மையும் உயர்ந்த ஒழுக்கமும் வேண்டுமென இவை போதித்தன. சமண பௌத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதங்கள் இந்து மதத்தில் அன்றிருந்த குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி அவற்றிற்கு மாற்ருகத் தோன்றியவையே. அவை இந்து மதத்துக்கு எதிராக மற்ற இடங்களில் எதற்காகப் பிரசாரம் செய்தனவோ, அதே காரணங்களுக்காக தமிழ் நாட்டிலும் பிரசாரம் செய்தன. தமிழர் சமண பௌத்தமதங்களை வரவேற்றனர். அறவாழ்க்கை சம்பிருதாய ஆதிக்கத்தினின்றும் விடுதலைபெற்று ஒழுக்கத்தையும் மனத்தூய்மையையும் மதித்து அமைய வேண்டிய அவசியம் உணரப்பட்ட அல்லது உணர்த்தப்பட்ட காலகட்டம் இதுதான். சமுதாயத்தின் குறைகளைக் கண்ட புலவர்கள் அவற்றைக் கண்டிப்பதும் நிவர்த்தி செய்யத் தமது கால இயல்புக்கேற்ற முறையில் வழிகாட்டுவதும் இயல்பே.

சங்கமருவிய காலத்தில் நாட்டில் சிலரிடம் செல்வம் குவிந்தும் பலரிடம் வறுமை மிஞ்சியும் இருந்தது. அதனுலேயே பருக நீர், தங்க நிழல், இருக்க இடம், உண்ண உணவு ஆகியவை கொடுப்போர் பேரின்பத்தை அடைவார்கள் என்று செல்வர்க்கு ஆசை காட்டப்படுகிறது.

''உரைசால் சிறப்பின் அரைசுவிழை திருவிற்
பரதர் மலிந்த பயங்கெழு மாநகர்
முழங்குகடல் ஞால முழுவதும் வரினும்
வழங்கத் தவாஅ வளத்த தாகி
அரும்பொருள் தரூஉம் விருந்திற் றேஎம்
ஒருங்குதொக் கன்ன உடைப்பெரும் பண்டம்
கலத்தினுங் காலிலுந் தருவன ரீட்ட''

என்று சிலப்பதிகாரம் கூறுவது அரசரும் மதிக்கும் செல்வத்தினையுடைய ஒரு வர்க்கம் தோன்றி விட்டிருந்ததைக் காட்டும். அதே நேரத்தில் பசியும் பிணியும் நாட்டிலே இருந்தபடியினுலே தான் இளங்கோவடிகள்,

''பெருநில மன்னன் இருநிலம் அடங்கலும்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க!''

என்று வாழ்த்துப் பாடுகிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்''

என்ற பெருஞ்சினக் குரலே கேட்கிறது. வறுமை காரணமாகத் திருடியும் பொய்பேசியும் வாழ வேண்டிய நிலே ஏற்பட்டு விடுகிறது. திருட்டுத் தொழில் மிக வளர்ந்திருந்ததற்குச் சிலப்பதிகாரமே சான்று பகரும். வள்ளுவர் ''கள்ளாமை'' என்ெருரு அதிகாரமே வகுத்தார். ''கள்வர்க்குத் தள்ளுமுயிர் நிலே'' என்று அச்சமும் ஊட்டப்படுகிறது.

சங்க நூல்கள் கண்டிக்காத பரத்தையொழுக்கத்தை அற நூல்கள் மிகவும் கண்டிக்கின்றன. விபசாரம் தமிழ்நாட்டில் அளவுக்குமிஞ்சி ஒழுக்கக் கேட்டுக்கும் சமுதாயச் சீரழிவுக்கும் ஏதுவாகிவிட்டதே இதற்குக் காரணம் எனலாம். ஏலாதியிலே, பொது மகளிர் பாடலேக் கேட்போரும் ஆடலேப் பார்ப்போரும் பகையையும் பழிச்சொல்லேயும் பெறுவார்கள் என்று வெறுத்துக் கூறியதோடமையாது, அப்படிச் செய்வோர் பாவத்திற்கும் சாக்காட்டிற்கும் ஆளாவார்களென்று பெரிதும் பயமுறுத்தவும் படுகிறது.

கணவன் இருக்கும்போது மற்ெருருவனுக்குப் பிறந்தவன் கேத்திரன், திருமணமாகாத பெண்ணுக்குப் பிறந்தவன் கானீனன், விபசாரத்தில் பிறந்தவன் கூடன் என்றெல்லாம் புத்திரர்களின் வகைகளேக் கூறுகிறது ஏலாதி. பெண்கள் கற்புள்ளவர்களாக வாழவேண்டுமென்பதையும் சிறைகாப்பதை விட நிறைகாப்பது முக்கியமென்பதையும் சங்க மருவிய கால நூல்கள் பன்னிப்பன்னிக் கூறுகின்றன. சமுதாயத்தில் ஒழுக்கமும் கட்டுப்பாடும் கீழ்நிலேயடைந்திருக்காவிட்டால் இவற்றையெல்லாம் நூல்கள் கூறியிருக்கவியலாது. ஆசாரக் கோவை வகுக்கவேண்டிய தேவையும், இன்னுதவை இனியவை யென்று பிரித்துக் காட்டவேண்டிய அவசியமும் ஏற்பட்ட இச் சூழ்நிலேயில் அறநூல்கள் பல தோன்றியதில் வியப்பில்லே.

தமிழர் மதுவருந்தினர். வேத ஆரியரும் சோமபானம் பருகினர். மதுவெறியின் தீமைகளே உணர்ந்து போலும் சமண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்தர் அதனை வெறுத்தொதுக்கினர். சங்க காலத்தில் தமிழ்நாட்டில் போரும் கொலையும் இருந்தன. வேத ஆரியர் அவிசொரிந்து உயிர்ப்பலியிட்டனர். ஆனால் சமண பௌத்தர் பிரசாரம் செய்த தன்னுயிர்போல் மன்னுயிரோம்பும் பண்பு போற்றப்படும்போது கொலையும் புலாலும் வெறுத் தொதுக்கப்படுகின்றன.

''அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று''

என்கிறார் வள்ளுவர். யாகங்களில் உயிர்ப்பலியிடும் சடங்குகள் வெறுத்துரைக்கப்படுகின்றன.

வைதீகப் பிராமண மதம் யாகத்தில் உயிர்க்கொலை செய்யும் வழக்கத்தைக் கொண்டிருந்தது. நால்வகை வருணத்தாருள் பிராமணரே உயர்ந்தவரென்னும் கொள்கையை உடையதாயிருந்தது. பிராமணரல்லாதார் வேதத்தைப் படிக்கக்கூடாதெனத் திரை போட்டு வைத்திருந்தது. இவ்வித குறுகிய கோட்பாடுகளைக் கொண்டிருந்த வைதீக மதத்துக்கு மாறாக, மக்களனைவரையும் நிகராய் மதித்து அவருக்கு அறிவும் ஒழுக்கமும் காட்டிய சமண பௌத்த மதங்கள் வேகமாகப் பரவின. அம்மதங்கள் ஒழுக்க நெறியினையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. அவை செல்வாக்குப் பெற்றபோது அறவொழுக்க நூல்கள் பல தோன்றின. வெண்பா யாப்பைப் பெரிதும் பின்பற்றி ஒழுக்கமும் நீதியும் புகட்டும் நூல்கள் எழுதப்பட்டன. பொதுமக்களைப்பற்றிக் கவலைப் பட்டதனாற்போலும் நூல்கள் எளிமையாகப் பொதுமக்களுக்கும் பள்ளிமாணவருக்கும் புரியும் வண்ணம் எழுதப்பட்டன. பொய், கொலை, களவு, கள், காமம் போன்றவை கடுமையாகக் கண்டிக்கப்பட்டன.

நடைமுறையிலிருந்த சமுதாயத்தைச் சீர்திருத்தும் நோக்கத்துடனேயே அந்நூல்கள் எழுதப்பட்டன. பதினெட்டுக் கீழ்க்கணக்கு நூல்களிலே பதினொன்றும் உயர்ந்த அறங்களையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்து ரைப்பன.மனிதனும் சமுதாயமும் பின்பற்ற வேண்டிய ஒழுக்க முறைகளை இவை விரிவாய்க்கூறும். இவற்றையே அற நூல்கள் என்றும் நீதிநூல்கள் என்றும் ஒழுக்கநூல்கள் என்றும் கூறுவர். ஒழுக்கத்துக்கே பெருமதிப்புக் கொடுத்து அது 'உயிரினும் ஓம்பப்படும்' என்பர் வள்ளுவர். இவ்வுலகில் நேர்மையாக ஒழுகுவதைப் பற்றிக் கவலைப்படாது மறுவுலக நல்வாழ்வு வேண்டி யாகமும் பூசையும் செய்வதைக் கண்டித்த வள்ளுவர்,

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்''

என்கிருர். இக்கருத்தை வலியுறுத்துவதாக உள்ளது சிலப்பதிகாரம் காட்டும் கண்ணகியின் வரலாறு.

தமிழில் அறநூல்கள் காலச் சூழ்நிலையுடன் தொடர்பில்லாமல் ஆக்கப்படவில்லை. ஒழுக்கத்தையும் மனத்தூய்மையையும் வற்புறுத்தும் சமண பௌத்தர் சங்ககாலத்திலேயே தமிழ் நாட்டுக்கு வந்திருந்தனர். ஆனல் அறவொழுக்கத்தைப் பற்றிய பிரச்னைகள் அன்று மக்களை ஈர்க்காததால் சமண பௌத்தர் கருத்துக்கள் செல்வாக்குப் பெறவில்லை. ஆனல் சங்கமருவிய காலத்தில் அறக்கொள்கைகளை வற்புறுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. அவை மக்கள் கவனத்தைக் கவர்ந்தன. அன்று தமிழ் நாட்டில் காணப்பட்ட வாழ்க்கை முறையைச் சீர்திருத்த, அறவொழுக்கங்களை வற்புறுத்துவது உகந்ததென உணர்ந்ததினலேயே நாலடியார், பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், ஏலாதி என்பவற்றைச் சமணர் இயற்ற ஆசாரக்கோவை, நான்மணிக்கடிகை, முதுமொழிக் காஞ்சி. திரிகடுகம், இன்னநாற்பது, இனியவை நாற்பது ஆகியவற்றை வைதீக சமயத்தினர் இயற்றினர்.

வடநாட்டு ஆரியர் வருகையும், தமிழ்நாட்டைக் களப்பிரர் கைப்பற்றியமையும் காரணமாக அரசருக்கும் மக்களுக்குமிடையில் நிலவிய அன்புத் தொடர்பு அறுந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமையே சமுதாயச் சீர்குலைவுகளுக்கும் ஒழுக்கப் பிறழ்வுகளுக்கும் காரணமாயிற்று என்று சிலர் கூறுவர். அது ஓரளவுக்கு உண்மையாக இருக்கலாமாயினும், அந்நிய ஆதிக்கமும் புறமதச் செல்வாக்கும் நிலைகொண்டு வளர்வதற்கேற்ற சூழ்நிலை எவ்வாறு தோன்றிற்று என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். கள்ளாமை, பொய்யாமை, பிறன் பொருள் விழையாமை முதலானவற்றை வலியுறுத்திய சமண சமயத்துக்குச் சங்கமருவிய காலத்தில் வளர்ச்சியும் செல்வாக்கும் பெற்ற வணிக சமூகத்தினரின் ஆதரவு வாய்த்தமையும் குறிப்பிடப்படவேண்டியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைக் காதல்

கடவுட் பக்தி வெள்ளம் கரைபுரண்டோடிய பல்லவர் காலப் பகுதியிலே, சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் இறைவனை நாயகனாகக் கொண்டு அவன்மீது பெண்கள் காதல் கொள்ளும் பாவனையிற் பாடியிருக்கின்றார்கள். முன்னர் பொதுவாகக் காதலைக் குறித்த காமம் என்ற சொல் பின்னர் முறையற்ற காதலைக் குறித்து நிற்கக் காதல் என்ற சொல் முறையான காதலைக் குறித்து வழங்கலாயிற்று. கடவுள் மீது மானிடர் கொள்ளும் காதல் ஒத்த பண்பினர்க்கு இடையே நிகழும் காதலாகவன்றி ஒருதலை வேட்கையாகவே அமையினும், கடவுள் சம்பந்தப்பட்ட புனிதத்துவம் நோக்கி அதுவும் காதல் எனவே கொள்ளப்படுவதாயிற்று.

மானிடருக்கு மத்தியில் நிகழும் ஆண்பெண் காதலில் இருந்து கடவுள் மீதான காதலை வேறுபடுத்துவதோடு அதனை ஏற்புடைத்தொன்றாகவும் மேம்பட்டதாகவும் காட்டிடவேண்டிப் பேரின்பக்காதல் என்று கூறினர். மானிடரிடையில் ஏற்படும் காதலைச் சிற்றின்பக் காதல் என்று சிறுமைப்படுத்தியும், கடவுள் பால் ஏற்படும் காதலைப் பேரின்பக் காதல் என்று பெருமைப் படுத்தியும் கூறுவது கடவுட் சிந்தனை முதன்மையாகப் போற்றப்பட்டமையின் விளைவே எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகியல் வாழ்க்கையில் நிகழும் மானிடக் காதலானது முறையாகப் போற்றப்பட்ட காலத்திலே அது சிற்றின்பக் காதல் என்று குறைவு படுத்தி மதிக்கப்படவில்லை. ''ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம்'' என்று நச்சினார்க்கினியர் கூறுவதிலிருந்து அது தெளிவாகும்.

நிலையில்லா ஒன்றென்று உலகியலைப் புறக்கணித்த பல்லவர் காலத்து அடியார்கள் தங்களைப் பெண்களாகப் பாவனை செய்து கொண்டு இறைவன் மீது காதற் பாட்டுக்கள் பாடினர் என்பர். அத்தோடு இறைவன் மீது ஆன்மாக்கள் கொள்ளும் ஆராக் காதலையே அவர்தம் பாடல்கள் காட்டி நிற்கும் என்றும் கூறுவர். ஆயினும், இறைவன் மீது காதல் கொள்ளும் பாத்திரத்திற்குச் சாதாரண மானிடப் பெண்ணுக்குரிய அங்கங்களும் அணிகளும் ஆசைகளும் வாதனைகளும் விழுமிடங்களும் அமைந்திருப்பதை அவதானிக்கலாம். அதே போல, இறைவனுக்கும் மானிடத் தலைவர்க்குரிய இயல்புகளும் அங்கங்களும் அமைந்து விடுவதுண்டு.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் தங்களையே ஆன்மாவாகவோ காதற்றலைவியாகவோ பாவனை செய்து கொண்டு மட்டும் பாடவில்லை; நற்றாயாகவும், செவிலித் தாயாகவும், தோழியாகவும். நின்று கொண்டு கடவுள் மீது காதல் கொண்ட ஒரு பெண்ணின் ஆசைகளையும். மனோ நிலைகளையும் வேதனைகளையும் பாடியிருக்கின்றனர். பொதுவாகத் தொகுத்து நோக்கும் போது, இறைவன் மீது பெண்கள் தங்கள் மனதைப் பறி கொடுத்து ஏங்குவதைக் காட்டுவதாக இப்பாடல்கள் அமைந்திருப்பது புலனாகும். இப்பாடல்களை மேலோட்டமாக நோக்குபவர்கள் அவை சங்க கால அகத்திணை மரபைப் பின்பற்றியவை என்று கூறுவதுண்டு. அவ்வாறு பொதுப்படக் கூறுவது எத்துணைப் பொருத்தமாகும் என்பது எண்ணிப் பார்க்க வேண்டியது.

ஒருவனுக்கும் ஒருத்திக்கும் இடையே நிகழும் அகவொழுக்கம் குறித்த பண்டைத் தமிழ் இலக்கியங்களிலே, சுட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யொருவர் பெயர் சொல்லப்படுவது மரபுக்கு மாருனதென்று கருதப்பட்டது. அங்கு அக நிகழ்ச்சிகள் முக்கியம் பெற்றனவே யன்றிச் சம்பந்தப்பட்ட பாத்திரங்களைச் சுட்டும் பெருமைகளோ பேச்சோ இல்லை. அவ்விலக்கியங்களிலே தெய்வமும் மா, மரம், புல் முதலியவற்ருேடு கருப் பொருளுள் அடங்கும். புணர்த்தலின் பின்னரே பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல், ஆகியவையும் அவற்றின் நிமித்தங்களும் நிகழும்.

இறைவன் தலைமை பெற்ற பல்லவர் காலத்தே எழுந்த இறைக்காதற் பாடல்களில் மேற் கூறப்பட்ட மரபு வரம்புகள் பேணப்பட்டதாகக் கூற முடியாது. அவற்றிலே இறைவன் பெயர் சுட்டப்படுவதும் அவனது தோற்றப் பொலிவும் பெருமைகளும் விரிக்கப்படுவதும் கண்கூடு. ஒத்த பண்பினரான ஒருவனும் ஒருத்தியும் அடுப்பாரும் கொடுப்பாரும் இன்றித் தாமே எதிர்பட்டுக் கூடும் கூட்டமில்லை. அகப் பொருளுக் குரிய போக நுகர்ச்சியும் அங்கில்லை.

கடவுளின் புகழைப் பெயர் சுட்டிக் கூறுவதே இப்பாடல் களின் அடிப்படை நோக்கம் என்பது அவற்றைப் படிக்கும் போது தெளிவாகும். கடவுளின் கவர்ச்சியை மிகுத்துக் கூறப் பல்லவர் கால அடியார்கள் பல வழிகளைக் கையாண்டனர் எனக் கொள்ளலாம்.

பெண்களைக் கவருவதும் பெண்களினுற் சூழப்படுவதும் ஒப்பாருமிக்காருமற்ற தலைவனுக்குப் பெருமையென்றும் அழகென்றும் முற்கால முதற் கருதப்பட்டதுண்டு.

''மகளிர் மலைத்த லல்லது மள்ளர்
மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப'' (புறம் 10)

''வணங்குசிலை பொருதநின் மணங்கம ழகலம்
மகளிர்க் கல்லது மலைப்பறி யலையே'' (பதிற். 63)

''இளையார்க்கு மலர்ந்த மார்பினை'' (சிறுபான். 232)

முதலிய சங்கப்பாடற் பகுதிகள் வாயிலாக அதனை உணர லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழன் போர்வைக் கோப் பெருநற்கிள்ளியின்பால் நக்கண்ணையார் என்னும் புலவர் காதல் கொண்டோ அல்லது காதல் கொண்டதாகப் பாவனை செய்துகொண்டோ, அவன் பொருட்டுத் தாம் வளையல்களையும் கலையையும் தோற்றதாயும், அவனது தோள்களைத் தழுவத் துடிப்பதாயும் பாடியுள்ள பாடல்கள் அரச புகழ்பேசும் புறத்திணைப் பாடல்களென்று கருதப்பட்டமையாற் புறத்திலே அடக்கப்பட்டுள்ளன. இராமன், சீவகன் முதலிய காவியத் தலைவர்கள் உலாச் சென்ற போது பெண்கள் அவர்களைக் கண்டு காதல் வேட்கை கொண்ட தாகக்கூறப்படுகின்றது. பல்லவர்காலத்தில் எழுந்த நந்திக்கலம் பகத்திலே நந்தியின் மீது பெண்கள் காதல் கொண்டமையைக் காட்டும் பல பாடல்களிலே நந்தியரசன் புகழ் பலவாருகத் தெளிக்கப்படுன்றது. முத்தொள்ளாயிரத்திலும் அவ்வாறே அரச புகழ் காட்டப்படுகின்றது. இவ்விலக்கியங்களிலே தலைவி, தாய், தோழி முதலிய பாத்திரங்களின் வாயிலாக நாடகப் பாங்கிலே அமைத்துக் கூறப்படுவது தலைவர்களது பெருமை களும் சாதனைகளும் தோற்றப் பொலிவுமே.

இதே நெறியினையொட்டி இறைவன் புகழ் அமைத்துக் கூறப்படுவதைப் பல்லவர்காலப் பக்தி இலக்கியங்களிலே காணலாம். சேரமான் பெருமாள் நாயனர் பாடிய திருக் கைலாய ஞான உலாவிற் சிவபெருமான் உலாச் செல்லும் போது, பல்வேறு பருவ மகளிர் அவரைக் கண்டு காதல் கொள் கின்றனர். இவ்வாறு அமைத்துக் காட்டப்படுவது தலைவரின் தன்னேரற்ற பெருமையை மிகுத்துக் கூறுவதற்பொருட்டே. உலாச் செல்லும் தலைவன் மீது காதல் மீதூரப் பெற்று நிற்பது கற்புடைப் பெண்டிர்க்கு ஏற்காதது என அஞ்சிய நச்சினர்க் கினியர் அவ்வாறு காதல் கொள்வது பொது மகளிர் என்று சமாதானம் கூறினர். ஆனற் காதல் கொள்வது பொது மகளிர் என்பதற்கு உலா இலக்கியங்களிலோ இலக்கணங்களிலோ சான்றில்லை. காதலிப்பது ஆன்மாக்கள் என்பதற்கும் சான்றில்லை. பொதுவாக இவ்வுலாவினை நோக்கும் போது சிவபிரானின் பெருமையைக் காட்டுவதற்காக அவர் மீது பெண்கள் வேட்கை கொண்டதாகப் பாடப்பட்டிருப்பது புலனகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலா இலக்கியத்திலே பெண்கள் கொள்ளும் காதல் ஒருதலைக் காமம் ஆகையால் அது உலாப்புறம் எனப்பட்டது. தலைவனது புறப்பெருமைகளைக் காட்டுவதே உலா இலக்கியத்தின் அடிப்படை நோக்கம் என்பதையும் மறந்துவிடல் ஏலாது. அகத்துறைகளைப் பயன்படுத்தித் தலைவரின் புறமேன்மைகள் பாடப்பட்டபோது, ஒருதலைக் காமம் ஏற்கப்படுவதையும், அகமும் புறமும் இணைவதையும் அல்லது பழைய அகப்புறப் பாகுபாட்டு வரம்பு சாய்வதையும் காணலாம்.

அகத்துறைகளைப் பயன்படுத்தி அரச புகழ் பாடப்படுவதைப் பாண்டிக் கோவை, முத்தொள்ளாயிரம், நந்திக் கலம்பகம் போன்ற இலக்கியங்களிற் காணலாம். ''கோவையானது அகப்பொருள் இலக்கணத்துக்கு இலக்கியமாக அமைந்த தமிழ் நூல்'' என்று தாம் பதிப்பித்த பாண்டிக் கோவையின் முகவுரையிலே கூறும் வே. துரைசாமி, அவ்வாறு கூறுவதற்கு முன் ''நல்லறிஞர், தம்மை ஆதரித்தோரைச் செய்ந்நன்றி அறிதலால் பாராட்டி தம் உள்ளக் கருத்தை அமைத்து நூல்கள் இயற்றுதல் இயல்பு. அவற்றுள் ஒரு பிரிவு கோவை நூல்'' என்று கூறுகின்றார். இதிலுள்ள முரண்பாட்டை ஆழ்ந்து நோக்கினால், அகப்புற இலக்கிய மரபுக் கோட்பாடுகளுக்கிடையில் நிகழ்ந்த மயக்கமே அதற்குரிய காரணம் என்பது புலப்படும்.

ஊன்றி நோக்குமிடத்து, பாண்டிக்கோவை, முத்தொள்ளாயிரம், நந்திக் கலம்பகம் ஆகிய நூல்களில், அக்காலத்தில் வாழ்ந்த அரசர்களின் வீரம், கொடை, நல்லாட்சி முதலிய சிறப்புகளைப் பாராட்டிக் கூறுவதற்கு அகப்பொருள் கருவியாகப் பயன் படுத்தப்பட்டிருப்பதனை அவதானிக்க முடியும்.

வீரயுகத்திலே வீரர்களுடைய பெருமைகள் பாடப்பட்டது போல, பக்தியுகத்திலே கடவுளுடைய பெருமைகள் பாடப்பட்டன. தலைவனும் தலைவியும் சமநிலையினராக விளங்கிய காலத்தில் அவர்களுக்கிடையில் நிலவிய உறவு ஐந்திணைக்குள் முறையாக வகுத்துப் பாடப்பட்டது. தலைவியிலும் பார்க்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவன் உயர்ந்தவனாக மதிக்கப்பட்டபோது, இலக்கியத்திலும் அவன் அந்தஸ்து உயர்ந்தது.

திருவுடை மன்னரும் திருமாலும் சிவனும் ஒப்பாகப் போற்றப்பட்ட காலத்திலே முறை செய்து காப்பாற்றும் இறையொத்த மன்னருக்குக் கூறப்பட்ட தன்னிகரற்ற தகைமைகளும் சாதனைகளும் பொலிவும் திருமாலுக்கும் சிவனுக்கும் அமைத்துக் கூறப்பட்டன. அந்தஸ்தில் உயர்ந்த அரச தலைவர்பாற் பெண்கள் காதல்கொண்டதாகப் பாடியவர்கள் பெண்ணின் நிலையோ பிரச்சினையோ பற்றி அச்சந்தர்ப்பத்திலே அங்கலாய்க்கவில்லை. கடவுள் முக்கியத்துவம் மிகுந்த காலத்திற் கடவுள்பாற் பெண் காதல் கொள்வதாகப் பாட முற்பட்டவர்களுக்குப் பெண்ணின் பெருநாண் விடாப் பெருமை பற்றிய கவலை மிகுந்திருந்தால் அவர்கள் கடவுளைப் பெண்ணாகப் பாவனை செய்யவும் நினைத்திருக்கக் கூடுமன்றோ?

ஆனால், நிலமானியப் பகைப்புலத்தில் ஆண்டான் அடிமை வாழ்வு, ஆணுக் கடங்கிய பெண் பற்றிய எண்ணங்களில் ஊறியவர்கள் கடவுளை ஆண்டானாகப் பாவனை செய்து பாடியமை வியப்புத் தருவதன்று.

தாழ்ந்த நிலையில் நின்று கடவுள்பால் வேட்கை கொண்ட பெண்கள், தம் உணர்வுகளை நேரே வெளியிடாத பெரு நாண் படைத்த சங்க இலக்கிய மகளிரைப் போலன்றி, நாணத்தை மறந்து கட்டுப்பாடுகளைக் கைவிட்டுத் தமது ஆசையையும் ஆற்றாமையையும் அவலத்தையும் வாய்விட்டுக் கூறினர். மடல் ஏறப்போவதாகப் பயமுறுத்துதல் பண்டைத் தமிழ் மரபுப்படி பெண்களுக்குச் சாலாது. எனினும், கடவுள்பாற் காதல் கொண்ட தலைவி மடலேறப் போவதாகப் பயமுறுத்துவதைத் திருமங்கையாழ்வார் பாடிய சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகியவற்றிலும் நம்மாழ்வார் திருவாய் மொழியிலும் காணலாம். கடவுள் மேற் பெண்கள் காதல் மிகுதியைக் காட்டும் இவ்விலக்கியங்களை மரபுக்குப் புறம்பானவை என ஒதுக்க விரும்பாதவர்கள்—அதே நேரத்தில் இலக்கியத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை நோக்கையும் பண்பையும் செவ்வனே உணராது இலக்கிய விதிகளும் விதிவிலக்குகளும் வரைய முற்பட்டவர்கள்—கடவுளர் தலைவராய் வருமிடத்தும் பெண்டிர் மடலேறலாம் என்று பின்னர் விதிவிலக்கமைத்தனர். ஓர் அரசன்பாற் காதல் மிகுந்த பெண் மடலேறப் போவதாகப் பேசும் ஒரு செய்யுள் நந்திக் கலம்பகத்தில் இருக்குமாயிற் பேரரசன் தலைவனாய் வருமிடத்தும் பெண் மடலேறலாமென்று பிற்கால இலக்கண ஆசிரியர் கூறியிருத்தல் கூடும்.

கடவுளைத் தலைவனாகப் பாவனை செய்து கொண்டு அவன் மீது பெண்கள் காதல் கொண்டதாகப் பாடிய புலவர்கள், சங்க காலம் முதற்கொண்டு தமிழிலக்கியங்களிலே வீரர்க்கும் அரசர்க்கும் கூறப்படுவன போன்ற சிறப்புக்களையும், சாதனைகளையும் சேர்ந்தவர்களுக்கு நன்மைகளும் சேராதோருக்குத் தீமைகளும் விளைக்கும் தன்மைகளையும் கடவுளுக்கும் அமைத்துக் கூறியிருக்கின்றனர். தம் எதிர்ப்புச் சக்திகளைத் திருமால் அடக்குவது சம்பந்தமான கதைகளும் அவரது ஏறு தழுவியமை போன்ற வீரச் செயல்களும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்துட் பலவிடத்தும் அமைந்து இக்கூற்றினை உறுதிப் படுத்தும்.

எவ்வாறுயினும், இஷ்ட தேவதைக்குத் தம்மை ஆட்படுத்தி அத்தெய்வத்தைச் சிக்கெனப் பிடிக்கும் பக்தியுணர்வை ஏற்படுத்தவும் புலப்படுத்தவும் நாயகன் நாயகி பாவம் மிக ஏற்புடைத்தொன்ருக அமைந்தது. அடியார்கள் தம்மையோ, ஆன்மாவையோ பெண்ணுகப் பாவனை செய்தார்கள் என்று கூறுவது போலக் கடவுளையும் ஆண்டகையாகப் பாவனை செய்தார்கள் என்று கூறுவதும் சாலும்.

உடற்காதற் பகைப்புலத்தில் ஆத்மீகக் காதலை அமைத்துக் காட்டும் வழக்குக் கிரேக்க நாட்டில் கிறிஸ்துவுக்கு முன் ஐந்தாம் நூற்ருண்டிலேயே பிளேட்டோவினுற் (Plato's Symposium) கைக் கொள்ளப்பட்டது. அங்கு ஒரே பாலினர் காதற் பாவனையாக அது அமைந்தது, மகோன்னதமான அறிவானு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவமென்பது திவ்விய சக்தியுடன் கலப்பதே என்று அரிஸ்டோட்டல் கருதுகிறுர். கிரேக்கத்தில் மானிடக் காதலைக் குறித்த ‘எரொஸ்’ (Eros) என்ற சொல் காலகதியிலே உடல் வேட்கையைக் குறிப்பதோடு நில்லாது அறிவு வேட்கையையும் ஆத்மீக வேட்கையையும் குறிப்பதாயிற்று. அரிஸ்டோட்டலின் கருத்துப்படி ஆட்பட்டு நிற்பதென்பது பிரபஞ்சத்தின் இயற்கை விதி.

ஆண்டானுக்கு அடிமை போலக், கணவனுக்கு மனைவியும், ஆத்மாவிற்கு உடம்பும், மனத்துக்குப் பொருளும், கடவுளுக்குப் பிரபஞ்சமும் என்று நிலமானிய சமுகத்தில் வாழ்ந்த ‘தொல் பழமையின் மாபெரும் சிந்தனையாளரான’ அரிஸ்டோட்டல் கருதினுர். மானிட வாழ்வியலில் மிகுந்த பலம் வாய்ந்ததான பாலுணர்வை அடிப்படையாகக் கொண்ட நாயகன் நாயகி பாவச் செய்யுள்களை ஆங்கிலக் கவிஞர் பலரும் ஆக்கியுள்ளனர். ஆங்கிலத்தில் அது Bridal Love என வழங்கப்படும். (Margaret Willy (Ed.), The Metaphysical Poets) ஆயினும் பக்தியியக்கம் தோன்றுவதற்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அகஉணர்வுகளைத் துல்லியமாக வெளியிடத் தொடங்கிவிட்ட தமிழ் மொழியிலே தோன்றிய அளவிலும் நயத்திலும் நாயகன் நாயகி பாவச் செய்யுள்கள் வேறெந்த மொழியிலும் தோன்றியுள்ளனவோ வென்பது சந்தேகம்.

கடவுளுக்குத் தம்மை முற்ருக ஆட்படுத்திக் கொண்ட தமிழ்நாட்டு அடியார்களும் அவனேடு இரண்டறக் கலத்தலைப் பெரும் பேருகக் கருதினுர். கடவுளுடைய அன்பைப் பெறுவதற்குப் பக்தி மார்க்கமே சிறந்ததெனக் கொண்டனர். கடவுளை அறிவினுலோ புலன்களினுலோ அறிய முடியாதென்றும் பக்தியினுலேயே அவனை அகப்படுத்த முடியுமென்றும் நம்பினர். தீரா வேட்கையுடனும், உறுதியுடனும் பக்தி சிரத்தையுடனும் இடைவிடாது தன்னைத் தியானிக்க வேண்டுமென்றும், சகல வினைகளின் பலாபலன்களையும் தன் பொறுப்பில் விட்டுவிட வேண்டுமென்றும், பகவத்கீதையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தன்னை எனக்கு அர்ப்பணித்துக் கொண்டவன் என்னைத் தவிர வேறெதையும் விரும்பான்; அப்படியானவன் பிரம்மாவின் அல்லது இந்திரனின் உயர்பீடத்துக்கோ பிறவி நீக்கத்துக்கோ ஆசைப்பட மாட்டான்'' என்று பாகவதமும் கூறுவது இங்கு மனங்கொள்ளத்தக்கவை. இத்தகைய பக்தி நிலையினை ஏற்படுத்தவும் புலப்படுத்தவும் முனைந்து நிற்போர் பெண்களின் அந்தஸ்து, அன்பின் ஐந்திணைமரபு, பெருநாண் முதலியன பற்றிக் கவலைப்படுபவர் என்று எதிர்பார்க்கலாமா?

எதையும் பொருட்படுத்தாது இறைவனையே கதியெனக் கொண்டு அவனுக்கு முழுக்க முழுக்கத் தம்மைச் சரணாக்கிக் கொள்ளும் அடியார்களின் பக்தி நிலையைப் புலப்படுத்துவதற்கும் நாயகன் நாயகி பாவ உத்தி மிக வாய்ப்பாக அமைந்தது. சைவ நாயன்மார் பாடல்களிலே நாயகன் நாயகி முறை கையாளப்பட்டிருப்பினும், அது அருகியும் கட்டுப்பட்டுமே காணப்படுகிறது. பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவனுக்கு அழித்தற்றொழிலே கூறப்படுவதாலும் அவனை மானிடப்படிக்குக் கொண்டு வராமல் அடியார்கள் அவனிடம் பயத்துடனும் சிரத்தையுடனும் பக்தி செலுத்தியதாலும் நாயகன் நாயகி பாவத்தில் அவனைக் குறித்துப் பாடப்பட்ட பாடல்கள் மிகக் குறைவு. ஆயர்குலக் கொழுந்தான கண்ணனது அவதாரங்களையும் லீலாவிநோதங்களையும் பற்றிய கதைகள் பலவாக இருப்பதாலும் அளித்தல் அவன் தொழிலாகலானும் சாதாரண மக்களைக் கவரும் திறனுடன் பல்வேறு பாவ நிலைகளில் ஆழ்வார்கள் அவனைப் பாட வாய்ப்புண்டாகியிருக்கிறது. அவனது ஆயர்பாடி வாழ்வும் பாலிய லீலைகளும் மானிடரோடு கூடி உறவாடிய இன்பதுன்ப அனுபவங்களும் துஷ்டநிக்கிரக சாதனைகளும் ஆழ்வார்தம் பாடல்களுக்கு மூலவளமாக அமைந்தன. கண்ணனைச் சுற்றி இயற்றப்பட்ட பல கதைகளில் மானிட அபிலாஷைகள், உள்ளுணர்வுகள், மனோ விகற்பங்கள் முதலியவற்றின் ரேகைகளும் காணப்படக்கூடும். சாதாரண மக்களுடைய உணர்ச்சிகளைத் தூண்டியிழுக்கவல்ல, நாடக பாணியில் அமைந்த, நாட்டுப்புறக் கவர்ச்சி மிகுந்த நாயகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகி பாவப் பக்திப் பாடல்கள் சக்தி மிகுந்தவையாகக் காணப்பட்டமையினால் அப்பாடல் முறையினைப் பின்பற்றி வங்காள மொழியிலும் இந்தியிலும் பல பாடல்கள் இயற்றப் பட்டன.

பக்தனின் அல்லது ஆன்மாவின் சரணாகதி நிலையையும் வேட்கையளவையும் இறைவனின் திருவருட் பெருமையையும் இறைவனோடு பக்தனுக்கு அல்லது ஆன்மாவிற்கு உள்ள பரஸ்பர ஈடுபாட்டையும் காட்டுவதற்கு மிக வாய்ப்பாக அமைந்த இந்நாயகன் நாயகி பாவப் பாடல்களின் பிற்கால வளர்ச்சிக்கு இஸ்லாமிய சூபி நெறித் (Sufi) தொடர்புகளும் ஓரளவு உதவியிருக்கலாம்.

பக்தனுடைய அல்லது ஆன்மாவினுடைய இறைக்காதலைச் செவ்வையாக வெளியிடும் வகையிலே நாயகன் நாயகி பாவத்தைக் கையாள்வதென்பது எளிமையான காரியமல்ல. இந்தத் துறையிலே பாடுபவர்களுக்கு அறிந்த அனுபவமாக வும் அடிப்படையாகவும் அமைவது உலகியற் காதலேயாகலின் பாடுபவர்கள் தம்மையோ தம் ஆன்மாவையோ கடவுட்படிக்கு உயர்த்தாது கடவுளை மானிடப் படிக்குத் தாழ்த்தும் ஆபத்தும் உண்டு. கடவுள் மீது வேட்கை கொண்டு அவருக்கு உள்ளத் திலே கோயில் அமைக்கும் அல்லது அவரது அருட்டிறனையும் தோற்றப் பொலிவினையும் பெருமைகளையும் வியக்கும் தொனி தாழ்ந்து மானிடப் பெண்ணொருத்தியின் விரகதாப உணர்ச்சி வெளியீடு மேலோங்கி விடக் கூடும். எனவேதான் வ.வே.சு. ஐயர் பாரதியின் கண்ணன் பாட்டுக்கு எழுதிய முன்னுரையில் நாயகன் நாயகி பாவத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறு கின்றார்:

"இந்த பாவத்தை ஆளுவது கத்தியின் கூர்ப்பக்கத்தின் மீது நடப்பதைப் போன்ற கஷ்டமான காரியம். ஒரு வரம்பு இருக்கிறது; அதற்கு இப்புறம் அப்புறம் போய்விட்டால் அசந்தர்ப்பமாய் விடும். ஸ்ரீ பாகவத்திலுங் கூட கோபிகா உபாக்கியானங்களில் சுகபகவான் இவ்வரம்பை அங்கங்கே கடந்துவிட்டிருக்கின்றாரென்பது எனது தாழ்ந்த அபிப்பிராயம்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் மீது காதலே காதல் கொண்டு அவன் திருத்தாளின் தலைப்பட்ட தலைவியின் செயலை அப்பர் சுவாமிகள்,

'முன்னம் அவனுடைய நாமங்கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள்தன் னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.'

என்று அழகோடும் அளவோடும் பாடுகின்றார்.

திருமால் மீதுகொண்ட காதற் பெருக்கால் அவன் இயல்புகளையும் செயல்களையும் தனதாகக் கொண்டு பேசும் ஒரு பெண்ணின் நிலையினைத் தாயின் கூற்றாகத் தத்துவ ஆழத்துடனும் தனிச்சிறப்புடனும் பாடுகின்றார் நம்மாழ்வார்:

'கற்கும் கல்விக் கெல்லை யிலனே யென்னும்
கற்கும் கல்வி யாவேனும் யானே யென்னும்
கற்கும் கல்வி செய்வேனும் யானே யென்னும்
கற்கும் கல்வி தீர்ப்பேனும் யானே யென்னும்
கற்கும் கல்வி சாரமும் யானே யென்னும்
கற்கும் கல்வி நாதன்வந் தேறக்கொலோ
கற்கும் கல்வியீர்க் கிவையென் சொல்லுவேன்
கற்கும் கல்வி யென்மகள் காண்கின்றவே.'

திருமாலிடம் நெஞ்சம் பறி கொடுத்த ஒருத்தி கிளிகளையும் பூவைகளையும் குயில்களையும் மயில்களையும் பார்த்துப் பேசும் கிளவிகளிலே, முற்றாகப் பாசங்களை விட்ட பின்னரே ஆன்மா இறைவனையடையும் தகுதி பெறுமென்ற கருத்து அழகுற அமைக்கப்பட்டிருத்தலை நம்மாழ்வாரின் அடுத்துவரும் பாடலிற் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இடையில்லை யான்வளர்ந்த கிளிகாள் பூவைகாள் குயில்
காள் மயில்காள்
உடையநம் மாமையும் சங்கும் நெஞ்சு மொன்று மொழிய
வொட்டாது கொண்டான்.
அடையும் வைகுந்தமும் பாற்கடலு மஞ்சனவெற்பு மவை
நணிய
கடையறப் பாசங்கள்விட்ட பின்னையன்றி யவனவை காண்
கொடானே.'

திருமாலின் பிரிவாற்ருது, அவரது திருவடிகளைச் சேரும் தகுதி தனக்கில்லையோவென்று அவனிடம் கேட்குமாறு தான் வளர்த்த கிளியிடம் மன்ருடும் தன்னடக்கம் மிக்க தலைவியையும் நம்வாழ்வாரின் பின்வரும் பாடலிற் பார்க்கலாம்.

'என்பிழை கோப்பது போலப் பனிவாடை யீர்க்கின்ற
என்பிழையே நினைந்தருளி யருளாத திருமாலார்க்கு
என்பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கென் ருெருவாய்ச்
சொல்
என்பிழைக்கு மிளங்கிளியே யான்வளர்த்த நீயலையே.'

கூரிய கத்தியின் மேல் அசந்தர்ப்பமேற்படாதவாறு லாவகமாக நடக்கும் அழகு மேலே எடுத்துக் காட்டப்பட்ட பாடல்களிலே சிறப்பாகப் பொருந்தியிருப்பதை அவற்றை ஆழ்ந்து நோக்கும் போது அவதானிக்கலாம் ஆனல், ஒரு சில சந்தர்ப்பங்களில் அடியார்கள் வரம்பை மீறி மானிட விரகதாபங்களை மிகைபட அழுத்திக் கூறுவதாகவே தோன்றுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமலர்ச்சி இலக்கியம்

'தமிழின் மறுமலர்ச்சி' என்ற தமது நூலிலே பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை கூறியுள்ள மூன்று விடயங்கள் இங்கு ஊன்றி நோக்கத்தக்கவை.

ஒன்று, சுமார் நூறு வருஷங்களுக்கு முன் வரை, அசைவின்றிக் கட்டுக் கிடையாய் நின்ற தமிழும் அறிவும் புத்துயிர் பெற்றுப் புதிய நெறிகளிற் செல்வதற்கான தூண்டுதல் கிடைத்தது ஆங்கிலேயரது கூட்டுறவினுல் என்பது.

இரண்டு, ஆங்கிலேயர் எமது எஜமானர்களாகவும் நாம் அவர்களது அடிமைகளாகவும் ஆகியது எமது அறிவினையும் கலைப்பண்பாட்டினையும் போலியானவையாக்கிற்று என்பது.

மூன்று, அடிமைத்தனம் ஒழிந்தாலன்றி எமக்கு உய்தியில்லை என்பது தெளிவாகிய உணர்ச்சியின் விளைவாகத் தேசியக் கிளர்ச்சி தோன்றி ராஜபக்தி, தெய்வ பக்தி, குருபக்தி முதலியன வெல்லாம் தேச பக்தியில் அடங்கிவிட்டன என்பது.

தற்கால உலகிலே தலைமை பெற்றுள்ள பல சிந்தனைகளையும் சாதனங்களையும், நிறுவனங்களையும் நமக்கு அறிமுகப் படுத்தியவர்கள் சிறப்பாக ஆங்கிலேயர்களே. வெகுஜனக் கல்வியும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகுஜன வசதிகளும், வெகுஜன மொழியும், வெகுஜன இலக்கியங்களும் இங்கு உருவாக அவர்கள் உறவு தூண்டுத லளித்தது.

Renaissance பற்றி ஆங்கில மூலம் அறிந்தவர்கள் அந்த அர்த்தம் விளங்கத் தமிழில் வழங்கும் சொல்லே மறுமலர்ச்சி என்பதாகும். அது ஐரோப்பாவில் நிலமான்ய முறை வீழ்ச்சி யுற்று ஆரம்பப் பூர்சுவா சமூகம் அமைந்த பதினான்காம் நூற் ருண்டுக்கும் பதினேழாம் நூற்ருண்டின் முற்பகுதிக்கும் இடைப் பட்ட கால கட்டத்தில் நிகழ்ந்த மாற்றங்களைக் குறிப்பதாகும். இறைமைவாதம் அங்கீகாரம் பெற்றதாயிருந்த அக் காலப் பகுதியிலே மானிட வாதத்தினதும், மனித பரிணாமக் கோட்பாட்டினதும், வேறுபல முக்கிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களினதும் தாக்கங்கள் குறிப்பிடத்தக்க அளவு நிகழ்ந்தன. இவற்றின் விளைவாக உலகத்தையும் வாழ் வையும் பற்றிய பொருள் முதல் வாத ரீதியான விளக்கம் ஏற்ற மிக்க இடம் பெறுவாதாயிற்று. மனிதன் கடவுளாற் படைக்கப் பட்டவன் என்று கருதப்பட்ட காலத்திலே மனிதருட் பெரும் பாலோர் பெற்றிருக்காத அளவு பெருமையும் தன்னம்பிக்கை யும் சமூக சமத்துவ உணர்வும் குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்று கருதப்பட்ட காலத்திலே தோன்றியது.

அடிமை முறை அகன்று தாராண்மைக் கருத்துக்களும் தனி மனித சுதந்திரம் பற்றிய சிந்தனைகளும் வளர்ந்த இக் காலத்திலே ஏற்றத் தாழ்வுகளை நீக்கும் வகையிற் பல முற்போக்கான சமூக சட்டங்கள் ஆக்கப்பட்டன.

ஆங்கிலேயர் தொடர்பால் இக்கருத்துக்கள் இந்தியா, இலங்கை போன்ற தேசங்களிலும் பரவலாயின. மத்திய கால நிலையிலிருந்து தற்கால நிலைக்கான மாறுதல்கள் நிகழக் காரணமான இச் சிந்தனைகள் கீழைத் தேசங்களில் ஒரு வகை யான குழப்ப நிலைக்கும் காரணமாயின வெனலாம். நிலமான்ய காலத்துக்குரிய பழக்க வழக்கங்களும் ஒழுக்க ஆசாரங்களும் தற்காலத்திற்குரிய சிந்தனைகளோடும் பழக்க வழக்கங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களோடும் முட்டி மோதிக் கொண்டன. பல மாறுதல்களைக் கொண்டு வந்த அந்நிய ஆட்சியினர் உள்நாட்டு வாழ்க்கை முறைகளையும் நாகரிகத்தையும் பரிவோடு நோக்கத் தவறிய மையும் செவ்வனே உணராதிருந்தமையும் தனித்துவமும், தெளிவும் வாய்ந்த ஒரு வாழ்க்கை முறை தோன்றுவதற்குத் தடையாயிருந்தன.

இந்நிலையில், எமது சுதேசிய வாழ்வைச் சீர்திருத்திப் பலமாக்கும் முயற்சிகளும் தற்காலத்துக்கேற்ற முன்னேற்றம் காணும் வேட்கையும் முக்கியத்துவம் பெற்றன. எங்கள் குறைகளையும் பின்தங்கிய நிலையினையும் நாம் உணரத் தலைப் பட்டோம். மறுமலர்ச்சி பற்றிய சிந்தனைகள் எமது வாழ்வைப் புனரமைப்புச் செய்து கொள்ளும் தன்னுணர்வினைத் தோற்று வித்தன. ஆங்கில வாழ்க்கை முறைகளையும் நாகரிகத்தையும் சிலர் கண்மூடிப் பிரதி பண்ணினராயினும், நமது பாரம்பரியத் தையும் பண்பாட்டுக் கலை மரபுகளையும் சீராக்கிப் பேணி வளர்க்கும் அதே வேளையில் மேற்கிலிருந்து வந்த புதிய சிந்தனையூற்றுக்களிலிருந்தும் நீர் பெற்று நலம் பெறலா மென்று காட்டியவர்களே காலத்துக்கேற்ற மறுமலர்ச்சித் தலைவர்களாக மதிக்கப்படலாயினர்.

அரசியல், தேசிய, கலை, இலக்கிய மறுமலர்ச்சி இயக்கங் களுக்கு முன்னோடிகளாக இந்தியாவிலும் சரி, இலங்கையிலும் சரி, சமய மறுமலர்ச்சி இயக்கங்களே அமைந்தன. மேலை நாட்டிலிருந்து இறக்குமதியான மதவளர்ச்சிக்கு எமது சமயங் களைப் பலி கொடுக்காது, பதிலாக அவற்றைக் காலத்துக்கேற்ற வகையில் சீராக்கி வளர்த்து எமது ஆத்மீக அடித்தளத்தைப் பலமாக்கச் சமயத் தலைவர்கள் உழைத்தனர்.

இதே வேளையிலே தனி மனித சுதந்திரம், நாட்டு விடுதலை பற்றிய புத்துணர்வுகளும் மெல்ல மெல்ல வளரலாயின. மனித விடுதலையும் சிந்தனைச் சுதந்திரமும் பற்றிய எண்ணங்கள் பழைய சமூக சம்பிரதாயங்களை மீறிய சமூகச் சூழல், கலை யிலக்கிய வளர்ச்சிக்கும் வாய்ப்பானதொன்றாயிற்று. அதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியளித்த மத்திய தர வர்க்கத்தின் வளர்ச்சி புதிய கலை இலக்கியப் பரிசோதனைகளுக்கும் களமமைத்தது.

மனிதாபிமானமும் சமத்துவக் கருத்துக்களும் ஓங்கப் பொருளாதார சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராகவும், பெண் விடுதலைக்காகவும் புதிய பரம்பரையினர் குரலெழுப்பினர். மனித குலம் ஏற்றத் தாழ்வுகளும் கட்டுப்பாடுகளும் நீங்கிய தாய் ஆத்மீக பலத்தோடும் உலக வாழ்க்கை வசதிகளோடும் திகழ வேண்டும் என்று மறுமலர்ச்சித் தலைவர்கள் எண்ணத் தலைப்பட்டனர். தற்கால இந்திய மறுமலர்ச்சித் தந்தை எனப் போற்றப்படும், ராஜாராம் மோகன்ராய் (1774—1833) பின் வருமாறுகூறுவது இங்கு கவனிக்கத்தக்கது: "பல்வேறு இனங்களையும் குலங்களையும் கிளைகளாகக் கொண்ட ஒரு மாபெரும் குடும்பமே மனித குல முழுமையும் என்ற முடிவுக்கே சமயம் மட்டுமன்றிக் காய்தலுவத்தலற்ற பொது அறிவும், விஞ்ஞான ஆய்வுகளின் சரியான அனுமானங்களும் இட்டுச் செல்லு மென்பது இப்போது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆகவே, முழு இனத்திற்கும் பரஸ்பர மேன்மையும் மகிழ்ச்சியும் அளிப்பதற்காக, இயன்றளவுக்குத் தடைகள் யாவற்றையும் அகற்றி மனித இணையுறவுக்கு ஒவ்வொரு வகையிலும் உற்சாகமும் வாய்ப்புமளிக்க எல்லா நாடுகளினதும் விழிப்புற்ற மனிதர்கள் விரும்புகின்றார்கள்."

இத்தகைய ஒரு விழிப்பு ஏற்படவும், அடிமை நிலை அகல வேண்டுமென்ற எண்ணமும் தேசிய உணர்ச்சியும் வளரவும் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் தூண்டுதலளித்தது ஆங்கிலேயருடன் நாம் கொண்ட உறவு. இந்த உறவின் விளைவாகப் பெற்ற மறுமலர்ச்சிக் கருத்துக்களின் தாக்கத்தைத் தமிழிலக்கியத்திலும் கண்டு தெளியலாம். தொகுத்துச் சொன்னால், எமது சமயத்தையும் வாழ்வையும் சீர்திருத்திப் பலப்படுத்த வேண்டும். நாடும் மக்களும் விடுதலை பெற்று ஏற்றத்தாழ்வகன்று சர்வதேசச் சமத்துவம் பெற்றுத் திகழ வேண்டும் என்ற கருத்துக்கள் ஒரு கால இலக்கியங்களில் மிகுந்த அழுத்தம் பெறுவதனை—அதாவது மறுமலர்ச்சிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களைப் பரப்பும் சாதனங்களாக இலக்கியங்கள் பயன் படுத்தப் படுவதனை அவதானிக்கலாம்.

இந்தியாவில் 1920க்கும் 1924க்கும் இடைப்பட்ட காலத்தில் காந்தியின் ஒத்துழையாமை இயக்கம் வெகுஜன இயக்கமாக வலுப்பெற்றதை ஒட்டியும் தொடர்ந்தும் தோன்றிய நவசக்தி (1920), ஆனந்தவிகடன் (1926), மணிக்கொடி (1933), தினமணி (1934), கல்கி (1941) ஆகிய இதழ்களில் இந்தியா விடுதலை பெறும் வரை வெளிவந்த புனைகதைகளிலும் கட்டுரைகளிலும் மறுமலர்ச்சிக் கருத் துக்களை பெருமளவிற் காண முடியும். 1943ல் தமிழிசைக்கு மறு மலர்ச்சி தரத் தமிழிசைச் சங்கம் நிறுவப்பட்டதும், மறுமலர்ச்சிக் கருத்துக்களைத் தமிழ் மக்களிடையே பரப்பிய திரு. வி. கலியாண சுந்தர முதலியாரின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா தமிழக முழுவதும் கோலாகலமாகக் கொண் டாடப்பட்டதும் குறுப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகும்.

மறுமலர்ச்சிக் கருத்துக்களும் முயற்சிகளும் இலங்கைத் தமிழரைப் பிணிக்க இந்தியத் தலைவர்களும் இயக்கங்களுமே முக்கிய காரணிகளெனலாம். இந்திய அரசியல், இலக்கிய மறுமலர்ச்சிக்குப் பல வழிகளிற் ஆதாரமாயிருந்த காந்தியும், தாகூரும் முறையே 1921 இலும் 1934 இலும் செய்த இலங்கை விஜயங்களும் அவ்விஜயங்களின்போது ஆற்றிய சொற்பொழிவுகளும் முக்கியமானவை. அவற்றின் தாக்கங் களையும் மறுமலர்ச்சிக் கருத்துக்களையும் 1930 முதல் வெளி வந்த ஈழகேசரியிலும் 1931 முதல் வெளிவந்த வீரகேசரியிலும் காண வியலும். 1938இல் யாழ்பாணத்தில் வித்துவ சிரோமணி சி. கணேசையரின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாச் சிறப் பாகக் கொண்டாடப்பட்டு அன்னாருக்குப் பொற்கிழி வழங்கப் பட்டமை இலங்கை தமிழரிடையே ஏற்பட்ட தமிழ் மறுமலர்ச்சி யுணர்வினைக் காட்டுவதாகும்.

இக்காலப் பகுதியில் மறுமலர்ச்சி என்ற சொல்லும் அடிக் கடி வழங்கப்பட்டது. மறுமலர்ச்சி இலக்கியத்தின் வெள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழைப்பு என்று அறிவித்துக் கொண்டு தொடங்கியது மணிக்கொடி. மறுமலர்ச்சி இலக்கியத்துக்கென்று தொடங்கியது கலாமோகினி. இலங்கையில் 1942இலே மறுமலர்ச்சி என்ற பெயரில் ஒரு இதழ் தொடங்கப்பட்டது. இவ்விதழைத் தொடக்கிய வட்டத்தினரையே இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே மறுமலர்ச்சி எழுத்தாளர் என்று சிறப்பாகக் குறிப்பிடுவர்.

அ.செ. முருகானந்தம், தி ச. வரதராசன், சு.வே., அ.ந. கந்தசாமி, வ.அ. இராசரத்தினம், கனக செந்திநாதன், நாவற்குழி நடராசன், மஹாகவி ஆகியோரையுள்ளடக்கிய இம்மறுமலர்ச்சி எழுத்தாளர் இலட்சிய வேகம் மிக்கோராகவும் மறுமலர்ச்சி காணவேண்டுமென்ற பிரக்ஞை மிக்கவர்களாகவும் காணப்பட்டனர். இவர்களது எழுத்துக்களை மேலோட்டமாக நோக்கும் போது, இவர்கள் தம்மைச் சுற்றியுள்ள மக்கள் மீதும் அவர்களது வாழ்விலும் வரலாற்றிலும் கவனம் செலுத்தினர்கள் என்பதும், அம் மக்களுடைய பழைய நம்பிக்கைகள் சிலவற்றைப் புனராலோசனைக்கு எடுத்துக் கொண்டார்கள் என்பதும், அம்மக்கள் வாழ்வு ஏற்றத்தாழ்வகன்று அழகு பெற்றுப் பலம் பெற்று உயரவேண்டுமென்று விரும்பினர்கள் என்பதும், மனிதாபிமானமும் மனித நல வேட்கையும் கொண்டிருந்தார்கள் என்பதும் புதிய இலக்கிய வடிவங்களையும் பரிசோதனைகளையும் கையாண்டனர் என்பதும் தெளிவாகும். சுருங்கக் கூறுவதெனில், தமிழில் கட்டுக் கிடையாய்க் கிடந்த தேக்க நிலையையும் எம்மக்களின் அடிமை நிலையையும் அறிந்த மறுமலர்ச்சி வேட்கையும் விடுதலை விருப்பும் கொண்ட இவ்வெழுத்தாளர், தாம் பிறந்து வளர்ந்த மண்ணினைத் தனித்துவம் சிதையாது சீர்ப்படுத்துவதோடமையாது, அதற்கு மேற்கிலே தோன்றிய புதிய சிந்தனை ஊற்றுக்களினின்றும் நீர் கொணர்ந்து பாய்ச்சி வளப் படுத்தவும் விழைந்தனர் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிய இலக்கியங்களின் சில பொதுப் பண்புகள்

ஆசிய நாடுகளின் இலக்கியங்களுக்கிடையே காணப்படும் பொதுப் பண்புகளைக் கண்டறியும் வகையிலே திருப்திகரமான ஒப்பியல் அடிப்படையில் ஆய்வுகள் இன்னமும் மேற்கொள்ளப் படவில்லை என்பதை முதற்கண் குறிப்பிடவேண்டும். அதற்குப் பெருந்தடையாக அமைவது மொழி வேறுபாடுகளாகும். மொழிபெயர்ப்புக்களை மட்டும் நம்பி அத்தகைய ஆய்வு களை நிகழ்த்தப்புகுவது உசிதமன்று.

வேறுபட்ட நாடுகளின் இலக்கியப் போக்குகளைச் செவ்வனே அறியாது தனிப்பட்ட சில புலவர்களையோ இலக் கியங்களையோ எடுத்துக் கொண்டு ஒப்பியலாய்வு செய்வதும் சாலாது. ஒவ்வொரு நாட்டினதும் இலக்கிய வளர்ச்சிப் போக்குகளை மட்டுமன்றி, வரலாற்றுச் சமூகப் பின்னணி, அந்நியச் செல்வாக்கு, உள்ளூர் மரபுகள், மொழியியல்புகள், இலக்கியச் சிறப்பினையும் சுவையினையும் மதிப்பிட ஆளப்படும் அளவுகோல்கள் முதலிய பல்வேறு விடயங்களைக் கவனத்திற் கொண்டு நடாத்தப்படவேண்டிய இலக்கிய ஒப்பியலாய்வு தனிநபர்களால் முடியக்கூடியதுமன்று. ஒவ்வோர் இலக்கியத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலும் துறைபோகிய பலரின் கூட்டு முயற்சியின் வாயிலாகவே அது வாய்க்கலாம். எனவே, ஆசிய இலக்கியங்களுக்கிடையிற் காணப்படத்தக்க ஒற்றுமைகள் வேறுபாடுகள் பற்றிய ஆழ அகலமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியமையின் அத்தியாவசியமும், மேற்கொண்டு இங்கு குறிப்பிடப் படுபவை முடிந்த முடிவுகள் அல்லவென்பதும் சொல்லாமலே போதரும்.

ஆசியாவின் இலக்கியப் பாரம்பரியத்தை அல்லது பண்டை இலக்கியப் பரப்பினை நோக்கும்போது, சில பொது வான இயல்புகள் குறிப்பிடத்தக்கவையாகும். ஆசிய நாடுகள் பலவற்றின் இலக்கியங்கள் நீண்ட பாரம்பரியத்தினை உடையவை, அநேகமாகச் சமயச் சார்பு பெற்றவை. பௌத்த மதத்தினதும் இந்து மதத்தினதும் இஸ்லாமிய மதத்தினதும் செல்வாக்கினைப் பரக்கக் காணலாம். புனிதத்துவமும் மனி தாபிமானமும் தர்ம சிந்தையும் நிறைந்த பெரியோர் மக்க ளினதும் இலக்கிய கர்த்தாக்களினதும் கவனத்தைக் கவர்ந் தமையும் கற்பனையைத் தூண்டியமையும் விதந்துரைக்கப்படும். கருணை, தியாக உள்ளம், சமாதான சகவாழ்வு, தன்னலமற்ற சேவை போன்றவை இலக்கியங்களின் பொதுவான இலட்சி யங்களாக அமைவதும் அவதானிக்கப்படலாம். சமூக வாழ்வின் இன்பதுன்ப அனுபவங்களையும் சமூக உறவுகளையும் ஓர் இலட்சிய அடித்தளத்தில் இலக்கியங்கள் பிரதிபலிப் பதையும், அவ்விலக்கியங்களிற் சமூக மனிதாபிமான உணர்வு கள் சிறந்து விளங்குவதையும் சுட்டிக்காட்டும் அறிஞர் அச்சிறப்பியல்புகளே கீழைத்தேயப் பண்பாடுகளின் தொடர் பரு நிலைபேற்றுக்குரிய முக்கிய காரணமென்பர்.

ஆசிய நாடுகளில் இலக்கியம் குறிக்கோளுடைய ஒன்றாகவே கருதப்பட்டது. 'கலை கலைக்காகவே' என்பது போன்ற கோஷங்களுக்கு இங்கு அர்த்தம் வாய்க்கவில்லை. இலக்கிய கர்த்தாக்கள் அழகையும் செம்மையையும் நற் பயனையும் நாடி நின்றனர். சுருங்கக் கூறுவதெனின், இயற் கையோடொட்டி வாழ்ந்து பெற்ற அனுபவங்களையும் இலட்சி யங்களையும் காட்டி நின்ற ஆசிய நாடுகளின் பண்டை இலக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியங்கள், இயற்கையோடும் பிரபஞ்சத்தோடும் இணைந்து வாழ்வதற்கு உறுதி பயப்பவையாகக் கருதப்பட்டன. இன்னொரு வகையிற் சொன்னால், வாழ்க்கை என்ற கலையினை நிறைவுடையதாக்க வல்லவையாக அவை கொள்ளப்பட்டன.

ஆசிய நாடுகள் பலவற்றிற் கலைகள் பல தம்முட் தொடர்பு கொண்டு வளர்ந்தமையும் கவனிக்கத்தக்கது. கவிதை, இசை, ஓவியம், தத்துவம் முதலிய பல்வேறு துறைகளில் ஒருவரே சிறந்து விளங்கியமையும் உண்டு.

ஓசை நயம் மிகுந்த முக்கியத்துவம் பெற்று விளங்கியது. எழுத்து முறை, மொழியமைப்பு, சொல்லாட்சி, கவிதையமைப்பு யாவற்றிலும் ஓசைநயம் நுணுக்கமாகக் கவனிக்கப்பட்டதால், ஆசிய நாடுகள் பலவற்றின் இலக்கியங்கள் பிற மொழிகளிற் செவ்வனே பெயர்க்கப்பட முடியாதவையாக உள்ளன.

கலைஞர்களுக்கு இயற்கைக்கு இகந்த சக்திகளும் தரிசனங்களும் உண்டென்றும் நம்பப்பட்டது. கவிதைக்கு மந்திரசக்தி இருப்பதாகக் கருதப்பட்டது. புலவர், செந்நாப்புலவர் எனப் போற்றப்பட்டமையினையும், அவர் புகழ்ந்தாற் பொலிவு தோன்றும் என்றும் இகழ்ந்தால் எருத்தடங்கும் என்றும் அரசர் நம்பியமையினையும் சங்கத் தமிழ் இலக்கியங்கள் காட்டும். இந்தியாவில் மட்டுமின்றி ஏனைய ஆசிய நாடுகளிலும் அவ்வாறே கருதப்பட்டது. ஆத்மாவைத் தூய்மைப்படுத்தவல்லதாகச் சீனாவிற் கவிதை மதிக்கப்பட்டது. அனுபவ வெளியீட்டுக்குரிய மிக இயல்பான வடிவமாகவும் அது கொள்ளப்பட்டது.

இலக்கியத்துக்கு, சிறப்பாகக் கவிதைக்கு உன்னத மதிப்புத் தந்த ஆட்சித் தலைவர்கள் புலவர்களை ஆதரித்ததோடு அமையாது பல கவிதைகளையும் இயற்றினர். சீனா, இந்தியா, ஜப்பான், கோரியா, தீபெத், வியத்நாம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் அத்தகைய அரசர் பலர் இருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுங் கோலனாக மதிக்கப்பட்ட மஹ்மூத் கஷ்னி கூடத் தன் அரசவையில் 600 புலவர்களை வைத்தாதரித்ததோடு அமையாது, கவிதையினைக் கவனிக்க ஓர் அமைச்சினையே வைத்திருந்தான்.

ஆசிய நாடுகளில் இருந்த கதை கூறும் மரபும் குறிப்பிடத் தக்கது. கதை சொல்பவர்கள் புராண நிகழ்ச்சிகளையும் வரலாற்றுச் சம்பவங்களையும் கதைக் கருக்களாகக் கொண்டாலும் தம் கற்பனைத் திறனால் அவற்றுக்கு நயமூட்டியதோடு பல படிப்பினைகளையும் பொதிந்து பொது மக்களுக்கு அறிவு புகட்டும் காரியத்தையும் நிறைவேற்றினர்.

முன்னோரையும் சான்றோரையும் மரபுகளையும் வரம்புகளையும் சிறப்பாகப் போற்றி மதிக்கும் பண்பினையும் இவ்விலக்கியங்கள் காட்டுகின்றன. பின்னுக்கும் தொடர்பு பேணப்பட வேண்டுமென்பதில் ஆர்வமிருந்ததாகத் தெரிகிறது.

ஆசிய நாடுகளின் இலக்கியங்கள் ஒன்றை ஒன்று பாதித்த வகையினை, சிறப்பாக இந்திய, சீன, ஜப்பானிய இலக்கியங்களின் செல்வாக்கினை, இங்கு விளக்குதல் இயலாத காரியம். ஆயினும், இந்திய இராமாயண மகாபாரதக் கதைகள் தாய்லாந்து, பர்மா, கம்போடியா, மலேசியா, இந்தோனேஷியா முதலிய நாடுகளிற் பரவி அந்நாடுகளின் இலக்கியங்களிலும் இலக்கிய வெளியீட்டு முறைகளிலும் செல்வாக்குச் செலுத்தியமையினைக் குறிப்பிடலாம்.

ஆசிய நாடுகளின் தற்கால இலக்கிய வளர்ச்சி பல பொதுப் பண்புகளைக் காட்டுவதாகும். எந்த ஒரு நாட்டிலும் அதனைத் தற்செயலான தென்பதோ தனிப்பட்டவர்களுக்கேற்பட்ட புதுமை ஆர்வத்தின் விளைவெதன்பதோ சாலாது. பொருளாதார சமூக அமைப்புக்களிலும் உறவுகளிலும் நிகழ்ந்த மாற்றங்களே தற்கால இலக்கியப் போக்கினைப் பிரதானமாக நிர்ணயித்தவை என்பது தவறாகாது. ஆசிய நாடுகளின் இலக்கியங்கள் தம் மரபு வழி ஒதுக்க நிலையினை மீறி உலக இலக்கியங்களுடன் குறிப்பாக ஐரோப்பிய இலக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியங்களுடன் உறவினை வளர்த்துக் கொண்ட போது தோன்றி யதே தற்கால இலக்கியம். இது திடீரெனத் தோன்றியதல்ல. தற்கால இலக்கியத் தோற்றம் நிகழ்ந்த காலப் பகுதியை இரு கட்டங்களாகப் பிரிக்கலாம். மாறுதலுக்கான அத்திவாரம் இடப்பட்டமையினை முதற் கட்டம் எனவும் தற்கால இலக் கியங்கள் உண்மையிலேயே தோற்றம் பெற்றமையினை இரண்டாவது கட்டம் எனவும் கொள்ளலாம்.

முதற்கட்டமான மாறுதல் நிகழ்ந்த காலத்தில் ஐரோப்பிய அமைப்பிலான கல்வி நிலையங்களும் பத்திரிகைகளும் தோன்றி வளர்ந்தன; மேல்நாட்டுக் கல்வியும் சிந்தனைகளும் பரவின; புதியமாற்றங்களை நிலைநாட்டவும் மரபுவழிப் பண்பாட்டைப் பேணவும் இயக்கங்கள் நடைபெற்றன. பழையன கழிதலும் புதியன புகுதலும் நிகழ்ந்த இவ்வேளையிற் கல்வி ஒழுக்க சீர்திருத்தப் பிரசாரங்களும் வாதப் பிரதிவாதங்களும் தவிர்க்க முடியாத வகையில் நடைபெற்றன. ஆக்க இலக்கிய வெளி யீட்டுக்கு வாய்ப்பான வகையில் உரைநடை வளம்பெற்றதே இக்காலகட்டத்தின் முக்கிய பேருகும்.

தற்கால இலக்கியத் தோற்றத்திற் பல ஒற்றுமைகள் காணப்படினும் ஒவ்வோர் ஆசிய நாட்டிலும் வெவ்வேறு காலப் பகுதியில் அது நிகழ்ந்தது. இந்தியாவிலே, சிறப்பாக வங்காளத் திலேயே அது முதலில் நிகழ்ந்ததென்பர். வங்கத்துப் புதுமை வேட்கையும், விழிப்புணர்வும், நவீன இலக்கியப் போக்கும் தமிழ், சிங்கள மக்களையும் தீண்டியும் தூண்டியும் விட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆசிய நாடுகளின் தற்கால இலக்கியப் போக்கின் சில பொதுவியல்புகளையும் முன்னைய இலக்கியப் போக்குடன் அது கொண்ட வேறுபாடுகளையும் சுருக்கமாக நோக்கலாம்.

முன்னர் நாட்டுப் புறங்களைச் சுற்றி நிகழ்ந்த இலக்கிய நடவடிக்கைகள் புதிதாக வளர்ந்த அரசியற் பொருளாதாரச் செல்வாக்கு மிகுந்த தலைநகரங்களுக்கு இடம் பெயர்ந்தன. இலக்கிய ஆக்கத்திற்கும் ஆதரவுக்கும் உறுதியளிப்பதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாகத் தோன்றிய மத்திய தர வர்க்கம் முன்னுக்கு நின்றது. பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இலக்கிய வளர்ச்சியில் முக்கிய இடம் பெற்றன. அநேகமாகச் சமயங்களையும், குழுக்களையும் குலங்களையும் இனங்களையும் சார்ந்து நின்ற நிலையினை விட்டு, இலக்கியம் மனிதனையும், அவனது உளவியல்புகளையும், உலகோடும் சமூகத்தோடும் அவன் கொண்ட உறவுகளையும் பொருளாய்க் கொள்ளலாயிற்று. முக்கியத்துவத்தில் உரைநடை கவிதையை விஞ்சியது. கவிதையே உயர்ந்த இலக்கிய மாகுமென மதிக்கப்பட்ட நிலை மாறியது. நாவலுஞ் சிறுகதையும் செல்வாக்குப் பெற்றன. சீனாவில் நாவல்கள் முன்பே தோன்றி யிருப்பினும் அவை கூடிய மதிப்பும் பிரசித்தியும் பெற்றது இக்காலத்திலேயே. கவிதைத் துறையில் மரபின் தாக்காதிக்கம் மிகுந்திருந்த போதிலும் இக்காலக் கவிதை சாதாரண மக்களை நோக்குவதாகவும் உருவத்தைவிட உள்ளடக்கத்துக்கு அதிக முக்கியத்துவம் தருவதாகவும் மாறுதலுற்றது. இலக்கியங் களிலே தேசியம், தேச ஒற்றுமை போன்ற உணர்வுகள் பிரதி பலிக்கப்படுவதும் இக்காலத்திலேதான்.

இறுதியாக ஒன்றைக் குறிப்பிடவேண்டும். மாற்றங்களை எதிர்த்து நின்றவர்களுக்கும் மாறுதல்களை வரவேற்றவர் களுக்கும் இடையே போராட்டங்கள் நிகழ்ந்தமையினையும் இக்கால ஆசிய இலக்கியங்கள் பலவற்றினூடாகக் கண்டு கொள்ள முடியும். நவீன இலக்கிய வளர்ச்சிக்கு மரபு ஒரோவிடத்துத் தூண்டுகோலாகவும் ஒரோவிடத்துத் தடை யாகவும் அமைந்திருக்கிறது.

எவ்வாறுயினும், காலத்தின் தேவையினை எழுத்தாளர்கள் எவ்வாறு நிறைவேற்றினர்கள் என்பதை இலக்கியம் காட்டும் என்றால், அது ஆசிய நாடுகளின் இலக்கியங்கள் அனைத்துக்கும் மட்டுமின்றி ஏனையவற்றுக்கும் பொருந்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் சினிமாவும் இலக்கியமும்

இலக்கியம் மிக நீண்ட வாலாற்றினை உடையது. கலைகளின் கடைக்குட்டி எனத் தகும் சினிமா அல்லது திரைப்படம் சுமார் எண்பத்தைந்து ஆண்டு வளர்ச்சியினையே கண்டதாகும்; அதன் வரலாறு சிறிதாயினும் சினிமாக் கலையானது வசதியும் வாய்ப்பும் மிகுந்த அற்புதமானதொரு சாதனமாகும். மக்களுடைய அனுபவங்களைச் செம்மைப் படுத்தவும், உணர்வுகளை இதப்படுத்தவும், அறிவினை ஆழமுடையதாக்கவும் சினிமாக் கலை அதிகளவில் உதவத் தக்கதென்பதில் ஐயமில்லை,

தமிழிலக்கியத்தைப் பொறுத்தவரையில் அது இரண்டாயிரம் ஆண்டுகாலப் பெருமை மிகு வரலாற்றினை உடையது. இவ்வரலாற்றின் ஆரம்ப காலமென இன்று கொள்ளப்படும் சங்ககாலத்திலேயே இலக்கியப் புலவர்கள் பல்வேறு வகையினவான வாழ்க்கை அனுபவங்களைத் துலாம்பரமாகவும் துல்லியமாகவும் சித்தரித்திருக்கிருர்கள். தமிழ் சினிமா அறுபது ஆண்டு வரலாற்றினையுடையது ஆயினும் ஒரு நூற்ருண்டுக்கும் அதற்கு உட்பட்டதுமான வரலாறுகளையுடைய நாவல் துறையிலும் சிறுகதைத் துறையிலும் எட்டிய உயர்படிகளைத் தமிழ் மக்கள் சினிமாத்துறையில் எட்டவில்லை என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமாக்கலை சென்ற நூற்றாண்டின் இறுதியில் மேல் நாட்டில் உருவான கையோடு இந்தியாவிலும் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது. அறிமுகமாகிப் பதினைந்து ஆண்டுகளில் அதாவது 1912-இல் இந்தியாவின் முதற் கதைகூறும் பட மான ''புன்டலிக்'' வெளியானது. அடுத்த ஆண்டு வெளியான ராஜா ஹரிச்சந்திரா மிகப் பிரசித்தி பெற்றதாகும். 1919இல் வெளிவந்த கீசகன் வதை தமிழிலான முதற் கதைகூறும் திரைப்படமாகக் கொள்ளக்கிடக்கிறது. இக்காலப் பகுதிவரை வெளிவந்தவை பேசாப் படங்களேயாகும். 1931இல் வெளி யான ஆலம் ஆராவே இந்தியாவின் முதலாவது பேசும் படம்; இந்நூற்றாண்டின் முப்பதுகளின் மத்தியில் தமிழ் உட்பட்ட இந்திய மொழிகள் பலவற்றிலும் பல பேசும் படங்கள் எடுக் கப்பட்டன.

இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் நம்மிடையே திடீரெனக் கட்டியங்கூறாமல் அறிமுகமானது சினிமாக்கலை. அக்கலை யினைப்பற்றி அதற்குமுன் ஒன்றுமே அறிந்திருக்காதவர்கள் வெளிநாட்டவர்களைப் பார்த்துப் புரிந்தும் புரியாமலும் அறிந்து கொண்டும் யூகித்துக்கொண்டும் சினிமாப் படங்களை எடுக்க லாயினர். அவர்கள் அடிபட்டும் ஆழமுயன்றும் ஈட்டிய நுட்பம் இன்று சினிமாவைப் பட்டிதொட்டிதோறும் பரப்பி விரைவாக பொருள்சேர்க்க உகந்த துறை, கவர்ச்சி மிகுந்த துறை, நாட்டின் அரசியலையே பாதிக்கக்கூடிய துறை என்ற பெருமை களையெல்லாம் அதற்கு ஈட்டிக் கொடுத்திருக்கிறது.

கதைகள் மூலம் கருத்துக்களைத் தெளிவாகவும் தீர்க்கமாக வும் பரப்பலாமென்பதைப் பண்டைக் காலத்திலேயே மக்கள் அறிந்திருந்தனர். கதை சொல்லும் வழக்கம் மிகப் பழமை யானது. ஆரம்பத்தில் மனிதர்கள் ஒருவரோடொருவர் நேருக்கு நேர் பேச்சாலும், சைகையாலும் கதை பேசினர். மொழியென்ற சாதனம் வளர்ந்தபோது ஓலைகளில் எழுதிப் பரப்பினர். இலேசாக அக் காரியத்தைச் செய்ய விழைந்து மனப்பாடம் செய்யவும் மனதிற் பதியவும் வாய்ப்பான செய்யுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையினையும், பரதநாட்டியம், பொம்மலாட்டம், தெருக் கூத்துப்போன்ற நடிப்பு உத்திகளையும் கண்டு பயன்படுத்தினர். கட் புலனுகக் காட்டி உணர்த்தக் கருதிக் கதைகளைச் சித்திரங் களாகக் கோயில்களிலும் மக்கள் கூடும் பிற வாய்ப்பான இடங்களிலும் தீட்டினர். அச்சுவாகனம் அறிமுகமானபோது நூல்களும் பத்திரிகைகளும் அக் கைங்கரியத்துக்குப் பயன்பட லாயின. இவ்வரலாற்றில், காட்டப் புகுந்ததைக் கண் முன்னுல் உண்மையாகவே நடப்பது போன்ற மருட்சியுடன் காட்டவல்ல சினிமாக்கலை ஈடும் எடுப்பும் இல்லாததாகும்.

இன்று கூடிய செல்வாக்கும் தாக்கமும் உடைய கலை சினிமாவாகவே விளங்குகின்றது. திரைப்படத்தை அர்த்தமும் அவசியமும் மிகுந்த ஒன்ருகக் கொள்ளும் ஒரு பண்பாட்டில் வளர்ந்த தலைமுறையினை இன்று நாம் பார்க்கிரேம். இன்று இலக்கியம் ஒன்றேனும் அறியாத பலரைக் காண முடியு மாயினும் திரைப்படம் பார்க்காத ஒருவரைக் காண்பது அபூர்வமாகும். தொழில் நுட்ப ஈடுபாடு மிகுந்த இன்றைய நாகரீகத்தில் தொழில் நுட்ப வளர்ச்சியின் பெறும்பேருன சினிமாவுக்குத் தனி மதிப்புண்டு. புறத்தோற்ற விபரங்களையும் நுணுக்கமான இயக்கங்கள் செயற்பாடுகளையும் கட்புலனுக நேருக்கு நேர் காட்டும் சக்தி சினிமாவுக்கு அற்புதமாக வாயத் திருக்கிறது. இன்று நம்மை வெகுவாகப் பாதிக்கும் விஷயங் களைத் தாமதமின்றி வேகமாகக் காட்ட வல்லது சினிமா. உலகு சுருங்கி வரும் இக்காலத்தில் பிற தேசக் காட்சிகளையும் சம்பவங் களையும் அனுபவங்களையும் மட்டுமன்றி எம்மவர் கதைகள் கனவுகளையும் ஏக காலத்தில் ஏராளமானவர்கள் பல்வேறு திசைகளிலும் பார்க்கத் தருவது சினிமாவின் மயக்கும் வல்ல மைக்கு மற்றுமொரு காரணமாகும். கலைகளுள் இளமைத் துடிப்பு மிகுந்தது—புதுமை தவழுவது என்பதுவும் கூட அதன் வசீகரத்துக்குக் காரணமாகலாம்.

இலக்கியம் வேறு, சினிமா வேறு. ஆயினும், சினிமாவின் நயத்தை இலக்கியத்திலும் இலக்கியத்தின் நயத்தைச் சினிமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலும் காண முடியாதென்றில்லை. இரண்டினையும் மேலெழுந் வாரியாக ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, இலக்கியம் பழையது. சினிமா புதியது. இலக்கியம் தனியொருவரின் கற்பனைத் திறனிலும் முயற்சியிலும் உருவாகுவது. சினிமா கூட்டு முயற்சியால் ஆவது. தயாரிப்பாளர், இயக்குநர், கதாசிரியர், பிரதியமைப்பாளர், நடிகர், ஒலிப்பதிவாளர், ஒளிப்பதிவாளர், இசையமைப்பாளர், படப்பிடிப்பாளர் எனப் பலபேர் ஈடுபடுவது சினிமா. பலர் ஒன்று கூடுமிடத்து நன்மையாகவும் அமையலாம்; ஆளுக்கொரு திக்கில் இழுக்கும் ஆபத்தும் விளையலாம்.

இலக்கியத்தையும் சரி; சினிமாவையும் சரி. கலையாக மட்டும் கொள்பவர்களும் உண்டு, கருத்துக்களைப் பரப்பும் ஊடகமாகக் கொள்வாரும் உண்டு. தொழிலாகக் கொள்பவருமுண்டு. வியாபாரமாகக் கொள்பவருமுண்டு. சினிமாத் துறையைப் பொறுத்த வரையில் அதனைத் தொழிலாகவும் வியாபாரமாகவும் கொள்வோரின் தேவைகளும் ஆதிக்கமுமே அதனை வெகுவாகப் பாதிப்பது சொல்லாமலே போதரும். இலக்கியத்தைப் படிக்கவோ கேட்டு விளங்கவோ கூடியவர்கள் தம் அகக்கண்களாலும் அனுபவ நாளங்களாலும் சுவைக்கலாம். சினிமாவைப் படிப்பறிவற்றவரும் கட்புலனுகக் கண்டு அதிக பிரயத்தனமின்றி ரசிக்கலாம். உண்மையில் நடப்பது போன்ற மருட்சி சினிமாவில் பன்மடங்கு அதிகமாகும். அந்த வகையில் கற்பனையையும் வார்த்தைகளையும் மூலபலமாகக் கொண்ட இலக்கிய கர்த்தா, அவற்றைப் புரிந்துகொள்ளத்தக்கவர்களை மனதிற் கொண்டு இலக்கியத்தைப் படைக்கலாம். சினிமாத் தயாரிப்பாளன் பல்வேறு தரப்பட்ட பல்வேறு சுவைப்பட்ட வெகுசன ரசனையைக் கருத்தில் கொள்கிருன். இலக்கியத்தில் கதாநாயகன் ஓங்கியமைவது சிருஷ்டிகர்த்தாவின் திறனுலேயே. ஆனுல் எங்கள் திரைப்படங்களில் பலவிடத்துத் தயாரிப்பாளர், இயக்குநர், கதாசிரியர் முதலிய அனைவரையுமே கதாநாயகர்கள் அமுக்கி விடுவதுண்டு. இலக்கிய வெளியீட்டுக்குக் குறைந்த அளவு மூலதனம் போதும். ஆனுல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமாவுக்குப் பெரும் மூலதனம் வேண்டிக்கிடக்கிறது. சுயத் துவத்தையும், ஆத்ம பலத்தையும், கொண்ட குறிக்கோளின் மீதான நம்பிக்கையையும் இலக்கியத் துறையினர் பலர் இழக்காமல் விளங்குவதற்கும், சினிமாத்துறையினர் பலர் இழந்து நலிவதற்கும் எமது சமுதாய அமைப்பில் முக்கியத்துவம் வாய்ந்த காரணமாக இருப்பது இந்த மூல தனப் பிரச்சினையே. போட்ட முதலைத் திரும்பப்பெற என்று சொல்லிக்கொண்டு தான் பெரிய நட்சத்திரங்கள், பாட்டு, சண்டை, நகைச்சுவை, பக்தி, பாலியற்கவர்ச்சி, சோகம், சீர்திருத்தம் இத்தியாதிகளைச் சேர்க்கும் வாய்ப்பாட்டுப் படங்கள் வருகின்றன.

குடும்பப்படம், சரித்திரப்படம், புராணப்படம் என்று ஒவ்வொன்றுக்கும் தனித்தனிவாய்பாடுகள் அமைந்துவிட்டன. புதுமைகள் என்று சொல்லிக்கொண்டு சமுதாயமனித ஒழுக்கப் பிறழ்வுகளைச் சித்தரிக்க எத்தனிக்கும் சினிமாக்களும், சமுதாயப் பரிவும் பார்வையும் அற்றவிடத்து, வருவாயைப் பெருக்க உபாயம் உரைக்கும் புதியதொரு வாய்பாட்டுக்கே வழிவகுப் பது கண்கூடு. அத்தகைய வாய்ப்பாட்டுச் சினிமாக்களின் பாதிப்பினை வெகுஜனத் தமிழிலக்கியத்துறையிலும் பரக்கக் காணலாம். எவ்வாறாயினும், மனிதனையும் அவனது வாழ் வையும் புரிந்துகொள்ளவும், வளப்படுத்தவும் மனித ஜாதியின் தன்மையையும் போக்கையும் மாற்றியமைக்கவும் இலக் கியத்தையும் சினிமாவையும் கையாளமுடியும்.

சினிமாத்துறையின் வாய்ப்புக்கள் பற்றி விசாரித்து ஆராய்ந்தவர்கள், பெறுமதி வாய்ந்த செய்திகளைச் சிறுவர் களுக்கு உணர்த்தச் சினிமாவைப் போல வேறெத் துறை யாலும் இயலாது என்றும், இலக்கியச் சிறப்புடைய கதைகளை சினிமாவாக்குவதுஎல்லோருக்கும் நன்மை தருவதாகும் என்றும் கூறியுள்ளனர். இந்த வகையிலும் தமிழ் இலக்கியத்தைத் தமிழ்ச் சினிமா அண்மிக்கும் காலம் அண்மையில் இருப்ப தாகத் தென்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் படைப்புச் சினிமாவாகும்போது தன் எண்ணக் கருத்துக்கள் செவ்வனே புலப்படாதவிடத்து இலக்கியகர்த்தா சினமடைவான். மக்கள் மத்தியிலான வரவேற்பைப் பற்றியே சினிமா த்தயாரிப்பாளன் கவலைப்படுவான். ஹொலிவூட்டின் ஆரம்பகாலங்களில் இலக்கியகர்த்தாக்கள் பலர் உதாசீனப் படுத்தப்பட்டதைப் பற்றி Eleanor Glyn போன்ற விமர்சகர் விபரிப்பர். ஸ்டுடியோக்களில் கண்டவர் கைகளெல்லாம் பட்டுக் கதைகள் சீரழிந்ததையும் சில இலக்கியங்கள் சினிமாக்களாகிய போது இரண்டுக்கும் இடையில் தொடர்பே காணப் படாமற் போனதையும் பற்றி அவர் கூறுவர். தமிழ்ச் சினிமா உலகம் புதுமைப்பித்தன், பாரதிதாசன், மு. வரதராசன், அகிலன் போன்றோரின் கால்களை வாரிவிட்டமையும் எண்ணிப் பார்க்கப்பட வேண்டியதாகும்.

இந்தியாவிலே வங்காளத்திலும் மலையாளத்திலும் பல இலக்கியங்கள் வெற்றிகரமாகத் திரைப்படங்களாக்கப்பட்டுள்ளன. 1936 இல் சரத்சந்திரரின் தேவதாஸ் சிறந்த வங்காளச் சினிமாவாயிற்று. சத்யஜித்ரேயின் பதர்பஞ்சலி, அபராஜிதோ, அபு சன்சார் ஆகியனவும் இலக்கியத்தினடியாக உயிர்த்துச் சர்வ தேச பரிசில்கள் பெற்றவையே. மலையாளத்தில் வந்த இருட்டுண்டே ஆத்மா, செம்மீன், நகரமே நன்னி முதலிய சிறந்த சினிமாக்கள் சிறந்த இலக்கியங்களாகும். வங்காள, மலையாள சினிமாத் தயாரிப்பாளரின் சமுதாயப் பிரக்ஞைக்கும் படைப்பாற்றலுக்கும் சான்றாக அவர்கள் இலக்கியங்களைச் சினிமாக்களாக்கிய சிறப்பு விளங்குகிறது.

இரு துறைகளினதும் வாய்ப்புக்கள் குறித்து ஆராய்ந்தவர்கள் சினிமாவுக்கும் இலக்கியத்துக்கும் இடையில் உறவு வலுப்பது நல்லதென்பர். அவ்வாறாயின் சினிமாத் தயாரிப்பாளர் சமூக நடப்பியல்போடு நெருங்கி வருவதும், தமக்குப் பிடித்த இலக்கியங்களை ஜீவத்துடிப்புடன் காண விழையும் கற்றறிந்த பார்வையாளரின் மதிப்பினையும் ஆதரவையும் பெறுவதும் சாத்தியமாகுமென்றும் கருதப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகிறது. ஆனால், சிறந்த ஓர் இலக்கியத்தைச் சினிமாவாகத் தயாரிக்க முனைபவர் சவால் ஒன்றினை ஏற்கத் தயாராக வேண்டும். சினிமாவுக்கு ஏற்ற கதையினைத் தெரிந் தெடுப்பதும் இலேசானதல்ல. சினிமா படிமங்களைக் கையாண்டு கட்புலனாகச் சித்திரிப்பது. இலக்கியம் வார்த் தைகள் வாயிலாக அறிவானுபவத்துக்கு விருந்தளிப்பது. இரண்டும் இணைவது அபூர்வமெனச் சிலர் கருதுவராயினும், அவை ஒன்றையொன்று சிறப்பிப்பதாகலாம். சினிமாவைச் செவ்வனே நயப்பதற்கு இலக்கியப் பயிற்சி உதவலாம். இலக்கியங்களின் புறத்தோற்றக் காட்சி உருவகங்கள் மெருகு பெறச் சினிமாப் பயிற்சி உதவலாம். அத்தகைய ஒரு சிறப்பினைப் புதுமைப் பித்தனின் துன்பக் கேணி போன்ற கதைகளில் அவதானிக்கலாம்.

தொகுத்து நோக்குமிடத்துச் சிறந்த ஓர் இலக்கியம் சிறந்த சினிமாவாகவேண்டுமாயின், அவ்விலக்கியத்தின் உட்பொருளைக் கிரகித்து வெளியிடத்தக்க ஆற்றல் மிக்க சினிமாத் தயாரிப்பாளனும் நயக்கும் மனப்பாங்குடைய பார்வையாளரும் தேவை. இருதுறைகளுக்குமிடையிலான முரண்பாட்டுக்கு வெகுஜன நுகர்வுக்குரிய விற்பனைப் பண்டங்களை உற்பத்தி செய்வனவாய் அவற்றைக் கருதும் நிலையும் முக்கிய காரணமாகும். பல இலக்கிய கர்த்தாக் களைப் போலவே, சினிமாக்கலையினைக் கண்டு வளர்த்தவர் களும் அதனைப் பயன்மிகு கலையாக வளர்க்க விரும்பின ரேயன்றி, அதன் வியாபார சாத்தியக் கூறுகளைக் கவனத்திற் கொள்ளவில்லை. தமிழ்ப் படவுலகினைப் பொறுத்தவரையிற் பல ஆண்டுகளுக்குமுன் பாரதிதாசன் கேட்டதன் அர்த்தம் இன்றும் அதிகம் குறைந்துவிடவில்லை. அவர் கேட்டது:

''பாமர மக்கள் மகிழ்ந்திட வைத்தல்
படங்களின் நோக்க மெனில்
நாமம் குழைத்திடவோ அறிவாளர்கள்
நற்கலை கண்டார்கள்?''

—●—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01 DEC 2021
LIBRARY
704346
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப்
புத்தகாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org